உ
சக்தி துணை

# மஹா கும்பாபிஷேக விழா

# சிறப்பு மலர்



ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

திருக்கோணமலை.

06-02-80

University of Jaffna
235.305
TIR
183626(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிராமி அந்தாதி

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வவடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

235.305
TIR AR
2004

உ
சக்தி துணை

திருக்கோணமலை

# ஸ்ரீ பத்திரகாளி கோவில்

## மஹா
# கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர்

06 - 02 - 80

வெளியீடு :
ஆதீனகர்த்தா,
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருக்கோணமலை.

University of Jaffna
183626
Library

ARCHIVES
183626

அச்சுப்பதிவு:
சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.

183626
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிடம் நீ சென்று கேள்

இராகம்: சண்முகப்பிரியா　　　　　　　　　　　　　　தாளம்: ஆதி

பல்லவி

சோர்வின்றிச் சேர்மனமே - பத்திரகாளித்
தாயிடம் நீ சென்று கேள் மனமே

அனுபல்லவி

நினைத்திட்ட காரியம் நிறைவேற்றி வைப்பாள்
அனைத்துக்கும் வித்தவள் அகிலத்தின் முத்தவள்

(சோர்வின்றிச்)

சரணம்

சார்ந்தவர் தம்மனச் சஞ்சலந் தீர்ப்பவள்
சேர்ந்தவர் உள்ளத்தைச் சிம்மமாய்க் கொள்பவள்
வீழ்ந்தெழும் அன்பர்க்கு விடுதலை தருபவள்
நேர்ந்திடு வார்துயர் நிர்மூலமாக்குவள்

(சோர்வின்றிச்)

சிவயோகச் செல்வன் சாம்பசிவம்
பண்பாட்டுச் செயலாளர்
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேன்சிந்தும் மலரில் . . . .


1. அன்னையின் அருட்பிரசாதம்
2. ஆசியுரை — ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ
3. ஆசியுரை — பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
4. தருஞ்சக்தி — பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை
5. வாழ்த்துரை — இரா. சம்பந்தன்
6. சக்தி வழிபாடு — ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
7. ஸ்ரீ பத்திரகாளி தேவி — பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்
8. அவளின்றி ஓரணுவும் அசையாது — பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர்
9. கோணமலையாள் — சி. சுப்ரம்மண்யக் சாஸ்திரிகள்
10. அம்பிகையின் கடைக்கண் நோக்கு — பூரண தியாகராஜக் குருக்கள்
11. ஸ்ரீ பத்திரகாளி தேவியின் பெருமை — சோ. சுப்பிரமணியக் குருக்கள்
12. KOTTRAVAI — Dr. S. Sathiamoorthy
13. கொற்றவை — பேராசிரியர் டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி
14. அர்ச்சனைக்குரிய நாமங்கள்
15. சிவசக்தி — சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
16. சக்தியின் வடிவங்கள் — பூரண சண்முகரத்தினக் குருக்கள்
17. சைவக்கிரியைகள்பற்றிச் சிலவார்த்தைகள் — சிவஸ்ரீ தி. பொன்னம்பலவாண தேசிகர்
18. இராஜேந்திரன்காலக் கல்வெட்டு — கலாநிதி செ. குணசிங்கம்
19. அற்புதாம்பிகை — பிரம்மஸ்ரீ எஸ். குகானந்தசர்மா
20. சக்தி — டாக்டர் சி. அருள் இராமலிங்கம்
21. வாராதிருந்தால் — வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன்
22. அரசியல் ஞானி ஆத்மீக ஞானியாகிறார் — வே. வரதசுந்தரம்
23. அகிலமெல்லாம் அருள்சுரக்கும் ஆதி ஸ்ரீ பத்திரகாளி — முகாந்திரம் சி. முத்துக்குமாரு
24. அற்புதம் நிறைந்த பத்திரகாளி அம்மன் — பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
25. தேர்த்திருப்பணி ஒரு புனிதமான பணி — சி. குருநாதன்
26. தேவாரம் பெற்ற திருக்கோணமலையில் கோயில்கொண்டெழுந்தருளி அடியார்க்கருளும் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் — ச. சின்னத்தம்பி ஆசிரியர்
27. கௌரி நோன்பு — பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திரசர்மா
28. காளி கலிமாலை — சமூகப் புலவர் பெ. பொ. சிவசேகரனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீறில்லா நெற்றி பாழ். நெய்யில்லா உண்டி பாழ் ஆறில்லாவூருக் கழகு பாழ் . . .**

என்றுமட்டும் கூறிவிடாமல் கோயிலில்லாவூரிற் குடியிருக்க வேண்டாம் என்றும் வலியுறுத்திவிட்டுப் போந்தாள், அந்தக் கிண்டலுக்குப் பெயர்பெற்ற கிழட்டுத் தமிழ்ச்செல்வி. அதற்கிணங்க வரலாற்றுப் புகழ்படைத்த கோணமாமலையின் கண்ணே கோயில்கொண்டெழுந்தருளி கொற்றவையென்றும், துர்க்கையென்றும், மாரியென்றும், பத்திரகாளியென்றும் இன்னும் காமாட்சி, மீனாட்சி, அபிராமி போன்ற பற்பல நாமங்களைப் பூண்டு அடியவர்களைப் புரக்கும் அன்னையாம் ஆதிபராசக்திக்கு விழாவெடுத்து பக்தர்களின் காணிக்கையாக அன்னையின் புகழ் பாட நறுமணம் கமழும் மலர்களை மாலையாக்கி தாயின் பாதங்களில் அணிவித்துள்ளார்கள். இம் மலர்மாலையை அடியார்கள் அன்பர்கள் யாவரும் முகர்ந்து பார்த்து, அதன் சுகந்தத்திலே பேரின்பமடைவார்கள் என்ற துணிபில் மீண்டும் அவளருள்பெற இப்படியான விழாக்கள்பல எடுக்க எல்லாம்வல்ல சக்தியின் அருள் வேண்டி இறைஞ்சுகின்றோம். அன்னை பராசக்தி சரணம்.



**சாந்தி அச்சகம்**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கற்சிலைக் குள்நிற்கும் காளிகா தேவீ கனவினிலே
அற்புத மாய்த்தோன்றும் அம்பிகை யேகோணை யம்பதிவாழ்
நற்றவத் தோர்போற்றும் ஞானக் கொழுந்தே நளிர்கமலப்
பொற்கொடி யேபுரம் மூன்றும் எரித்தாளே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்ரீ பத்திரகாளி கோவில் மூலஸ்தான அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில் மறையுண்டு கிடந்த கிடாரத்துள் கண்டெடுக்கப்
பட்ட பத்திரகாளி அம்பாள் விக்கிரகம்
(காளிகோவில் உற்பத்திக்கு மூலகாரணமாக உள்ளது)



அம்மன் இருந்த வெண்கலக் கிடாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிதாக அமைக்கப்பெற்ற நிர்த்தமண்டபத்தின் அழகுறு தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான ஆதீனகர்த்தா
பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள்



திருக்கோணமலை
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
ஆதீனகர்த்தாவின் ஏகபுத்திரன்
பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திர சர்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையின் அருட்பிரசாதம்

''ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் பத்திரகாளி காயை நம''

திருக்கோணமலையின்கண் கோயில்கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் சித்திரத்தேர் உருவாகிய காலத்தில் ஒரு மலர் வெளியிடவேண்டுமென்று எண்ணிய எண்ணம், அம்பாளின் சம்புரோட்சண மகா கும்பாபிஷேகத்தை அடுத்து வெளியாவதன்மூலம் நிறைவேற அம்பாள் திருவுளம் கொண்டாள்போலும். அதன்பலனே இன்று உங்கள் கரங்களில் விளங்கும் இம்மலர். சித்திரத்தேர் சிறப்பு மலராக வெளிவரவேண்டியது கும்பாபிஷேகவிழாச் சிறப்பு மலராக வெளிவருகின்றது. திருக்கோணமலையின் சக்திப்பிழம்பாய் — தீராதநோய் தீர்க்கும் தெய்வமாய் — பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று பயபக்தியுடன் வணங்கும் பராசக்தியாய்- எந்நாளும் குறையாத மாலை மேனியளாய்-புஷ்பவல்லியாய்-பக்தர்கள் கண்மழை பொழிந்து பிரார்த்திக்கும் பத்திரகாளியாய் விளங்கும்அன்னையின் அருமைபெருமைகளை எடுத்துக்காட்டும் கண்ணாடியாய் இம்மலர் மிளிர்வதை வாசக நேயர்கள் கண்டுகொள்வார்கள். இவ்வரிய கும்பாபிஷேகச் சிறப்பு மலரை ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் திருக்கரத்தில் காணிக்கையாகவைத்து வணங்கி அன்னையின் அருட்பிரசாதமாக வழங்குகின்றேன். இங்ஙனம், ஆதீனகர்த்தா.

ஸ்ரீ பத்திரகாளி
அம்பாள்
தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமஸ்தே புவனேஸ்வரி நமஸ்தே ப்ரண வாம்பிகே
சர்வ வேதாந்த ஸம்சித்தே நமோ ஹ்ரீங்காரரூபிணி

## ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

பக்தர்கள் மிகவும் உரிமை பாராட்டி காளி ஆச்சியென்று அழைத்துவரும் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் பிரத்தியட்ச சக்திவாய்ந்த காளிபீடங்களில் முதன்மை வாய்ந்தது. இதன் அற்புதகரமான விக்கிரக சைதன்ய சக்தியைப் பற்றி ஆண்டுதோறும் இவ்வாலயத்தில் நடைபெற்றுவரும் கௌரிவிரத நோன்பின் முடிவில் "காப்பு" (தேவியின் சைதன்ய சக்தியால் உருவேற்றப்பெற்ற சிவப்பு நூல்) எடுக்கும் வைபவ தரிசனம் பெற்ற புண்ணியர்கள் உணர்ந்திருக்கின்றார்கள். தேவியின் அருட்சக்திவாய்ந்த திருக்காப்பு எடுக்கும் வேளையில் அநேகாயிரம் பக்தர்கள் மெய்மறந்து நின்று வழிபடும் அபூர்வக்காட்சி மனோதீதமானது. காளி ஆச்சியென்றால் ஆஸ்திகர்களுக்கு மாத்திரமல்ல நாஸ்திகர்களுக்கும் உள்ளூரப் பயமும் பக்தியும் வரும்.

ஆலயமும் ஆலய கைங்கரியங்களும் எவ்விதம் நிர்வாகம் செய்யப்பட வேண்டும் என்பதற்கு இவ்வாலய நடைமுறைகள் வழிகாட்டியாக இருக்கின்றன. நித்திய நைமித்திய பூஜைகள் விஷேட காலங்களில் நடைபெறும் உற்சவங்கள் - அருள்சுரக்கும் லட்சார்ச்சனைகள் ஆலயம் க்ஷீணதசையடையாமல் காலாகாலத்தில் செய்யப்பட்டு வரும் ஜீர்ணோத்தாரண திருப்பணிகளும், கும்பாபிஷேகம் முதலிய விஷேச கிரியைகளும் ஆலய கைங்கரியங்களும் முறைதவறாமல் நடைபெற்றுவருகின்றன. இது ஆலயபக்தர்களுக்கு மாத்திரமல்ல ஹிந்துமத தர்மங்களுக்கே பேரும்புகழும் தரக்கூடியது.

இந்த ஆலய தர்மங்களை சீரும் சிறப்புமாக அடக்கமாய் நின்று செயல்படுத்திவரும் சத்தியந்தன் பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த குருக்கள் அவர்கள் தேவியின் சம்பூர்ண அனுக்கிரகம் பெற்றவராவார். அவருடைய ஆலய தர்மம் தவறாத நிர்வாகத்திறமை பக்தர்கள் அனைவருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. அவருடைய இத்திருப்பணித் தொண்டு தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு பார்வதி பரமேஸ்வர கடாட்சம் என்றும் இருப்பதாக.

பல்லாண்டுகளாக திருக்கோணமலை மக்களுக்கு பல காலகட்டங்களில் நிகழ்ந்த பேராபத்துகளிலிருந்தெல்லாம் பாதுகாத்துவளர்த்தெடுத்த தாயினும் சாலச்சிறந்த நமது ஸ்ரீ பத்திரகாளி அம்மையின் அருள் மேலும் மேலும் கண்ணை இமை காப்பதுபோல் நின்று அனைவரையும் பாதுகாத்து புருஷார்த்த தர்மங்களையளித்து வாழவைப்பதாக.

"தேவி ஸ்மரணம்"

சிவயோக சமாஜம்,
பிரதான வீதி, திருக்கோணமலை.

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா சிரோமணி

## பிரம்மஶ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்

அவர்கள் வழங்கிய

# ஆசியுரை

அம்பிகை துணை முன்னிற்க,

உலகத்தின் கண்ணே வஞ்சகம், பொறாமை, அகங்காரம், அவா, வெகுளி, துன்பம், வறுமை, நோய், பசி, தாகம், மகிழ்ச்சி என்னும் அலைகளில் அடிபட்டுத் தேறிக் கரையேறி வாழ்வு பெறுதற்பொருட்டே திருவுருவ வழிபாடுகளையும், இந்து ஆலயங்களையும், சமயநெறி ஒழுக்கம் ஆகிய வழிகளையும் நம்முன்னோர்கள் அமைத்து வைத்தனர்.

வேதம், ஆகமம், புராணம், சோதிடம், காவியம், நாடகம் என்ற நிலையில் சமயத்தையும், சமயத்தின் வழிபாடுகளாகிய கிரியை, சரியை, யோகம், ஞானம் ஆகிய நிலையை, உலகில் ஆன்மகோடிகள் உணர்ந்து உய்வுபெற உயர்ந்த நிலையை, பக்தியின் உயர்வால் எய்தும் உத்தமநிலையை - முத்தி நிலையை நாயன்மார்கள் உவந்தளித்த புராணங்கள்மூலம் நாம் அறிகிறோம்.

நாம் வாழும் பூமிக்கு அதிபதி பராசக்தி - பூமாதேவி. நம் உயிர் வாழ்வுக்கு உறுதுணையாக உணவை அளிப்பவள் தாய். எம்மைப் பெற்றெடுத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தவளும் தாயே.

தனித்திருந்து சிவம் இயங்காததுபோல எமக்கு உடலை இறைவன் தந்தார்; உயிரியங்குஞ் சக்தியை அன்னை தந்தாள்.

அன்னை பராசக்தியின் பெருமையை எம்மால் எடுத்துக்கூற முடியாது, எமக்கு அருகதையும் போதாது.

அன்னை ஜெகன்மாதா ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டே கௌரி, பார்வதி, காமாட்சி, விசாலாட்சி, மீனாட்சி, உமா, காத்தியாயினி, காளி, துர்க்கா, சரஸ்வதி, லட்சுமி, மனோன்மணி எனப் பலவித மூர்த்தங்களாகப் பரந்து விளங்குகிறாள். அன்னையின் பெருமையை எளிதில் நாம் அறிய முடியாது. தேவி பாகவதம், தேவிமகாத்மியம் முதலான நூல்களை வாசித்து அறிந்தால் அன்னையின் அருமை - பெருமைகளை அறியலாம்.

கூறுதற்கரிய அரும்பெரும் அருட்சக்தி பொருந்திய வடிவில் தெக்ஷண கைலாயமெனப் பெரிதும் பெயர்பெற்ற திருக்கோணமலைப்பதியில் சகல ஆன்ம கோடிகட்கும் அருள்நல்கும் அன்னை பராசக்தி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் உறையும் ஆலயம் புனராவர்த்தனஞ் செய்யப்பெற்று உன்னத விமானம் உயிரோவிய சிற்பக் கலைகளுடன் திகழும் அமைப்பில் மங்கலகரமான சித்தார்த்தி வருடம் தைத்திங்கள் 23ம் நாள் புதன்வாரம் அஸ்த நட்சத்திரம் கூடிய காலை 9-30 மணிமுதல் 10-30 மணிவரையில் தேவர்கள் அனுக்கிரகத்தைத் துணைகொண்டும், பக்தகோடிகளின் பரவச பக்திப் பிரவாகத்தை அடிப்படையாகக்கொண்டும் மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா நடைபெற்றது.

இவ்விழாவை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இந்த கும்பாபிஷேக விழாச் சிறப்புமலர் பக்தகோடிகளின் மனதில், இல்லங்களில் ஒளிவிடவும், நறுமணம் நிறைந்த வாடாத மலராகத் திகழவும் இறைவியின் பாதாரவிந்தங்களைத் தியானஞ் செய்து அம்பிகையிடம் வேண்டுதல் புரிந்து, இந்த மலரானது இந்துக்கள் இல்லத்தில் இடம்பெறவேண்டுமென அம்பிகையைப் பிரார்த்தனை செய்து ஆசிகூறுகிறேன்.

**பிரம்மஶ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தரும் சத்தி

'தன்னிலேமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்.'

திருவருட்பயன்

'தரும் சத்தி' - உபகரிக்கும் சத்தி - உயிர்களுக்கு உபகரியாம லிருக்கமாட்டாமை பராசத்தியாகிய தேவியின் இயற்கை.

## தேவி.

கேவலாவஸ்தையில் தாக்ஷாயணியாயிருந்தும் சகலாவஸ்தையில் இமாசல தவக்குமரியாயிருந்தும், உயிர்களுக்கு உய்தி அருளுகின்றாள்.

சுத்தாவஸ்தையில்,

தோடுடைய செவி பிரகாசிக்க, இறைவனேடெழுந்தருளி பரிபக்குவம் எய்திய ஆன்மாவைத் தமது மடிமீதிருத்தி, பரிசுத்த சிவஞானமாகிய திருமுலேப்பாலேச் சுரந்தருளுவாள்.

கேவலம் முதலிய மூன்று அவஸ்தைகளிலும் தேவியின் மூவகை அனுக்கிரகமும் ஒரேசமயத்தில் நடந்துகொண்டிருக்குமென்பது சிந்தனேக்குரியது.

தேவியின் மூர்த்தபேதங்கள் அநந்தம். தேவாரம் பெற்ற மகிமைவாய்ந்த திருத்தலமாகிய

திருக்கோணமலேயில்

பத்திரகாளியாய் அருள்மழை பொழிந்தருளுகின்ருள்.

நாமெல்லாம்
தேவியின் அருள்மழையில் முழுகுதற்குப் பாத்திரமாகும் பொருட்டுத் தவம் செய்வோமாக.

பத்திரகாளியம்மையின் பாதகமலங்களுக்கு வணக்கம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பாபிஷேகம்

யோகிராஜ் சுவாமி ஸச்சிதானந்தா

எங்கும் வியாபித்துள்ள கடவுளின் அருட்சக்தியைப்பெற ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது.

இறைவனுடைய தெய்வீகசக்தி எங்கும் நிறைந்திருக்கிறது. பூரணப் பொருளாய் அச்சக்தி எங்கும் நிறைந்திருப்பினும் இலகுவில் அதை எல்லோராலும் பெற்றுக்கொள்ளமுடிவதில்லை.

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் தெய்வீகசக்தி ஆலயத்தில் சேகரிக்கப்பட்டு பத்தர்களுக்கு பயன்படுகிறது.

ஆலயம் சிற்பாசாரியரின் திட்டப்படி அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது. கும்பாபிஷேகத்தின்போது யாகசாலையில் செய்யும் வேத மந்திரங்களின்மூலம் ஆலயத்துக்குரிய சக்தியைப் பெறுகிறோம். யாகங்கள் கும்பாபிஷேகங்கள் மூலம் மூர்த்தியில் தெய்வீகசக்தி நிரப்பிவைக்கப்படுகிறது.

யாகசாலையில் நீர் நிரம்பிய கலசங்கள் இருக்கும். கலசங்களில் அந்தணர்களின் வாக்கு சக்தியை நிரப்புகிறது. கலசத்தில் இருக்கும் சலத்திற்கு ஜெபத்தினது ஒலி அலைகளை விரைவில் ஈர்க்கும் தன்மை உண்டு. வெள்ளி, தங்கம், தாமிரம் என்பவற்றினாலான கலசங்களுக்குள் இருக்கும் தண்ணீருக்கு இச்சக்தியைப் பெறும் வாய்ப்பு மிகவும் அதிகம். இந்த உண்மையை அறிந்தே ஆசாரியர்கள் யாகசாலையில் தாமிர கலசங்களில் நீர் வைத்து ஜெபம் செய்கின்றனர். அத்துடன் கலசங்களை சுற்றிலும் தானியங்களை முளைக்கச்செய்து பசுமையை மேலும் கலசத்திற்கு ஊட்டி வேதமந்திரங்களை ஓதுகின்றனர். யாகசாலையில் தேங்கும் ஒலிச்சக்தியை தங்கம் அல்லது வெள்ளிக் கம்பிகள்மூலம் கல்லாயிருந்த மூர்த்திக்கு அனுப்புகின்றனர். கும்பாபிஷேகத்தின் போது உருவேற்றப்படுகின்ற தெய்வீக சக்தியினாலே சிற்பியினால் செய்யப்பட்ட வெறும் சொரூபம் வேதமந்திர சக்தியைப்பெற்று பூரணப்பொருளாக அருள்கொடுக்கும் மூர்த்தியாக அமைகிறது. தங்கம் அல்லது வெள்ளியில் செய்த யந்திரத் தகடுகளிலும் இச்சக்தியைப் பாய்ச்சி மூர்த்திகளுக்கு அடியில் வைக்கின்றனர். அருள் நிறைந்த மூர்த்தியிடமிருந்து அடியார்கள் அருளைப் பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை உரை

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பிகையின் மஹா கும்பாபிஷேகத்தை அடுத்து கும்பாபிஷேகமலர் அலரவிருப்பதை அறியும்பொழுது மகிழ்ச்சி பெருகுகின்றது. அம்பிகை திருக்கோணமலை மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையின் இதர பாகங்களில் வசிக்கும் மக்கள்களுக்கும் கண்கண்ட தெய்வம். அருளும் பெற்றி மிக்கவள். அம்பிகையொடு நாற்பத்தேழாண்டுகள் தொடர்பு மிக்கவன். 1933ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்ளும் பேற்றினையும் அம்பிகை எனக்கு அநுக்கிரஹித்தாள்.

கும்பாபிஷேகமலர் கும்பாபிஷேக நினைவுச் சின்னமாகவும் அம்பிகையின் அநுக்கிரஹத்திற்கு அடையாளமாகவும் மிளிர வேண்டுமென்பது என் வேணவா. மலர் நன்கலர்ந்து சமய நறுமணம் நாடெங்கணும் பரப்பி நன்கு விளங்க அம்பிகை திருவருள் புரிவாளாக.

கா. கைலாசநாத குருக்கள்

இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
17 - 5 - 80.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர்

# திரு. இரா. சம்பந்தன் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

திருக்கோணமலை அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்து முடிந்த இவ்வேளையில் 'கும்பாபிஷேக மலர்' ஒன்று வெளிவர இருப்பதை அறிந்து பெருமகிழ்வெய்துகிறேன்.

திருக்கோணமலையில் அமைந்திருக்கும் ஆலயங்களில் பத்திரகாளி அம்பாள் ஆலயம் மிகவும் புராதனமான சைவ ஆலயமாகும். இக் கோவிலின் சரித்திரம் பல நூற்றுண்டுகட்கு முற்பட்டதாகும். இவ்வாலயம் படிப்படியாக வளர்ச்சியெய்தி இன்று திருக்கோணமலை சைவ அன்பர்கள் மட்டுமன்றி, ஏனைய சைவப் பெருங்குடி மக்களின் சமய அனுட்டானங்களுக்கு ஒரு முக்கிய ஸ்தலமாக பிரசித்திபெற்று விளங்கி வருகிறது. சைவப் பெருங்குடி மக்கள் இவ்வாலயத்தில் நடைபெறும் உற்சவங்களில் பக்தி சிரத்தையோடு பங்குபற்றும் விதத்திலிருந்து இது தெளிவாகத் தெரிகிறது.

திருக்கோணமலை பத்திரகாளி ஆலயத்தில் நித்திய பூசைகள் மற்றும் விசேட உற்சவங்கள் ஆகம விதிப்படியும், கிரமமாகவும் நடைபெறுவதை சகலரும் ஒருமனத்துடன் ஏற்றுக்கொள்வர்.

இப்பழம்பெரும் ஆலயம் பல லட்சக்கணக்கான ரூபா செலவில் அண்மையில் புனரமைக்கப்பெற்று புதுப்பொலிவோடு தற்போது விளங்குகிறது. அண்மையில் ஆகம விதிப்படி மிகச்சிறப்பான முறையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் அம்பாளின் கடாட்சத்தைப் பெற்றனர். இருப்பினும் இவ்வாலயத்திற்கு இன்னும்சில திருத்தவேலைகள் நடைபெறவேண்டியுள்ளது. இத்திருப்பணியும் இனிது நிறைவேற சைவப் பெருங்குடி மக்கள் தம்மாலியன்ற உதவிகள் செய்து இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்குபற்றி அம்பாளின் அனுக்கிரகத்தைப் பெற்றுய்யவேண்டுமென்பது எனது அவா. இவ்வாலயம் மேலும் வளர்ச்சியுற்று இந்நகரில் இந்துசமய வளர்ச்சிக்கு ஏதுவாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஈற்றில், இவ்வாலயத்தின் பிரதம குருவும் தர்மகர்த்தாவுமான பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் அவர்களைப்பற்றியும் சிலவார்த்தைகள் கூறவேண்டியது அவசியம் என்று உணர்கிறேன்.

அவருடைய ஆழ்ந்த பக்திமயமான சேவையும் திறமையான நிர்வாகமும் இவ்வுயர்ந்த ஸ்தானத்தை அடைந்தமைக்கு முக்கிய காரணமென்றால் மிகையாகாது. தாராள மனத்துடன் அவர் இவ்வாலயத்திற்கு செலவுசெய்து திறம்பட நிர்வகித்து சைவ மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றுள்ளார்கள். சைவமக்கள் சார்பில் இத்தருணத்தில் எனது நன்றியை அவருக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

வெளிவரவிருக்கும் இக்கும்பாபிஷேக மலர் செவ்வனே மலர்ந்து மணம் பரப்ப எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சக்தி வழிபாடு

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

பெறுவதற்கரிய மானிடப்பிறவியைப் பெற்ற நாம் அப்பிறவியை எடுத்த நோக்கத்தை நிறைவேற்றுதலே அழகுடைமையாகும். இதனைச் சாதிப்பதற்கு ஆயுதமாகப் பண்டைத் தமிழ்மக்கள் தம் வாழ்வில் வழிபாட்டையே பிரயோகம் செய்தனர். பக்தி சிரத்தையுடன் வழிபாடு இயற்றினுல் எக்காரியத்தையும் செய்து முடிக்கலாம் என்ற துணிவு மக்களிடையே பரவி வந்தது.

''மனமுண்டானுல் இடமுண்டு'' என்ற முதுமொழியின்படி இறைவழிபாட்டிற்கும், மனம் என்ற பொறி இன்றியமையாத தொன்ருகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்தும் கட்டப்பட்ட மாட்டுத் தொழுவமாக மனதை இழித்துக் கூறுகின்ருர் பட்டினத்தடிகள். இவ்வைந்தையும் அடக்குதலே வழிபாடெனக் கருதலாம். இவ்வைந்தையும் ''உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினுல் முறுக வாங்கிக் கடையமுன்னிற்குமே'' என அப்பர் சுவாமிகள் வற்புறுத்துகின்ருர். இவற்றை அடக்க ஓர் அற்புத சக்தி வேண்டும். இச் சக்தியைப் பொது வழிபாட்டிலும்பார்க்கச் சக்தி வழிபாட்டிலிருந்து பெறுதல் சுலபமாகும். மாக்களையெல்லாம் மக்களாக்கும் ஓர் அபூர்வ சக்தி சக்தி வழிபாட்டில் உண்டென்பதை அறிந்தே நம் சான்ருேர் அவ்வழிபாட்டை ஏற்றுப் போற்றி வளர்த்தனர்.

பண்டைக்காலத்தில் தாயை வழிபடுதல் வழக்கம். ''ஈன்ருளிலென்ன கடவுளுமில்'' என்ருர் ஒரு பெரியார். கற்புடைய தாய் சக்திக்கு நிகராவாள். ஆகவே சக்தியிலும் பார்க்க கடவுளுமில் எனவும் கொள்ளலாம். அவரின்றி அணு அசையா தாயினும் சக்தியின்றிச் சிவன் அசையார். ஆகவே அணு அசைவதற்கும் சக்தியே காரணமென்ருல் அது மிகையாகாது. ஐந்தொழில் செய்வதற்கான சக்தி இறைவனின் அருட்சக்தியிடம் இருந்தே பெறப்பட்டது. ஒரு மதத்தினர் சக்தியையே முழுமுதற் கடவுளாக மதித்து வணங்கினர். இதனுலே அம்மதத்திற்கு ''சாக்த மதம்'' என்ற பெயர் வழங்கலாயிற்று. இப்படியாகத் தாயை வழிபடும் காலத்தில் தோன்றியதே அம்மன் வழிபாடு.

காளி, பேச்சியம்மன், நாச்சிமார், மாதா, மாரியம்மன், கண்ணகை வழிபாடுகளும் இவ் வழிபாடுகளுடன் அமையும். சங்ககாலந்தொட்டு வீர வழிபாடும் நிலவி வந்தது. இதற்கு அதிபதியாகத் துர்க்கையை வழிபடுவர். பாலை நிலத் தெய்வமாகிய கொற்றவை, கொப்புளிப்பான், சின்னமுத்து ஆகிய நோய்கள் ஆவதற்கும் அழிவதற்கும் ஏதுவாய் உள்ள தெய்வமாகும். இதனுல் மக்கள் இத் தெய்வத்தைப் பக்தியோடு வழிபடுவர். வேள்வியும் செய்வர். இதற்குப் பறை மேளம் அடிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாரியம்மன் கோவிலுக்கு முக்கிய மாகச்செய்யும் நேர்த்திக்கடன் கரகமாகும். கரகம் கட்டி வேப்பிலை, பூ முதலியவற்றால் அதை அலங்கரித்து மந்திரம் சொல்லி உடுக்கடித்து மாரியம்மன் தாலாட்டுப்பாடி ஆடுவதே கரகாட்டமாகும். சிலசமயம் கரகம் எடுப்போரில் மாரியம்மன் உருக் கொள்வாள்.

கண்ணகை வழிபாடு இதைவிட வேறு பட்டது. கண்ணகை அம்மன் கதை படிப் பது மிக முக்கியமானது. பொங்கல் பொங் குவதும் வழக்கம். கண்ணோயுற்றோர் அது மாறுவதற்காக நேர்த்திக் கடன் பண்ணி வெள்ளியால் கண்மலர் செய்து கொடுப்பர்.

சக்தி வழிபாடு இப்பொழுது மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கி இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் சக்தி களாக மதித்து வணங்குவர். இம் முப் பெரும் சக்திகளுக்கும் விழா எடுக்கும் நோக்கமாக ஒன்பது நாட்கள் கொண்டா டப்படும் விழாவே நவராத்திரி விழா எனப்படும். இலக்குமி என்னும் திருநாமத் தோடு கூடிச் செல்வங்களையும், சரஸ்வதி என்னும் திருநாமத்தைப் பூண்டு சகல கலைகளையும், காயத்திரி சாவித்திரி என்னும் பெயர் பூண்டு ஞானத்தையும் பரிபாலிப் பவள் அன்னையேயாவள். மேலும் துர்க்கை, காளி, சாமுண்டி முதலாம் திருநாமங்களைப் பொருந்தித் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரி பாலனஞ் செய்பவள் மாதாவேயாவாள். உலகின் கண்ணேயுள்ள சராசரங்கள் தோறும் அழகின் அம்சமாக விளங்குபவ ளும், பெண்பாலாரிடத்து வசீகர சக்தியை அளித்து, பிரபஞ்சம் நடைபெறச் செய்பவ ளும் பெருமாட்டியேயாவர். இவ்வரிய மகத்துவங்களோடு கூடிய சக்திதான் திரு ஞானசம்பந்தருக்குத் தமது ஞானப்பால் கொடுத்துச் சைவமும் தமிழும் மேன்மை யுறச்செய்தது.

நவராத்திரியாகிய ஒன்பது நாட்களிலும் முதல் மூன்று இரவும் வெற்றியை வேண்டித் துர்க்கா தேவியையும், அடுத்த மூன்றிரவும் செல்வத்தை வேண்டி இலக்குமி தேவியை யும், இறுதி மூன்றிரவும் கல்வியை வேண்டிச் சரஸ்வதியையும் விசேஷமாகப் பூசிப்பர்.

இப்புண்ணிய காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் உட்பட சகல தொழி லாளர்களும் சக்தியைப் பூசிக்கத் தவற மாட்டார்கள். முதல் மூன்று நாட்களும் போருக்குச் செல்லும் வீரர் தமது வெற்றிக் காகத் துர்க்கா தேவியை வணங்கி ஆசியும் பெறுவர். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' ஆகையால் இல்வாழ்வுக்கு அதிபதியாகிய துர்க்கையைப் பக்தியுடன் வழிபடல் வேண்டும். அடுத்த மூன்று நாட் களும் செல்வத்துக்கு அதிபதியாகிய இலக் குமியை உழவர், வியாபாரிகள் ஆகியோர் வழிபடுவர். கழனிகளில் செந்நெல் விளைந்து வீட்டில் அவற்றைச் செல்வமாகக் காணும் அருள் படைத்தவர் உழவர். ''ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லை'' என்ற வீரப் பாட்டைப் பாடுவதில் உழவர் மட்டுமல்ல இலட்சுமியின் அருள் பெற்ற எவரும் இறும்பூதெய்தலாம்; இறுமாப்படையலாம். ''மேழிச் செல்வம் கோழைபடாது'' என்ற தீராத நம்பிக்கையுடன் இலக்குமியை நடு மூன்று நாளும் பக்தியுடன் உழவர் வணங் குவர்.

கடைசி மூன்று நாட்களும் நாடு நல்ல நிலையில் இருக்க அவசியமான அறிவைத் தரும் கல்விக்கரசி சரஸ்வதியின் திருநாளா கும். ''எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி - நல்லை வாழிய நிலன்'' என்ற முது மொழிக்கிணங்க வாழவேண்டுமாயின் அறிவு என்ற ஆயுதம் இன்றியமையாத தொன்றா கும். இதனால் இம்மூன்று நாட்களையும் பாடசாலைகளில் மாணவர்கள் பக்தியுடன் கொண்டாடுவர்.

பத்தாம்நாள் விஜயதசமி எனப் பெயர் பெறும். இத்தினத்தன்று புத்தக பூஜை, ஆயுத பூஜைகளைச் சிரத்தையோடு செய்து வந்தனர். ஆகவே இம்மூன்று சக்திகளில் ஒன்றின் அருள்பெற்றால் மட்டும் போதாது. கல்விக்குச் செல்வம் வேண்டும். செல்வத் திற்கு வீரம் வேண்டும். வீரத்திற்கு அறிவு வேண்டும். ஆகவே இம் மூன்று சக்திகளையும் பக்தி சிரத்தையோடு வழிபடுவது இன்றி யமையாததாகும். நாடு நன்னிலையில் இருக்க இம் மூன்று சக்திகளின் சக்தியே காரணம். ''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு'' ஆதலின் இவை அனைத்தையும் தரும் இம் முப்பெரும் சக்திகளையும் வணங்குவதோடு ஆண்டுக்கொருமுறை நன்றிக் கடன் தெரிவிக்கும் நன்னாளாக நவராத்திரி கொண்டாடப்படுகின்றது.

வெற்றியும், செல்வமும், ஞானமும் பெறும்வண்ணம் முறையே துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி தேவிகளை வழிபட்டு உய்யலாம். இம் முப்பெரும் சக்திகளின் சக்தியாலேயே மேலோங்கி ஒளிபெறலாம்.

திருச்சிற்றம்பலம்.

❋

## மறக் கருணை

தந்தைதாய் பெற்ற தத்தம்
புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடின் உறுக்கி
வளாரினால் அடித்துத் தீய
பந்தமும் இடுவர்; எல்லாம்
பார்த்திடின் பரிவே ஆகும்
இந்தநீர் முறைமை யன்றோ
ஈசனார் முனிவும் என்றும்.

— சிவஞானசித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கும்பாபிஷேகத்தின்
போது பஞ்சாசன வேதிகை
அமைக்கப்பெற்ற
யாகசாலையின் தோற்றம்



மகாகும்பாபிஷேகத்துக்கு முதல்நாள் எண்ணெய்க்காப்பு இடுவதற்கு
அடியார்கள் நீண்ட ஒழுங்கு வரிசையில் நிற்குங் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் கும்பாபிஷேக தினத்தன்று கும்பம் வீதிவலம் வரும்போது சூழ்ந்துநின்ற அடியார் கூட்டத்தின் ஒருபகுதி


திருக்கோணமலை ஸ்ரீ பத்திர காளி ஆலயத்தின் திருத்தி யமைக்கப்பெற்ற ஸ்தூபிக்கு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அபிஷேகம் செய்யும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தின்போது
பாவனுபிஷேகம் நடைபெறும் காட்சி




திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நடந்த இரவு
யாழ் வளாக இந்துநாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி
பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் M. A., Ph. D. அவர்களால்
ஸ்ரீ சக்கர பூசை நடைபெறும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகத்தை இனிதுநிறைவேற்றிவைத்த பிரதம குரு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களுக்கு தேவஸ்தான அதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களால் வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கும் காட்சி



பேராசிரியர், கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களுக்கு அதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்குங் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ பத்திரகாளி தேவி

## அம்பிகை அருள்

**அ**கில உலகங்களையும், உலகங்களில் பொருந்தி விளங்கும் சரம், அசரம் என்பவற்றை எல்லாம் தந்து காத்து அருள்பவள் சக்தி, சக்தி இல்லாது சிவம் இயங்கமுடியாது. அது எவ்விதம் என்றால் உதாரணமாக, எமது உடல் இருக்கிறது. இந்த உடலில் உயிர் சேர்ந்தால்தான் நாம் மானிடராக இயங்க முடியும். இதே போலவே இறைவன் சக்தி யோடு இயைந்தால்தான் ஜகத் சிருஷ்டிகள் செயல்படலாம். நாம் இதை, திருவாதவூரர் புராணச் செய்யுள் சிவ வணக்கத்தில் ''இதந்தரு மடந்தையோடு இசைந்து உயிர் உடம்புபோல்'' என குறிப்பிட்டதிலிருந்து அறியலாம். பற்றற்ற நிலையையுடைய இறைவன் சக்தியைப் பற்றிக்கொண்டு தான் உலகையும் சகல ஆன்மாக்களையும் படைத்து, காத்து, அருள்கிறார். நாம் வாழும் பூமி இருக்கிறது. இதை வடமொழியில் ''பிருதிவி'' என்று கூறுவார்கள். இது சக்தி, பூமாதேவியின் கருணை வடிவாகும். இந்த சக்தியின் அருள் நோக்கினால் இப் பூமியில் சகல ஆன்ம கோடிகள், விலங்கினம், பறவை, ஊர்வன, நீர் வாழ்வன மாத்திரமல்ல கொடி, செடி, தானியவகை, கிழங்கு, காய், கனிவகையென பலதரப்பட்ட தாவரங்களையும் உலகில் தோற்றி ஜீவராசிகளின் உயிர்வாழ்வுக்கு வழிசெய்தருள்கிறாள். பூமாதேவி ஆகிய சக்தி மற்றெல்லாத் தெய்வங்களையும் பொருந்தியதால் வெவ்வேறு சக்திகள் காணப்படுகின்றன. அவர்களின் இயக்கத்தினால் தெய்வங்கள் அருள்சக்தியான நிலையில் ஆலயங்கள் தோறும் அமர்ந்து சான் நித்தியமான நிலையில் எமக்கு அருள் சக்தியைத் தந்து எம்மை வழிநடத்துகின்றனர். ஆகவே, தேவி என்னும் பதத்திலிருந்து பலவித ரூபங்களைக்கொண்ட சக்திகள் எமக்கு, தமது தோற்றத்தை, வேத ஆகம சிற்பரீதியில் விக்கிரகமாக ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பெற்று உருவத்திருமேனி தாங்கி எம்மை தம்வயமாக்கி அருள்புரிகிறார்கள். இதுவே தெய்வத்திற்கு ஏற்பட்ட சக்தி, இதுவே தெய்வீக சக்தி என்று நாம் கூறுகிறோம். பூமி சக்தியாகவும் நிஷ்களங்கமான ஆகாசம் சிவமாகவும் கூறப்படுகின்றது. இது இரண்டும் பொருந்திய வடிவமே ''சிவலிங்க''வடிவமாகும். இந்த சிவலிங்கத்தின் ஆவுடையாரானது சக்தியாகவும் அதில் பொருந்திய லிங்கம் சிவமாகவும் ஆகமம் கூறுகின்றது. சிவசக்தியின் ஐக்கிய சொரூபமே சிவலிங்கமாகும்.

''ஏகபராத்மா பெகுதேயவர்த்தி'' என்பது வடமொழிப் பதம். அது எவ்விதம் என்றால் இறைவன் ஒருவன், அவர் பலவிதமான மூர்த்தங்களாக வியாபித்து அநுக்கிரகம் செய்கிறார் என்பதே. சக்தி என்பவள் பார்வதி, மனோன்மணி, மீனாக்ஷி, கமாக்ஷி, துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி, பத்திரகாளி எனும் பலவிதப்பட்ட வியாபகமானவள். அப்படிப் பெருமை வாய்ந்த சக்திகளுள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும் பெரும் அருஞ்சிறப்பான சக்தியாகும். ஸ்ரீ வீரபத்திரப் பெருமானின் சக்தியே, பத்திரகாளி அம்பாளாகும். சக்தி வழிபாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிற்கு ''நவராத்திரி'' சிறந்த காலமாகும். இப்படிச் சிறப்புடன் விளங்கும் நவராத்திரி பூஜையை முறைதவருது மன அமைதி, பக்தியுடன் செய்து வழிபட்டால், கோடி புண்ணியம் இஷ்ட சித்திகள் எமக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சகல ஜகத்ஜனனியாகிய ஸ்ரீ மாதா லலிதா திரிபுரசுந்தரியின் சிந்தாமணிக் கிருகத்தில் வாயு பாகத்தில் சியாமளா, எனும் நாமத்துடன் மகாகாளி கருப்பு நிறத்தினளாய் சிவந்த பட்டாடை சுகந்த மாலைகளுடன் வீணையை இசைத்துக்கொண்டும் மதுரமான மதுபானத்திஞல் சுழல்கின்ற கண்களின் பார்வையால் அருள் நிறைந்த பக்தர்கட்கும் அநுக்கிரகம் செய்பவளாய் மகாகவி காளிதாசர் முதன் முதலாக மாதங்கி என்ற சியாமளா தேவியை உபாசனை செய்து சியாமளா தாண்டகம் என்னும் ஸ்தோத்திர மாலையைப்பாடி, மகாகவி காளிதாசன் என்னும் நாமத்துடன் மகா ஞானியாய் சகல உலகங்களிலும் தேவியின் அருளால் புகழீட்டி விளங்கிஞன். இந்த சியாமளா தாண்டகத்தில், அம்பாளை கருமை நிறத்தில் உபாஸித்தலிஞல் சகல நலன்களையும் பெறலாம். என காளிதாசர் பாடிய சியாமளா தாண்டகஸ்துதியில் கூறப்படுகிறது. காளம் என்பதும் சியாமளா என்பதும் கருமையையே குறிப்பிடுகிறது. உதாரணமாக நீலமேக சியாமளவர்ணுய நம என்னும் நாமம் திருமாலுக்கும் உண்டு என்பது சான்று.

தம்மை வந்து பக்திபரவசத்துடன் வழிபாடு செய்வோருக்கு வீரியம், சத்துரு ஜயம், மங்களம், ஆயுள், கீர்த்தி, தனம் புத்திரப்பிராப்தி, ஐஸ்வர்யம், கல்வி, ஞானம் என்று சொல்லப்படும் நிலையையே தன்வயமாகக்கொண்டு அருள் செய்யும் கரு உருவத்திருமேனி உடையவளே பத்திர காளி என்றும் சியாமளா என்றும் வியந்து வேதங்கள் கூறுவது காணலாம்.

ஆலயங்களிலே கர்ப்பக்கிருகத்தில் ஸ்தாபிக்கும் உருவத்திருவடிவங்கள் கருங்கல் சிலையாக இருப்பதே, அருள் எளிதில் சுரக்கும் கரிய திருமேனியாக அமைவது காண்க. எந்த மூர்த்தியும் கரிய திருமேனியாக சமைக்கப்பட்ட விக்கிரகங்கள் உபாசிப்பதற்கு சிறந்தவை என்பதாகும்.

சகல பாவங்களைப் போக்கி சகல சம்பத்துக்களையும் இஷ்ட சித்திகளையும் இலகுவில் பலன்செய்யும் தன்மை பொருந்திய வடிவாகும். வீரபத்திரர் என்ருல் வீரச் செயலான அனுக்கிரகத்தை தன்வயம் கொண்டு பக்தர்கட்கு அனுக்கிரகம் செய்பவர் எனப்பொருள். வீரபத்திரருக்கு சக்தியாக அமைந்து உலகிற்கு க்ஷேமத்தை அளிப்பவளே ஸ்ரீ பத்திரகாளி ஆகும். காளி அம்பாளை தக்ஷிணகாளி, உத்தரகாளி என்றும் தந்திர சாஸ்திரங்கள் கூறுகின்றன. சிந்தாமணிக்கிருகத்தின் வடமேற்குப் புறத்தில் காளி என்ற சியாமளா தேவியின் கிருகம் இருப்பதாக ''ஸ்ரீ சக்ரவிமர்சனம்'' எனும் நூலின் வியாக்கியானத்தில் துர்வாசமுனிவர் கூறி அருளி இருக்கிருர்.

ஆகவே, 'மாதிர் தேவோபவ' என்பது உபநிஷதக் கட்டளை. ''பெற்றதாயும் பிறந்த பொன்னடும், நற்றவ வானினும் நனி சிறந்தனவே'' என்றும் ''அன்னையும் பிதாவும்முன்னறிதெய்வம்''என அன்னையை முன்வைத்தும், ''தாயிற் சிறந்த கோயில் இல்லை'' என்பதில் தாயை முன்வைத்தும் கூறுவது காணலாம். மதிப்புக்கும், பெருமைக்கும், ஞானத்திற்கும், சத்தியத்திற்கும் உரியவள் தாய் - அன்னை பராசக்தி என்பதை மனுதர்ம சாத்திரம் கூறுகிறது. ஆகவே, ஆப்பிரம்மகீட ஜனநீ ஆகிய ஜகன்மாதா ஸ்ரீ பத்திரகாளி அம்பிகை உலகில் உள்ள சகல ஜீவராசிகளுக்கும் கருணையோடு ஜீவாதார சக்திகளைக் கொடுத்து மதுர பாஷினியாகவும் எல்லையில்லாத அருள் சமுத்திரமாகவும் பொருந்திய கருணை வடிவினள் ''அகிலாண்டகோடி பிரமாண்டநாயகி'' பத்துத் திங்கள் வயிற்றினில் வைத்து பரிந்து காக்கும் அன்னை சாதாரணமானவள். அகில சராசரங்களைத் தன்வயமாக்கி லீலைபுரியும் அன்னை பராசக்தியின் பெருமைகளைச் சொல்ல முடியுமா? அவளே ஜகன்மாதா அவளின் செயலே அருஞ்செயல் அவளின் திருநோக்கே எமக்கு அருள்நோக்கு. ஆகவே அன்னையின் அடிபணிந்து அரிய பாவச்செயலை செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது தடுத்தாட்கொள்ளும் வண்ணம் பெருந்தகைமையான இறைவியின் திருப் பாதங்களை எமது சென்னிசாய்த்து வணங்கி முத்தியின்பம்பெற அருள் வேண்டி நிற்பதே சமயநெறியாகும். உயர் நெறியு மாகும்.

சர்வம் சக்திமயம் ஜகத்

நவாலி.

**பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்**

# தாயும் கடவுளும்

தாயிற் சிறந்த கோயிலுமில்லை
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை

தன்னல மற்றது தாயின் நெஞ்சம்
தாய்மை நிறைந்தது கடவுளின் நெஞ்சம்
மன்னுயிர் காத்தவர் மாந்தருள் தெய்வம்
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

பொறுமையில் சிறந்த பூமியும் உண்டு
பூமியை மிஞ்சும் தாய்மையும் உண்டு
கோவிலில் ஒன்று குடும்பத்தில் ஒன்று
கருணையில் தாயும் கடவுளும் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளின்றி ஓரணுவும் அசையாது

என்னால் நடந்தேறியதல்ல - எல்லாமே ஸ்ரீ பத்திரகாளியின் செயலே
ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அது வரினும் வந்தெய்தும் - ஒன்றும்
நினையாது முன்வந்து நிற்கினும் நிற்கும்
எமையாளும் உமையாள் செயல்.

**எ**த்தனையோ தலைமுறையாக எனது குடும்ப முன்னோர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்த இவ்வாலயத்தின் திருக்கைங்கரியங்களை ஏற்று நடத்தும் பொறுப்பு இல்லாத பாடசாலை வாழ்க்கையை மேற்கொண்டிருந்த எனது பதினாறாண்டுப் பிராயத்தில், எனது தந்தையார் இறையடி சேர அம்பிகை இப்பெரும்பணியை என்னிடந் தந்தாள். அன்று முதல் என்கடன் உனக்குப் பணி செய்து கிடப்பதே என்பதை இலட்சியமாகக் கொண்டு தேவகாரியத்தைச் செய்துவந்துள்ளேன் - இன்றுஞ் செய்து வருகின்றேன்.

அகண்ட வஸ்துவாக எங்கணும் வியாபித்து நிற்கும் பரம்பொருளாகிய இறைவனுக்கு நான்குபக்கமும் சுவரெழுப்பி, குறுகிய பரப்பினதாகக் கோயில் சமைத்து, அதையே அவன் உறைவிடமாகக் கொள்ளல் பொருந்துமா? என்னுமிடத்து, பசுவினுடைய உடலெல்லாம் பரந்தோடும் குருதி பாலாகப் பரிணமிக்கும்பொழுது, அதை வெளியேற்ற முலைகள் அமைந்து விளங்குவதைப் போல், உலகெங்கும் பரந்து விளங்கும் பரமன் ஆன்மஈடேற்றங் கருதி கருணை மேலீட்டினால் திருவுருவந் தாங்கி எழுந்திருக்குமிடம் கோயிலாகும். இன்னும் இறைவன் உறையுமிடம் கோயிலென்பர். இத்துணைச் சிறப்பினையும், உயர்ந்த தத்துவங்களையும் உணர்த்தும் நிலையினையும் நன்கு வாய்க்கப் பெற்றவை கோயில்களாகும். அன்றியும் இவ்வாலயங்கள் கலைகள் யாவற்றினதும் வளர்ச்சிக்கு ஏற்ற ஒப்புயர்வற்ற நிலைக்களனாக விளங்குவது. ஆன்மகோடிகளுக்குப் பக்தியைப் பெருக்குவதோடு, கட்டிடக்கலை, சிற்பக்கலை, சித்திரக்கலை, இசைக்கலை, நாட்டியக்கலை என அத்தனைக்கும் நிலைக்களனாக அமைவதாகும்.

இத்துணைச் சிறப்புமிக்க ஆலயங்களிலொன்றான திருக்கோணமலை ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயில் பணியைச் சிறியேன் பொறுப்பேற்றபோது பெரும்பாலும் திருப்பணி செய்யவேண்டிய நிலையிலே கர்ப்பக்கிருகமும், மற்றும் மண்டபங்களும் பெரிதும் இடிபாடுகளுடன் இருந்தது. கர்ப்பக்கிருகத்து விமானத்துக்கு இடையிடையே முட்டுக்கொடுத்துப் பாதுகாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலத்தில் வழிபட வரும் அடியார் கூட்டமும் குறைவாகவேயிருந்தது. எனது காலத்துக்கு முன்பதாக இவ்வாலயத்தில் கோயில் கொண்டருளும் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் பல அற்புதங்களை நிகழ்த்தியதாகவும், அதனால் மக்கள் மிகவும் பயபக்தியோடு, மிகப்புனிதமாக இவ்வாலயச் சூழலில் நடமாடுவார்கள் என்றும் அறிவேன். இவ்வாலயத்தோடு தொடர்புடையதாகக் கருதப்படும் தகளி, வாகனம் போன்றவைகள் இன்றும் இவ்வாலயத்தில் இருப்பதால் அவற்றை ஓரளவு நாம் கருத்தில் கொண்டுதான் ஆகவேண்டும்.

அக்காலத்தில் எவ்வித வருமானமுமற்ற இவ்வாலயத்தை தனியொரு ஆதீனமாக நடத்துவது பெரும் சிரமமான காரியமாக இருந்தும், அம்பிகை இவ்வுடம்பைக் கொடுத்ததன் நோக்கம் அவள்பணி செய்வதற்கேயென்ற எண்ணத்தைக் கருத்திற்கொண்டு தேவ காரியத்தை முடிந்தவரை விதிமுறை தவறாது செய்துவந்தேன். இந்த நிலையிலேதான் 1933 - ஆம் ஆண்டளவில் அம்பிகையின் ஆலயத் திருப்பணி வேலைகள் சிலவற்றைச் செய்து கும்பாபிஷேகம் செய்ய அன்னை திருவுளங் கொண்டாள்.

அக்காலத்தில், ரதோற்சவ நாட்களில் இதற்கெனப் பாவனையில் இருந்துவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகடையைக் கம்பு தடிகளால் தேராக்கிப் பாவிக்கப்பட்டு வந்தது, இக்கும்பாபிஷேகத்தையடுத்து ஓர் புதிய தேருக்குக் கீழண்டம் மாத்திரம் உபயமாகச் செய்து மேல்வேலைகளை வழமைபோல் கம்பு தடிகளால் கட்டித் தேராக உபயோகிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையிலே 1947 ஆம் ஆண்டு மகா மண்டபம், கோபுர மண்டபம் ஆகியவை முழுவதும் திருத்தியமைக்கப்பட்டு, மற்றும் சில திருத்த வேலைகளுடன் இரண்டாவது கும்பாபிஷேகம் நடைபெற அம்பாள் திருவருள் கூடியது.

மூலமூர்த்திகளுக்கு ஆகம விதிப்படி கிரியைகள் செய்துவரின் வழிபாட்டின் பூரண பலனையும்பெற முடியும். இவைகளைக் கருத்தில் கொண்டே கிரியாவிடயங்கள் ஒவ்வொன்றும் மிகக் கருத்தோடு செய்யப்பட்டு வந்துள்ளது. இலட்சார்ச்சனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1960ம் ஆண்டளவில் இவ்வாலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இலட்சார்ச்சனை இவ்வாண்டோடு முப்பத்தியோராவது இலட்சார்ச்சனையை முடிக்கத் திருவருள் கூடியது.

இதற்கடுத்ததாக 1962ஆம் ஆண்டில் வசந்த மண்டபமும், மற்றும் சில திருத்த வேலைகளும் நடைபெற்று கும்பாபிஷேகம் நடைபெற அம்பிகை அருள்பாலித்தாள்.

இதன்பின் உபயோகத்தில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் ஓர் புதிய தேர் செய்யவேண்டியதன் அவசியத்தை அன்பர்கள் பலர் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். அதன் பேருக 1966 ஆம் ஆண்டு ஓர் புதிய தேர் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனுல் எதிர்பாராத சில காரணங்களால் அம்முயற்சி 1969ஆம் ஆண்டிற்குப் பின்போடப்பட்டு, 1972ஆம் ஆண்டு திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலயத்தினரின் கைவண்ணத்தோடு பல சிற்ப வேலைகளுடன் கூடிய புத்தம் புதிய சித்திரத்தேர்கள் மூன்று உருவாகியது. அத்தோடு ஒரு மஞ்சமும் உருவானது. கிழக்கிலங்கையில் முதன்முதலாக உருவான சித்திரத்தேர்கள் இவையாகும். ஒரு தேர் செய்யவேண்டுமென்று எடுக்கப்பட்ட முயற்சி மூன்று சித்திரத் தேர்களும், ஒரு மஞ்சமுமாக உருவானதும் அந்த அம்பிகையின் லீலா விநோதமேயாம்.

சித்தார்த்தி வருடம் தைமாதம் 23ஆம் நாள் (6-2-1980) நான்காவது கும்பாபிஷேகம் சுபமே நடைபெற அன்னை பராசக்தியின் அருள் கிட்டியது. இம்முறை கர்ப்பக்கிருக விமானத்தை மாத்திரம் திருத்திக் கும்பாபிஷேகம் செய்வதென நினைத்து ஆரம்பத்தில் தொடங்கிய ஆலயத் திருப்பணி வேலைகள் எண்ணியதற்கும் மேலாக இனிதே முடிந்தது. கர்ப்பக்கிருகத்தின் திருத்த வேலைகளுடன் அங்கு அமைக்கப்பட்டிருந்த ஸ்தூபி தாங்கிகள் இருந்த இடத்தில் சப்த கன்னிகைகள் அமைக்கப்பட்டது. அர்த்த மண்டபத்தின் தென் புறத்தில் முச்சக்திகளும், வடபுறம் அம்பாள், விநாயகர், முருகனும் அமைக்கப்பட்டது. மகா மண்டபமான எழுந்தருளி மண்டபத்தின் கோபுரத்தில் ராஜராஜேஸ்வரியின் திருவுருவும், விமானத்தில் கௌரி அம்பாளும் அமைக்கப்பட்டது. அடுத்து நிர்த்த மண்டபத்தின் மேற்கூரையைமாத்திரம் எடுத்து அவ்விடத்திற்கு சீமேந்துத் தளம் போடுவதெனத்தொடங்கிய வேலை அம்பிகையின் திருவுளத்தால் முற்றும் முழுதாக மாற்றப்பட்டு ஆசாரியார் பன்னீர்ச்செல்வம் அவர்களின் குழுவினரின் கைவண்ணத்துடன் சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஓர் கலை மண்டபமாகவேயமைந்தது. இது எதிர்பாராத தொன்ருகும். அத்தோடு அம்மண்டபத்தில் ஸ்ரீ சரஸ்வதி, ஸ்ரீ இலட்சுமி ஆகிய இரு தெய்வங்களுக்கும் சிற்ப முறைப்படி அழகுற இரண்டு சிறு கோயில்கள் கட்டப்பட்டது. சிம்மம், பலி பீடம், கொடிஸ்தம்பப் பிள்ளையார் ஆகியவைகளின் கட்டிடங்களும் திருத்தியமைக்கப்பட்டதோடு, கொடிஸ்தம்ப மரமும் பழுதடைந்ததால் மாற்றியமைக்கப்பட்டது. நாகதம்பிரான் கோயில் முற்ருக மாற்றியமைக்கப்பட்டதோடு வைரவராலயத்தின் விமானத்திலும் இருபுறமும் நாய்வாகனத்துடன் கூடிய வைரவரும், மூலைகளில் காவல் தெய்வங்களும், நாய்களும் அமைக்கப்பட்டது. முன் கோபுர அமைப்பும் மாற்றியமைக்கவேண்டுமென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கண் எண்ணினும் அம்பாள் எதிர் பாராது பல வேலைகளை நிறைவேற்றியதால், முகப்பிலிருந்த அம்பாளை மாத்திரம் மாற்றி அமைத்ததோடு அவ்வேலை நிறுத்தப்பட்டது. இது அத்தனைக்கும் உறுதுணையாக இருந்து செயல்படுத்தியது அம்பாளின் திருவருளேயன்றி வேறில்லை. இத்தோடு கர்பக்கிருகக் கட்டிடத்தினதும், முன்மண்டபத்தினதும் பாதுகாப்புக்கருதி இரண்டிற்கும் சுற்றிவர இரும்புக் கிராதியும் போடப் பட்டது.

இதனிடையே முன்மண்டபத்திற்கருகில் சுமார் பதினைந்தடி உயரத்தில் இருந்த கண்டாமணிக்குப்பதில் நாற்பதடி உயரத்தில் மணிக்கோபுரங் கட்டி அதில் அறுநூறு இருத்தல் எடையில் ஓர் புதிய மணியும் ஸ்தாபிக்கப்பட்டது. இன்னும் கவனிக்கப்பட வேண்டிய சில திருத்த வேலைகள் உண்டு. அம்பாள் எப்பொழுது திருவுளங் கொள்ளுவாரோ? அன்னை பரா சக்திக்குத்தான் தெரியும்.

இம்முறை நடைபெற்ற கும்பாபிஷேகத்தை நவாலி விஸ்வநாதக் குருக்கள் ஐயா அவர்களைப் பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்குமாறு கேட்டிருந்தோம். இதுவும் அம்பிகையின் திருவுளம் என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் அவர் ஆகம விதிகள் நன்கறிந்த முதிய குருமார்களையே இங்கு கொண்டுவந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தது மாத்திரமல்ல, சகல கருமங்களிலும் எமக்கொரு வழிகாட்டியாக, ஆலோசகராக இருந்து தெய்வ காரியங்களை ஆகம விதிமுறைப்படி சிறப்புற நிறைவேற்றி வைத்தார்கள். இம்முறை அமைக்கப்பட்ட யாகசாலைகளே பல்லாயிரக்கணக்கில் செலவழித்து அமைக்கப்பட்டது. வடக்கு வீதியில் நாற்பத்தைந்தடி நீளமான பந்தலமைத்து, அதில் எழுந்தருளி அம்பாள், விநாயகர், வைரவ மூர்த்திகட்கு யாககுண்டங்கள் அமைக்கப் பட்டது. கோபுர மண்டபத்திற்கு முன்புறம் இருபத்தைந்தடிச் சதுரத்திலே சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய யாகசாலையமைத்து ஒன்பது குண்டங்களும், அதன் நடுவே பஞ்சாசனமும் அமைக்கப்பட்டு யாககாரியங்கள் நடைபெற்றது. இவை ஒவ்வொன்றும் ஆகம முறைப்படி மிகக் கவனமாகச் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகம் ஆகம முறைப்படி மிகமிகச் சிறப்பாயமைந்ததொன்றாகும்.

தொன்று தொட்டு இவ்வாலயத்தில் உச்சிக்கால, சாயரட்சைப் பூசையென இரு காலப் பூசைகளும் உற்சவங்களும் நடைபெற்றுவந்த ஆலயத்திற்கு, வழிபடவரும் அடியார்கள் தம் அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ காரியங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியவர்களாயிருந்தும், அதனிடையே ஆலய வழிபாட்டினையும் மறந்தாரில்லை. இது இப்புண்ணிய பூமியின் தனித்தன்மை என்று கூடச் சொல்லலாம். சமயப்பற்றும் தெய்வ சிந்தனையும் உள்ள மக்களுக்குப் பூசை நேரத்தை ஸ்திரப்படுத்தினால் அது அவர்களுக்குப் பயனுடையதாக இருக்கும் எனக் கருத்திற்கொண்டு உச்சிக்காலப் பூசையைப் பகல் பன்னிரண்டு மணிக்கும், சாயரட்சைப் பூசையை மாலை ஆறு மணிக்கும், அதேபோன்று உற்சவ கால நேரங்களையும் ஸ்திரப்படுத்தியதும் அடியவர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமைந்தது. இது ஆலயத்திற்கு வழிபட வரும் அடியார்களின் பக்தியின் பயனேயன்றி வேறில்லை,

முன்பு அம்பாளுக்கென ஒரு சில நகைகளே ஆலயத்தில் இருந்தது. அந்த நிலை தற்போது மாறி அம்பாளின் திருவுருவை அலங்கரிப்பதற்குப் போதிய நகைகளை அடியார்கள் சிலர் உபயமாக அளித்ததால் அன்னை பராசக்தி வீதியுலா வரும் போது சர்வாலங்கார பூஜிதையாக அடியார்களுக்கு அருள்பாலிக்கிறாள். அத்தோடு ஆலயக் கிரியைகளுக்கு வேண்டிய பூஜா உபகரணங்களும் போதிய இருப்பில் இருக்கிறது. உதாரணமாக திருக்கார்த்திகை விளக்கீட்டின்போது ஆலயம் முழுவதும் தீபஜோதியாய் இருப்பதற்கு அணிவரிசையில் குத்து விளக்குகள் வைக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். அதுவன்றி ஆலய பாவனைக்கென அவ்வப்போது வேண்டும் உபகரணங்கள் அத்தனையும் பெரும் பணச் செலவில் செய்யப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவ காலங்கள் முக்கியமாக இரண்டாகும். அதுவன்றி இலட்சார்ச்சனை சித்திரைப் பொங்கல், வைகாசிப் பொங்கல், திருவெம்பாவை, ஸ்ரீ கேதாரகௌரி நோன்பு ஆகிய விரதங்களும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. நவராத்திரியின் போது எட்டாம் உபயத்தன்று அம்பாள் ஸ்ரீ சரஸ்வதி, ஸ்ரீ இலட்சுமி சமேதராய் வீதியுலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கின்றாள். கொடியேற்ற மகோற்சவத்தின்போது முன்பிருந்ததிலும் பன்மடங்கு விரதகாரரும், பிரதட்சணம் செய்யும், அடியளிக்கும் அடியார்களின் கூட்டமும் அதிகரித்துள்ளது.

ஈண்டு முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது ஸ்ரீ கேதாரகௌரி விரதமாகும். எனக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இங்கு இவ்விரதத்தை அடியார்கள் அனுஷ்டித்து வருகின்றார்கள். அக்காலம் சுமார் நூறு நூற்றைம்பது விரதகாரர்கள் அம்பாளுக்கு நிவேதித்துப் பூசை செய்து வழிபட்டுப் பக்தி சிரத்தையுடன் இவ்விரதத்தை அனுஷ்டித்து வந்துள்ளனர். தற்போது விரதகாரரின் எண்ணிக்கை படிப்படியாகக் கூடியதோடு, அயலூர்களிலிருந்தும், கடல் கடந்து வெளிநாடுகளிலிருந்தும் பலர் அனுஷ்டிக்கின்றனர்.

இன்று இனமத பேதமின்றிப் பல்லாயிரக்கணக்கான விரதகாரர் இவ்விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்துப் பயனடைந்துள்ளனர். சைவப் பெருமக்கள் மாத்திரமல்ல பிறமதத்தவர்களும் இவ்விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்து திருக்காப்புக்களை அணியத் தொடங்கியதும் பல அற்புத சக்திகளையும், தத்தமது இஷ்ட சித்திகளையும் பெற்றதாக நேரில் எம்மிடம் கூறினர். இவையெல்லாம் இறைவியின் செயலேயன்றி எம்மாலானது எதுவுமில்லை. அம்பிகையே! நன்ளுரிற் கட்டிய சூத்திரப்பாவை போன்று நீ இயக்குகின்றாய், நான் இயங்குகின்றேன். எனவே இவ்வாலயத்தின் வளர்ச்சியும், வழிபட வரும் அடியார்களின் உளப்பாங்கும் உன் திருவருளேயன்றி வேறில்லை. இதில் என் செயல் என்பதற்கு எதுவுமேயில்லை,

இன்று மூப்பின் காரணமாக உடல்நிலை தளர்ந்தபோதிலும், எனது ஏகபுத்திரன் ரவிச்சந்திர சர்மா தேவியின் காரியங்களைப் பக்தி சிரத்தையோடு ஆற்றி வருகின்றார்.

அகிலாண்ட நாயகியாம் அம்பிகையின் அற்புதங்களை எடுத்துக் கூற முற்படின் அதுவே ஒரு மலராக அமையும். அன்றியும் இவையனைத்தையும் அன்னையை வழிபட வரும் அடியார் கூட்டமேயறிவர். ஆன்ம கோடிகள் அனைத்திலும் நீக்கமற நின்று இயக்குவிக்கும் அம்பிகையின் திருவிளையாடல்களை என்போன்றோர் எடுத்தியம்புவதென்பது முடியாத காரியமாகும். அதனுல் இவ்வாலயத்தில் நடைபெற்ற சில முக்கிய விடயங்களை மாத்திரம் ஈண்டு தந்தோம். தராதவை பல. அவற்றைத் தருவதும் இயலாது, ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே. எனவே அவள் ஆட்டுவிக்கின்றாள். நாம் ஆடுகின்றோம். அதுவே உண்மை.

தேவி தன் குணச் சிறப்புக்களைத் தானே யறிந்தவள். அத்தகைய தேவியின் குணச் சிறப்புக்களை வேறு யாரால்தான் அளந்து கூறமுடியும். எல்லாவற்றின் ஆத்மாவாகவும், அனைத்திற்கும் வித்தாகவும், அனைத்திற்கும் ஆதாரமாகவும், விளங்குகின்ற சக்தியானவள் பக்தர்களுக்கு அருள் புரிவதை முன்னிட்டு உருவங்கள் கொண்டு விளங்குகின்றாள். எனவே அந்தத் தேவியின் திருவடிகளை வணங்கி, அன்னையே! உன்னை வழிபடும் அடியவர்களின் சகல தீவினைகளையும் நீக்கிப் பேரானந்தப் பெருவாழ்வைக் கொடுக்க உன்திருப் பாதங்களைத் தொழுகின்றேன். உலக பந்தங்களில் சிக்கி அல்லலுற்று உன் திருப்பாதமே சரணமென்று உன்னை வந்து வழிபடும் அடியவர்கள் அனைவருக்கும் உன் திருக்கண்பார்வை அருள் பாலிக்க உன்பாதம் வேண்டுகின்றேன்.

வாழ்க அம்பிகையின் அடியவர்கள், வளர்க அன்னையின் திருவருள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்பிகை துணை

# கோணமலையாள் oooooooooooooooo

## சகல சௌபாக்கியங்களேயும் அளிக்கும் பத்திரகாளி

காளி என்று சொன்னவுடன் பயங்கரமான முகமும் கோரப்பற்களும் விரிந்து பரந்த சடாமுடியும் கொண்ட கருநிறமுள்ள ஒரு பெண்ணின் உருவமே மனக்கண் முன் நிற்கிறது. ஆனல் பத்ரகாளி என்னும் சொல்லின் கருத்து மங்களத்தைத் தரும் நீலநிறமுள்ள தேவியைக் குறிக்கும். அவளுடைய திருநாமங்களை நாம் சிறிது உற்று நோக்குவோமானல் அவளுடைய உண்மையான அன்புவடிவம் எங்களுக்குப் புலனுகும்.

**ஜுவாலாமுகி:**

அக்னிச் சுடரைக் கக்கும் நாக்குப் படைத்தவள், முகம் படைத்தவள் என்பது மேற்படி சொல்லின் கருத்தாகும். பக்தர்களை துன்புறுத்தும் துஷ்டர்களை அடக்குவதில் சொல்லினலேயே செய்யும் வல்லமையுள்ளவள் என்பது இதன் பொருளாகும்.

**வைஷ்ணவி:**

விஷ்ணுவின் சக்தி வடிவமானவள் என்பது மேற்படி சொல்லின் கருத்தாகும். உலக மக்களுக்கு செல்வம், சந்தானம், வீரம், வெற்றி எல்லாவற்றையும் அளித்து அன்போடு அரவணைத்துக் கொள்பவள் என்பது இதன் பொருள்.

**பிர்ம்மாணி**

உலகமாகிய நாடக மேடையிலே எல்லா ஜீவராசிகளையும் படைத்து ஆடவிட்டு அதைக்கண்டு ரசிக்கும் பிர்ம சக்தியானவள். சிருஷ்டியில்லையேல் காத்தல், அழித்தல் என்பன இல்லாது உலகமே அழிந்துவிடும். அவ்விதம் அழிந்துவிடாது உலகை தொடர்ந்து இயக்கிக்கொண்டிருப்பவள் என்பதே உட்பொருளாகும்.

**திரிபுராந்தகி:**

முப்புரவடிவமான அரக்கர்கள் உலக மக்களைத் துன்புறுத்தியமையால் அவர்களை அழித்தற்பொருட்டு சிவனிடமிருந்து தோன்றிய பராசக்தியாவாள். ஆகவே தீயவர்களை அவர்களின் தீய செயல்களுக்காக அழிக்கின்றுளேயல்லாது நல்லவர்கட்கு எப்பொழுதும் தீங்கிழைக்க மாட்டாள்.

**சரநுதா:**

தேவர்களால் போற்றப்பட்டவள். பத்மாசுரனை அழிப்பதற்கு சிவனுக்கும் ஹம்சனை அழிப்பதற்கு கிருஷ்ணபரமாத்மாவுக்கும் உதவிசெய்து தேவர்களின் இடுக்கண்ணைத் தீர்த்தவளாகையால் தேவர்களால் எப்பொழுதும் போற்றப்படுபவள்.

**ஆசிருதரக்ஷ போஷஜனனீ:**

அடைக்கலமென்று வந்த பக்தர்களை ஆட்கொண்டு அவர்களைத் துன்பத்தினின்றும் காப்பாற்றி இன்பங்களை அளித்து தாய் போற் பராமரிப்பவள் என்பதாம்.

**சித்ரூபீ:**

அறிவு வடிவினள். உடற்பலம், பொருட்பலம், எல்லாம் இருப்பினும் சிறந்த அறிவு இல்லையானல் இவையெல்லாம் வீணுக்கப்படுவதை உலகில் கண்கூடாகக் காண்கின்ரேம். ஆகையினல்தான் உலக மக்களுக்கு அறிவொளியாய் நின்று அவர்களை மேன்மையான காரியங்களை செய்யும்படி தூண்டி நற்கதி நல்குபவளாம்.

**சூலினி:**

தீயவர்கள் கண்டு நடுங்கும் வண்ணம் முப்பிரி சூலம் என்னும் ஆயுதத்தை கையில் தாங்கி நிற்பவள். விரோதி ஆயுத பலத்தைக் கண்டே பயப்படுகிருன். இக்காலத்தில் அணுகுண்டு முதலான ஆயுதத்தை வைத்துக் கொண்டிருக்கும் நாடுகளைக் கண்டு ஏனைய நாடுகள் பயப்படுவதுபோல ஆயுதமென்பது விரோதிகளைப் பயப்படுத்துவதற்கு முக்கிய கருவியாகும்.

எம்மிடமுள்ள தாமதம் முதலான துஷ்ட குணங்களை அழிப்பதற்கு ஆற்றலுள்ளவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே பொருளாகும். ஆகவே இத்துணை மகிமைகள் பொருந்திய தேவி நாலுகைகள் உடைய காளி என்றும் எட்டு கைகள் உடைய காளி என்றும் பலவிதமான தோற்றங்களிலிருந்து உலக மக்களுக்கு நன்மைகளை நல்குகின்ருள்.

பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கோணமலையில் அமர்ந்திருக்கும் பத்ரகாளி இந்த கும்பாபிஷேகத்தில் நடைபெற்ற சிறந்த பூஜைகளாலும் ஹோமங்களாலும் விஷேசமாக பீஜாக்ரத்துடன் கூடிய ஸ்ரீசூக்த ஹோமங்களினுலும் உருவேற்றப்பட்டு அநுக்கிரகசக்தி கூடியவளாய் உலக மக்களுக்கு சகல சௌபாக்யங்களையும் நல்கும் புதுப் பொலிவுடன் கூடிய பத்ரகாளியாகவும் விளங்குகிருள் என்பதில் ஐயமில்லை. இக் கும்பாபிஷேகத்தை நடாத்தியவர்களும் இதைக் கண்டுகளித்தவர்களும் வசதியின்மையால் நேரில் காணுது மனக்கண்முன் கண்டு இன்புற்றவர்களும் பொருளுதவி செய்தவர்களும் சரீர உதவி செய்தவர்களும் இப் பத்திரகாளியின் சகல சௌபாக்கியங்களும் பெறவேண்டுமென்று பிரார்த்தித்து அவளுடைய திருவடிகளைப் பணிந்து போற்றுவோமாக.

சுபம்.

**சி. சுப்ரம்மண்ய சாஸ்திரிகள்**
*அதிபர், சிவானந்த குருகுலம்*
*ஸ்ரீலங்கா.*

*1-2-80*

★

# திருகோணமலைப் பதிகம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பெரும் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

— **திருஞானசம்பந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "அம்பிகையின் கடைக்கண் நோக்கு"

வியாகரண சிரோமணி
(அண்ணாமலை சர்வகலாசாலை)
**பூரண. தியாகராஜக் குருக்கள்,** B. A. Hons. (Cey.),
சம்ஸ்கிருத, இந்துநாகரிக விரிவுரையாளர்,
சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.

ஓருருவம், நாமம், குணம், குறியற்ற இறைவன் உயிர்கள்மீது கொண்ட தனிப் பெருங் கருணை காரணமாக, ஆன்மாக்கள் மனத்தால் நினைத்தும், வாயால் வாழ்த்தியும், உடலால் வணங்கியும் உய்வடைவதற்காக தனதிச்சையினால் பலவகைத் திருமேனிகளைக்கொண்டருளுகின்றான். உயிர்களின் உள்ளத்திலே நாதவடிவாயும், விந்துவடிவாயுமிருந்து அறிவைத்தரும் நிலையே அருவத் திருமேனி - சிவம் சக்தி, நாதம், பிந்து என்பன. இவ்வாறு அருவ நிலையிலுள்ள இறைவன் உருவம் கொள்வதற்கு முன் முகம், கை, கால் முதலிய உறுப்புக்களின்றி ஒளிப்பிழம்பாக விளங்குவான். இதுவே அருவுருவத் திருமேனி - சிவலிங்கம் என்பது. உலகினை ஆக்கிக் காத்து அழிப்பதற்காகவும் அவரவர் வினைகளுக்கேற்ப அவர்களுக்கு அருளவும் அழிக்கவும் பல திருமேனிகளைக் கொண்டருளுவான். அவை மஹேஸ்வர மூர்த்தங்கள் எனப்படும். சந்திரசேகரர், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்திகள் எல்லாம் உருவத்திருமேனியிலடங்கும்.

இவ்வாறு இறைவன் படைத்தல் முதலிய பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்றான். படைக்கும்போது பிரமனாகவும் காக்கும்போது விஷ்ணுவாகவும், அழிக்கும்போது ருத்ரனாகவும் ஆகின்றான்.

இறைவனுடன் - சிவத்துடன் ஒன்றாகக் கலந்திருப்பதே சக்தி. இறைவன் எவ்வெவ்வுருவம் தாங்குகின்றானோ, அந்த உருவத்திற்குத் தக்கபடி சக்தியும் மாறிக்காட்சியளிப்பாள். ''எத்திறம் நின்றானீசன் அத்திறமவளும் நிற்பள்'' என்று கூறுவதால் இதனை அறியலாம். ஆகவே இறைவன் பிரமனாக வரும்போது சக்தி சரஸ்வதியாகவும், விஷ்ணுவாக வரும்போது லக்ஷ்மி எனவும், ருத்திரனாகத் தோற்றும்போது துர்க்கையாகவும் மாறுகிறாள் சக்தி. சக்தியின்றேல் சிவமில்லையல்லவா?

மேலும் இறைவன் வேறொன்றையும் கருதாமல் தன்னிலையில் தானிருக்கும்போது ஒருவனாய் 'சிவம்' என்ற நிலையிலிருக்கும் போது அவனுக்குஒரு செயலுமில்லை. எனவே செயல் செய்வதற்கு வேண்டிய உருவம் முதலியனவும் இல்லை, செயலொன்றும் செய்யாது சும்மாயிருப்பவனைப் பார்த்து, ''உனக்குச் சக்தியில்லாவிட்டால் சிவனேயென்று சும்மாயிரு'' என்று கூறுகின்றோமல்லவா! இவ்வாறுள்ள சிவன் தனக்கேயுள்ள பெருங் கருணை காரணமாக-உயிர்களுக்காக ஏதேனுமொரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும்போது தானும் - சக்தியுமாக - சிவமும் சக்தியுமாக இரு கூறாகி விளங்குகின்றான். சிவமும் சக்தியுமாக இரண்டாகியபோதும், இரண்டும் தனித்தனிப் பொருள்களல்ல. எனவே சிவமென ஒரு பொருளாயிருந்த இறைவன் சிவம் சக்தியென இருகூறாய் இயைந்துநிற்கும் நிலையைக் காட்டுவதே ''அர்த்தநாரீஸ்வரர் - மாதொரு பாகன்'' என்னும் வடிவம் இறைவன் ஒரு பகுதியும், இறைவி ஒரு பகுதியுமாக ஒன்றாகத் தோற்றும் உருவமே இது.

நெருப்பில் சூடுபோல இணைபிரியாதுள்ளது சக்தி. இதனையே கவிச்சக்கரவர்த்தி காளிதாசன்:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வாகர்த்தாவிவ சம்ப்ருக்தௌ வாகர்த்த ப்ரதிபத்தயே ।
ஜகத: பிதரௌ வந்தே பார்வதீ பரமேஸ்வரௌ ||''

சொல்லும் பொருளும்போல் இணைந்துள்ளவர்களும், உலகின் பெற்றோர்களுமான பார்வதி பரமேஸ்வரனை வணங்குகின்றேன் என்று கூறுகின்றார்.

மேலும்,

''அறிவினில் அருளால் மன்னி
அம்மையோ டப்பனுகிச்
செறிவொழி யாதுநின்ற
சிவனடி சென்னி வைப்பாம்''

எனச் சிவஞானசித்தியாரில் கூறுகின்றார். இவ்வாறு இறைவனும் சக்தியுமாக உலகினை இயக்குகின்றனர்.

மலையிலிருந்து நதி உற்பத்தியாகின்றது. அந்நதி பூமிக்கு வந்தால்தான் அதன்மூலம் மாந்தர் பயன்பெறலாம். வானிலே மேகங்கள் நீரினைத் தாங்கி உலவுகின்றன. அவை மழையாகப் பூமியின் மீது பொழிந்தால்தான் பயிர்க்குலம் தழைக்கும். வான்மண்டலத்தில் சஞ்சரிக்கும் காற்று, ஜீவராசிகளோடு கலந்து அவைகளின் நாசிவழியாக நுழைந்து உடலுள் சென்றால்தான் அவை உயிருடன் உலவமுடியும். வெளியில் பரந்திருக்கும் சூரிய கிரணங்கள் பூமியை வந்தடைந்தால்தான் பருவகாலங்கள் உண்டாகும் - தட்ப வெப்ப நிலைகள் அமையும். இவை தாமாக இயற்கையாக நிகழக்கூடியவை. இது போலவே எங்கும் பரந்துள்ள - உள்ளீடு பொருளாயிருந்து இவற்றை இயக்கும் - இறைவனின் தனிப்பெரும் சக்தியான திருவருளும் உயிர்கள்மேற்கொண்ட தனிப் பெருங் கருணை காரணமாக பூமியிலே இறங்கி வந்து அவதரித்து அருள்பாலிக்கின்றது. எல்லையில்லாத அருட்பெருஞ் சக்தியான - உலகமாதாவுக்கு - எல்லையிட்டு உருவமுங் கொடுக்கின்றோம். ஆலயமும் அமைத்து அவளருள் பெற விழைகின்றோம். அன்னையை நவராத்திரி காலத்தில், மக்களின் நல்வாழ்வுக்கு மிக இன்றியமையாததான கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை வழங்கி அருள் புரியும் கலைமகளாகவும், அலைமகளாகவும், மலைமகளாகவும், அன்னையைப் போற்றிச் சக்தியின் பூரண அருளைப் பெறுமுகமாக வழிபடுகின்றோம்.

''லக்ஷ்மீ ப்ரதான சமயே நவ வித்ருமாபாம்
வித்யா ப்ரதான சமயே சரதிந்து சுப்ராம் ।
வித்வேஷி வர்க்க நிசயேச தமால நீலாம்
தேவீம் த்ரிலோக ஜநநீம் சரணம் ப்ரபத்யே ||''

ஆதிசக்தியாகிய தேவி ஒருத்தியே ஆன்மாக்களுக்கு வலிமையைக் கொடுத்து எதிரிகளை அடக்க நீலநிறமுள்ள துர்க்கையாகவும் செல்வம் தர செந்நிறமுள்ள லக்ஷ்மியாகவும் கல்வியை வழங்கும்போது சரத்காலச் சந்திரன்போல் வெண்ணிறமமைந்த சரஸ்வதியாகவும் ஆகின்றாள். அத்தகைய தேவியை சரணடைகின்றேன் என்பது இதன் பொருளாகும்.

''தேவாநாம் கார்ய சித்யர்த்தம்
ஆவிர்பவதி சா யதா ।
உத்பந்நேதி ததா லோகே
சா நித்யாப்ய பிதியதே ||''

நித்யமாக விளங்குகின்ற தேவியானவள் தேவர்களின் காரியங்கள் நிறைவடைய தோன்றுகின்ற வேளையில் ''உத்பந்நா'' அவதரிக்கின்றாள் என மொழிகின்றோம்.

இவ்வாறு அசுரர்களை அழிக்கப் பயங்கர உருவுள்ள ''காளி'' எனவும், அருள் மாரி பொழிவதால் ''மாரி'' எனவும், உலகினைப் பரிபாலிக்க இமைக்காத மீனினது போன்ற கண்களையுடையவளாதலால் ''மீனாக்ஷி'' (அக்ஷி - கண்) எனவும், கடைக்கண் நோக்கினாலேயே பக்தர்களின் காமங்களை - விருப்புக்களைப் பூர்த்திசெய்வதால் ''காமாக்ஷி'' எனவும் பல உருவங்களில் தோன்றி அருள்புரிகின்றாள்.

இப்பாரினிலே பார்வைகள் பலவிதம், தெய்வங்களின் பார்வை, துர்த்தெய்வங்களின் பார்வை, கிரகங்களின் பார்வை, நல்லோரின் நற்பார்வை, தீயோரின் தீய பார்வை எனப் பலவிதம். பார்ப்பவர்களின் தகுதிக்கும் அந்தரங்கத்திற்கும் தக அவை மாறுபடுவன. 'சுபதிருஷ்டி' என்றால் சுபநோக்கு. 'அசுபதிருஷ்டி' எனில் தீய நோக்கு. தெய்வங்கள் பக்தர்களின் மன விருப்பைப் பூர்த்திசெய்யப் பார்க்கும் பார்வை அருட்பார்வை, கருணை நோக்கு எனப்படும். அசுரர்களை அழிக்க நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது கோபப் பார்வை. தீய கிரகங்கள் கெட்ட இடங்களில் நின்று பார்த்தால் அது தீய பார்வை. அசுபதிருஷ்டி எனப்படும். செவ்வாய் பார்ப்பதனால் விளையும் பலன்கள் சொல்லிலடங்கா. எத்தனையோ போர்கள் மூண்டு - உலக அழிவுக்கே காலாகின்றது அப்பார்வை. அதுபோல மாந்தரிலும் பல திறப்பட்டவர்கள் உளர். சாது சனங்களில் மகான்களின் பார்வை விழுந்தால் பலவித நன்மைகளும், துர்ஜனங்களின் தீய வஞ்சப் பார்வை படின் துளிர்விட்டுப் பூத்துக்காய்த் துள்ள கனிதரு மரங்களே கணப்பொழுதில் கருகி அழிந்து விடுவதையும் நாம் காண லாம். அதுமட்டுமா! ஒரு மங்கலமான காரியம் நிகழும் வேளையில் சிலர் மனப் பூர்வமாக ஆசி வழங்குவர். ஒரு சிலர் வயிற்றெரிச்சல் உள்ளே புகைய மேலெழுந்த வாரியாக உலக ஒப்புக்குப் பார்ப்பார்கள். அத்தகையோரின் பார்வையில் ஒருவர் விழ நேர்ந்தால், அக்குடும்பமே சின்னாபின்ன மாகிவிடும். ஆனால் கருணைக்கடலாக விளங் கும் ஞானகுருவின் அருட்பார்வை விழுமே யானால் அறம் பெருகும்; அன்பு வளரும்; ஆற்றல் மிகும்; இன்பம் இடையறாது கிட் டும்; ஆறாத்துயரும் தீரும்.

மேலே கூறியவை உலகியற் சார்புடை யவை, ஆனால் தெய்வீகநோக்கு அப்படியல்ல. அகில உலகினையும் திருவருட்பார்வையினால் ஆட்கொள்பவர்களன்றோ! தெய்வங்கள்.

நெருப்பிற் சூடுபோல் இறைவனுடன் இணைபிரியாதுள்ளவளே சக்தி. பாலூட்டித் தாலாட்டி வளர்த்த அன்னை தன் பிள்ளை களிடம் ஒரவஞ்சனை புரிவாளா? உண்மை யான தாய் சிறிதும் வித்தியாசம் காட்டவே மாட்டாள். அகிலலோக நாயகியான - அன்னையின் கிருபாகடாக்ஷம் - கடைக்கண் ணோக்கு ஒருவர்மீது பட்டால், அதாவது இறைவியின் கடைக்கண் பார்வையே சொல் லரிய பலனைத் தருமெனில், அம்பிகையின் முழுப்பார்வையும் ஒருவர்மீது விழுமே யானால் அவர் அடையும் பேறுகளைக் கூற வும் வேண்டுமா? தனம் கல்வி தளர்விலா மனம், தெய்வ வடிவு, வஞ்சமில்லா உள்ளம், நல்லனவெல்லாம் சித்திக்குமென அபிராமி பட்டர்

''தனந்தரும் கல்விதரும் ஒருநாளும்
தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாந்தரும்
அன்பரென்பவற்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக்கண்களே''


என்று அழகாகக் கூறுகின்றார். எனவே இறைவனுடன் இரண்டறக் கலந்திருப்பவ ளும், உயிர்கள்மீது கருணையினால் பற்பல உருவங்களில் காட்சிதந்தருளுபவளும், பல வித பார்வைகளிலும், தனது தூயகடைக் கண் நோக்கினாலேயே பெறற்கரிய பேறுகளை வழங்குபவளுமான இறைவியின் பெரு மையை யாரால் அளவிடமுடியும்?

தக்ஷிணகைலாசமெனப் புகழ் பெற்ற தும், வரலாற்றுச் சிறப்புமிக்கதும் தேவா ரப் பாடல் பெற்றதுமான திருக்கோணமலை யிலே, பழமையும் பெருமையும் மிக்க பல ஆலயங்களுள், பற்பல அற்புதங்கள் புரிந்து கண்கண்ட தெய்வமாக விளங்கும் பத்திர காளி கோவிலும் ஒன்று. இவ்வாலயத்தின் பரிபாலகராயிருந்து அன்னையைத் தன் சொந்தத் தாய்போல் அன்பு பாராட்டி நித்திய, நைமித்திய பூசைகளை குறையின்றி நடாத்தி வருகின்ற பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் அவர்களின் நன் முயற்சியினாலும், பக்தர்களின் ஒத்துழைப்பினாலும் திருத்திப் புதுப் பொலிவுடன் ஆகம விதிக்கமைய அமைக்கப்பட்டு விளங்கும் ஆலயத்திலே, அன்னை பத்திரகாளியானவள் வீற்றிருந்து அருள்மழை பொழிகின்றாள். ஸ்நபன மண் டபத்தில் ஒருபால் அலைமகளான லக்ஷ்மீ தேவியும், மறுபக்கம் கலைமகளான சரஸ்வதி தேவியும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்களில் வீற்றிருந்து அருள்புரிகின் றனர். இவ்வாறு முச்சக்திகளும் ஓரிடத்தில் அமைந்து அருள்புரிவது இலங்கையில் இவ் வாலயத்தில் மட்டுமே நாம் காணக்கூடிய அற்புதக் காட்சியாகும்.

எனவே நாமும் பத்ரகாளி அம்மனை உள் ளன்புடன் பாடிப்பரவி அன்னையின் கடைக் கண்ணோக்கினால் பலவிதமான பேறுகளையும் பெற்றுப் பூரணமான ஆனந்தவாழ்வு பெற முயலுவோமாக.


சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பலில் வந்திறங்கிய சிங்கவாகனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அராலி தெற்கைச் சார்ந்த
சிற்பக் கலைஞர் திரு. பன்னீர்ச்செல்வம் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பத்திரகாளி தேவியின் பெருமை

சோ. சுப்பிரமணியக் குருக்கள்

காளி என்றால் கருப்பு நிறமுடைய தேவி எனப் பொருள்படும். கருப்பு நிறம் தாமத குணத்தைக் குறிப்பது. பரம்பொருளின் ஐந்தொழில்களில் சங்காரத் தொழிலுக்குரியவள் காளிதேவியாவாள். சங்காரத்துவமே இரட்சகத்துவமும் ஆகும். தீமைகள் முதிர்ச்சி அடையும்போது, அவைகளை அழித்து நன்மைகளைத் தோற்றுவிக்கச் சங்காரத் தொழிலை மேற்கொள்கிறாள் தேவி.

மனிதனிடத்திலுள்ள ஆணவம் முதலிய அசுர குணங்களையும் நோய் துன்பங்களையும் அழிக்கின்றவள் காளி. தீய குணங்களை அழிப்பது, மனிதர்களை நல்லவர்களாக்குவதற்கும் நோய் துன்பங்களை நீக்குவது அவர்களைச் சுகதேகியாக வாழச் செய்வதற்குமாகும்.

**லக்ஷ்மீப்ரதான சமயே நவவித்ருமாபாம்**
**வித்யாப்ரதான சமயே சரதிந்து சுப்ராம்**
**வித்வேஷிவர்க்கவிஜயேபி தமால நீலாம்**
**தேவீம் திரிலோகஜநநீம் சரணம் பிரபத்யே.**

தேவி மகாத்மியத்திலுள்ள இத்தோத்திரத்தில் மூவுலக மாதாவாகிய அன்னை ஐஸ்வரியத்தைக் கொடுக்க மின்னல்போன்ற பொன்னிறமுடைய லக்ஷ்மியாகவும் கல்வி, ஞானம் அறிவுதர வெண்ணிறமுடைய சரஸ்வதியாகவும் சத்துருக்களை அழிக்க நீல நிறமுடைய துர்க்கை, சண்டிகை, காளியாகவும் விளங்குகிறாள் எனக் கூறுகின்றது.

**"தாராத்வம் ஸுகதாகமே பகவதி! கௌரீதி சைவாகமே"**

என்று தொடங்கும் பாடலில் எல்லா மதத்தவர்களும் வழிபடும் தேவி ஒருவளே எனச் சொல்கின்றது. இங்ஙனம் எல்லாமாக விளங்கும் சக்தி மிகமிக உயர்ந்த நிலையில் வாலை, திரிபுரை புவனையாகவும் விளங்குகின்றாள். உமானந்த நாதர் எழுதிய நித்தியோற்சவ பத்ததியில் குறிப்பிடப்பட்ட ரச்மிமாலா ஸ்தோத்திரத்தில் எல்லா தேவ தேவிகளும் மகாதேவியின் வெவ்வேறான ஒளிக்கிரணங்கள் எனவும், அங்க, உபாங்க பிரத்தியங்கமாக உள்ளன எனவும் விளக்குகின்றது.

மந்திர மகார்ணவம், மந்திர மகோததி, மந்திர ரத்னாகரம் என்னும் நூல்களில் சாக்த நெறியில் சிறந்த உபாசனைப் பிரிவுகள் பத்து எனவும் அவை தசமகாவித்தைகள் எனவும் அவை ஒவ்வொன்றுக்கும் பல பிரிவுகள் உண்டெனவும் கூறப்படுகின்றது. அவையாவன காளி, தாரா, சோடசீ, புவனேஸ்வரி, பைரவி, சின்னமஸ்தா, தூமாவதி, பகளாமுகி, மாதங்கி, கமலா என்பனவாம். இவைகளுள் முதலாவதாக கூறப்படுவது காளிகாதேவியின் உபாசனா விதியே. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஸ்ரீ தக்ஷிண காளி என்னும் பெயரால் உபாசனை செய்து உயர்நிலை அடைந்தார். அவருடைய சிஷ்ய பரம்பரை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் என்னும் பெயரால் உலகம் முழுவதும் பரவி இருக்கிறது. காளி கோபநிஷத்தில் இத்தேவியின் வழிபாட்டால் ஒருவன் உலகத்திற்கு தலைவனாகவும், லக்ஷ்மீபதியாகவும் எல்லா வேதங்களையும் அறிந்த பிரம்ம தேவனைப்போலவும், எல்லோருக்கும் குருவாகவும், எல்லோராலும் வணங்கப்படுபவனாகவும், எல்லா தீர்த்தங்களிலும் மூழ்கிய பயன் பெற்றவனாகவும், எல்லா யாகங்களையும் செய்த தீட்சிதனாகவும் இறுதியில் தானே சதாசிவ ரூபமாகவும் ஆகிறான். இவ் உபாசனையால் தாரா மந்திரம், துர்க்கா மந்திரம் இவற்றிலும் சித்தி பெறுகிறான்.

"ஆத்ம சக்தைர் விருத்தயே காளீ முபாஸீத"

ஆன்மசக்தி வளர்ச்சி அடையக் காளியை வழிபடுக.

- (மகாவித்யா சூத்ரசிரந்தாவள்)

★ தாராதேவியின் உபாசனையால் வாக்கு சித்தி உண்டாகும். சுக்லா, கிருஷ்ணா, சரஸ்வதி, வித்யாராக்ஞீ என்பன இத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவியின் ஏனைய வடிவங்கள். மகாயான பௌத்தர்களின் பிரதான தேவதை இது.

★ சோடசி, திரிபுரசுந்தரி, லலிதா எனக் கூறப்படுவது மூன்றுவதாகும். ஸ்ரீ சக்கர பூஜை இதற்கு உரியதே. சியாமளை, வாராகி, அன்னபூர்ணு, அஸ்வாருடா என்பனவும் ரஸ்மிமாலா ஸ்தோத்திரத்திலுள்ள ஏனைய தேவ தேவிகளும் இதற்கு அங்கங்களாகும். இவ் உபாசனையால் ஞானம் மோக்ஷம் உண்டாகும்.

★ உத்தம சாந்தியை விரும்புகிறவன் நாலாவது வித்தையான புவனேஸ்வரியை உபாசிக்கவேண்டும். புவனேஸ்வரி தேவதா அதிஷ்டானமாக உள்ளது சாக்த தரிசனம் என்பர் பெரியோர். திருமூலர் கூறும் புவனுபதியும் இவளே.

★ ஐந்தாவதான பைரவி என்பது சோடசி மந்திரத்தைப் போல திரிகூட வடிவமாய் கல்வி ஞானத்தை கொடுப்பதாக உள்ளது. இந்த பைரவி மந்திரம் திரிபுரசுந்தரி ஆவாகனத்திலும் உபயோகமாகிறது.

★ ஆறுவதான சின்னமஸ்தா அல்லது பிரசண்டசண்டிகை என்பது தசமகா வித்தையின் சமஷ்டி உருவம். இவ் உபாசனையால் சரீரத்துள்ள பிரம்ம, விஷ்ணு, ருத்ர கிரந்திகள் சேதிக்கப்பட்டு சிவதரிசனம் உண்டாகின்றது.

★ தூமாவதியே ராத்ரி தேவியாகும். ராத்ரி சூக்தம் இதுபற்றியதே. வாருணி, ஜேஷ்டா, சீதளா என்பன இதன் மற்றய வடிவங்கள். இவ் உபாசனையால் நோய்நீக்கம் உண்டாகும்.

★ பகளாமுகி என்பது ஸ்தம்பன சக்தி. யோகசித்திக்குத் தடையான சகல எதிர்ப்பு சக்திகளையும், எதிரிகளையும் அடக்குவதில் உபயோகமாகிறது.

★ மாதங்கி என்பது மற்றொரு வகையில் மந்திரிணி எனவும் சொல்லப்படும். ஸ்ரீ வித்தையின் அங்கமாக உள்ளது. இவ் உபாசனையால் மந்திரசித்தி, வாக்கு சித்தி என்பன உண்டாம்.

★ ஐஸ்வரியத்தை விரும்புகிறவன் கமலாத்மிகா வித்தையை உபாசிக்க வேண்டும். சோடசீ உபாசனையோடு இது சேர்ந்து விளங்குவது.

இங்ஙனம் கூறிய தசமகா வித்தைகள் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாய் விளங்குவது அறியத்தக்கது. இவைகளின் விளக்கங்களை ஸ்ரீ அமிர்தானந்த யோகி அவர்களும் ஸ்ரீ காவிய கண்ட கணபதி சாஸ்திரிகளும் விளக்கமாக எழுதி இருக்கிறுர்கள்.

சர்வ சக்திமானுகிய பரம்பொருளுக்குப் பல கோடிக்கணக்கான ஒளிக் கிரணங்கள் உண்டு. உபாசகன் தன் மன ஒருமைப்பாடு பக்தி சிரத்தை, குருசேவை என்பவற்றுல் ஒரு ஒளிக்கதிரைத் தன் வசமாக்கி அளவிறந்த ஆற்றல் பெற இயலும். அவ் ஒளிக்கிரணத்துக்கு ஏதாவது ஒரு பெயர் அதாவது கணபதி, முருகன், சிவன். விஷ்ணு, பத்திரகாளி, துர்க்கா என்று எப்பெயர் எவ்வுருவம்கொண்டு தியானித்தாலும் அவ்வுருவில் வந்து அனுக்கிரகம் செய்கிறது. உபாசகன் தான் வழிபடும் தெய்வ வடிவங்களுக்கும் உயர்ந்த குணுதிசயங்களுக்கும் ஏற்றபடி தன் நிலையை ஒழுங்கு படுத்துதல் வேண்டும். பிரமசர்ய ஒழுக்கமில்லாதவர் தெய்வ உபாசனையில் தீவிரமாக ஈடுபடுதல் இயலாததொன்றுகும். ஜீவ நிலையில் இருந்து கடவுள் நிலை எய்திய சில சிறு தெய்வ வழிபாடுகளுக்கு உயர்ந்த சீலங்கள் கட்டுப்பாடுகள் தேவையில்லை. இயம நியமங்களால் தேகதிடம், மனேதிடம் பெறுதோர் உபாசனை வழிகளில் ஈடுபட்டால் தெய்வத் திருவருள் அலை இவன்மீது வீசும்போது அதனைத் தாங்க இயலாதவன் ஆகிறுன். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய கருத்து இது.

இனி மகாகாளியின் தோற்றம் பற்றி சிறிது சிந்திப்போம். தேவிபாகவதத்தில் தட்சயாகத்தை அழிக்கும் பொருட்டு வீரபத்திரரோடு தோன்றியவள் பத்திரகாளி எனக் கூறப்படுகிறது. மற்றொருசமயம் நவராத்திரிகால அஷ்டமியில் அசுரரை அழிக்கத்தோன்றினுள் என்பது ஒரு வரலாறு. மற்றொன்று காலகாலராகிய மகாகாளரின் சக்தியே மகாகாளி என்பது. அதர்வண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்ரகாளி அல்லது பிரத்யங்கிரா என்பது சர்வேஸ்வரருடைய சக்தியாகக் கொள்ளப் படுகிறது. இப்படிக் காளிதேவியின் தோற் றத்தைப் பற்றிய வரலாறுகள் புராணங் களில் பலவிதமாகச் சொல்லப்படுகின்றது. காளியின் வடிவம் நாலுகை, எட்டுக்கை, பத்துக்கை, பதினெட்டுக்கை என்று பல வகையாக இருக்கின்றன. நவராத்திரி காலத் தில் பூஜிக்கப்படும் மகாகாளி, மகாலக்ஷ்மி, மகாசரஸ்வதி என்பவற்றின் சமஸ்டி வடி வமே சாமுண்டி எனவும், துர்க்கா லக்ஷ்மி சரஸ்வதி என்பவற்றின் சமஸ்டி வடிவமே சண்டிகாதேவி எனவும் கொள்ளப்படும். இலங்கையின் பல இடங்களில் சாமுண்டி அல்லது காளி கோவில்கள் ஆங்காங்கு இருக் கின்றன.

இந்தியாவில் கங்காநதி கடலோடு சங்க மிக்கும் இடத்தில் கல்கத்தா நகரம் அமைந் திருக்கிறது. இங்கு ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் வழிபட்ட ஸ்ரீ தக்ஷிண காளிகோவில் சிறப்புற்று விளங்குகிறது. இக்கோயில் அமைந்திருக்கும் இடம் சிறந்த துறைமுக மும் ஆகும். இதேபோல இலங்கையிலும் மகாவலிகங்கை கடலோடு சேரும் இடமான கங்காசாகர சங்கமம் என்னும் இடத்திற்குச் சமீபமாக திருகோணமலை என்னும் சிறந்த துறைமுகப் பட்டினம் விளங்கி வருகிறது. இது தேவாரப் பாடல்பெற்ற சிவஸ்தலமு மாகும். இது தக்ஷிண கைலாசம் எனவும் பெயர்பெறும். இந்த நகரத்தில் ஸ்ரீ பத்திர காளி கோவில் ஒன்று பழம்பெருமை வாய்ந்த தாக விளங்கி வருகிறது. வேறு பல கோவில் களும் உண்டு.

முற்காலத்தில் பெரிய கோவில்களை அமைப்பவர்கள் நகரப் பாதுகாப்பிற்காக வும் ஜனங்களின் நோய் துன்ப நிவாரணத் திற்காகவும் பிரதான கோவிலின் பக்கங் களிலே காளி, மாரி, ஐயனார், வீரபத்திரர், ஷேத்திரபாலர் என்னும் தெய்வங்களுக்கும் கோயில் கட்டி வழிபாடு செய்தார்கள். இவ் வகையில் தக்ஷிண கைலாசத்தில் அமைந்த காளிகோவிலும் திருவருட் பொலிவுடன் விளங்குகிறது. இங்கு நித்திய, நைமித்தி கங்கள் பாரம்பரியமாக ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் குடும்பத்தினரால் நெறிதவறாது நடாத்தப்பட்டுவருகிறது. அவ்வப்போது சிவாகம நிபுணர்களான சிவாச்சாரியர் களாலே கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள், இலட்சார்ச்சனைகள் செய்யப்பெற்றுத் தெய்வசாந்நித்தியம்பெற்று விளங்குகிறது. இங்கு வழிபாடுசெய்து இஷ்டகாமியங்கள் நிறைவேறி மகிழ்ச்சியடையும் பக்தர்களும் நாளுக்குநாள் பெருகிவருகிறார்கள். பழங் காலப் பெரியோர் இவளை வங்காளசிங்கி அஃதாவது வங்காள தேசத்திலிருந்துவந்த சிம்மவாகினி என்னும் பெயரால் அழைத் தனர். இத்தகைய பெருமைவாய்ந்த திரு கோணமலை பத்திரகாளி கோயில் நவாலி யூர் - சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கும்பா பிஷேக நிகழ்ச்சியினால் மேன்மேலுந் திரு வருட்பொலிவு மிக்கோங்கி வளர்ந்துள்ளது.

அன்னையின் அருளால் அனைவரும் இன்புற்று வாழ்க.

## காளி ஸ்துதி

வாளீயுதஸ்ரவண பாளீயுகாலலித சூளீவராஜி வகுளா
கெளீகதாநுகம ராளீகுலாமதுர மாவீ பிரஸிருதகதா
நாளீக திருக்குஸுமை நாளீக பாணிரிஹ காளீயசாம்ஸிஸஹஜா
தாளீதளாப தநுமாலீ சதா பவது காளீ சுபாய மம ஸா.

# Kottravai

## *the goddess of paalai region*

Tolkappiyar includes paalai in the five-fold divisions and also assigns the part of the day and seasons for it. [1] But no separate land is allotted by him for paalai. 2 According to Ilankovadikal paalai is only a transformed region of aridity comprising the parts of mullai and kurinchi.3 This might be the reason for the non-allotment of a separate land for paalai by Tolkaappiyar. Likewise no separate God is mentioned by him for paalai region.

During the Sangam period, Kottravai is worshipped in both the hilly and the forest regions. [4] So, there is no objection in treating her as the Goddess of paalai region formed by the fusion of hilly and pastoral portions of land. [5] Cilappatikaaram sings her glory as the Goddess of paalai. 6 The commentary to the first sutra of iraiyannar akapporul says that the grammarians other than Tolkaappiyar admit Pakavathi and sun as the Gods of paalai region. 7

Kaadu, the term for paalai, can also be interpreted to denote the cremation ground. 8 Kaadu paadiyathu and Kooli padiyathu, the two chapters of Kalinkattupparani speak of the temple of kottravai in the desert region, The temple dedicated to Kottravai in the middst of cremation ground is mentioned in puranaanooru, Some sort of miraculous events are portrayed to show the sanctity of the temple. Even animals take part in her devine service, An elephant carries wood for the hunters to light up the courtyard of her tempie, herd of deer sleeps peacefully beside the fire. Female monkeys wake up the herd to sweep the ground. 9

Kottravai is referred in Sangam literature by various names such as kotti, kottravai and cooli. 10 The word kotti (She of the victory) is derived from the root 'kol' with the addition of the feminine singular derivative suffix iii. The term Kottravai (Mother - goddess of victory) is derived from the same root 'kol' with the addition of tavvai or avvai (both meant mother). Alternatively kottravai may be also interpreted as a compound of cottam and avvai. 11 The word cooli refers to her as the possessor of trident weapon.

Acccording to some scholars the worship of hero - stones (nadukal), the earliest form of worship in paalai region, graduaally developed into the concrete form of a Goddess of victory, kottravai. 12 The maravars or highway robbers, originally belonged to paalai, were recruited in the course of time into the army of the Tamil kings in appreciation of their heroic deeds. By their entry kottravai the Goddess of paalai also became the Goddess of warriors. 13 Tolkaappiyar refers to kottravai as the Goddess of warriors. At the beginning of the war expedition, the warriors used to worship kottravai to bestow them with victory. 14 Nachchinaarkkiniyar is of opinion that nedunalvaadai is addressed to kottravai to seek her favour to pacify the queen's agony of separation by blessing the king with victory. 15 Kottravai showers success upon those who engage in the highway robbery and the seizure of the foe's cattle. 16 As a reward for their successful seizure of cattle, the warriors sacrifice a cow to kottravai. 17 Kottravai refuses to accept the oblations unless it is sprinkled with the blood from the wounded chest of the warriors. 18 Manimekalai and Cilap-

Dr. S. Sathiyamoorthy M. A., Ph D.
Asst. Prof. of Tamil
Sri Ramakrishna Mission Vidyalaya,
Arts College,
Coimbatore Tamil Nadu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

pathikaaram mention the sacrifice of human life and blood to kottravai. [19]

Kottravai resides under the margosa tree. [20] The serrated leaves of the margosa tree is said to have the power of warding off the ghosts. [1] The ghosts are said to be the retinue of kottravai. The riddle put by a lady-ghost to the omniscient Kottravai, is mentioned in two places. [22] Ghosts perform tunankai dance in honour of her. [23] The people of the desert region conduct the possession dance and worship kottravai by impersonating her in a virgin. [24] Kottravai wields a trident and she is said to have had her dwelling in the weapons of war. [25]

Kottravai's victory in war and her beauty is appreciated in Sangam Literature. The wholy womb of kottravai is praised for giving birth to Murugan. [26] The iconographic concept of half female and half male form of Sivan (Ardhanaareesvara) is prevalent in Sangam period. Kottravai shares the left half of the body of her husband Sivan who is having a winkless eye on the forehead. [27] During the purificatory both in the month of thai, one lady marks another lady's forehead with a red tilak to make her look like kottravai. By this incident the poet refers to the fire - eye on the forehead of kottravai The term 'ampaa aadal' can be taken to denote the purificatory bath done in favour of ampaal the kottravai. It deserves mention here that the later tradition exclusively attributes the paavai fasting and the veri purificatory bath to kottravai During ampaa aadal, the maiden ladies seek the grace of kottravai to bestow the country with rain and offer them with good bridegrooms who never desert them. [28] By tying red threads around their forearms and offering oblations the married ladies worshipped kottravai to bless them with the reunion of their husbands, who went on an expedition of war, [29]

The transformation of Kottravai into Parvathi can be traced back to Sangam Literature. "The description of Muruga as Malaimakal Makan and 'kottravai chiruva' in the Tirumurugattupadai shows the real position, because Parvathi or Malaimakal is made identical with kottravai." [30]

Pathittuppattu speaks of kottravai of Ayirai hill as the family deity of the Ceera dynasty. Ceera kings worshipped her and offered her oblations. [31] Kottravai temple in the coozhaa capital is guarded at the gates by the demons. [32] A Kottravai temple in Pandiya country is situated in the Cremation ground. [33] According to Pathittuppattu the forest of Vintiya hill is named after Vintai the kottravai. [34] Akananooru mentions her as the Goddess of forest and talks about her award of white - legged horses to a poet who sang in praise of her Eezhil hill. [35]

1. Tol, Akattinai 9, 10, 2. cf. Maduraik, 314, 326.
2. Tol, Akattinai 5.
3. Cilap. 11: 64 - 67.
4. Kuru 218; 1, patittu 79; 18; 88 : 2 akam 345: 4-7 kali 89:8.
5. Periyapuranam: Thirukuripputtondar: 15 Ilampooranar considers kottravai as the Goddess for both paalai and kurinci Tol. Akattinai 20; Purattinai 4.
6: Cilap: 12. The paalai region and the worship of kottravai are described respectively in the successive chapters kaadukaan kaathai and veduva vari.
7. ''தொல்காப்பியனுர் பாலைக்கு நிலம் வேண்டிற்றிலர்; வேண்டாமையின் தெய்வமும் வேண்டிற்றிலர்; பிறர் பகவதியையும் ஆதித்தனையும் தெய்வம் என்று வேண்டுவர்.''

   Irayanaar Akapporul. I commentary.

   ''தெய்வம், ஆசிரியர் புலப்பட எடுத்தோதிற்றிலரேனும்.........

   பருதியஞ்செல்வனும் திகிரியஞ்செல்வியுமெனக் கொள்க.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cilap: patikam 1-2 Adiyaatku nallar's Commentary See Kali 16:9 - 12 for the worship of the Sun God.

8. kuru 216: 1 - 2; kali 20:20: ain 335: 4:5 puram 246:11, 356: 3-4, 359: 7-8 Tol. puratinai 24: 34-35. The word paalai is used in the sense of cremation ground: Tol. purattinai 24: 30-31 Nachchinaarkkiniyar's commentary.

9. puram 247: 1-7.
Kottravai is said to have witnessed the dance of her husband Sivan in the cremation ground and herself performed marakkaal dance in another context. Kali 1: 8-10; Cilap 20: 37.38; thevaaram 1: 41: 5; 3: 9: 7; 5: 34: 6; Cilap 6: 58-59; 12: (12)

10. kali 89: 8; Tol. purattinai 4; pari 11: 100; murugu 257 - 259; kuru 218: 1; Perum 459: akam 345: 4; 309: 4; puram 247: 4; pathittu 79: *18*; 88: 2.
The word காடு கிழாள் (she of the forest) has become corrupted as காடு காள் in the time of Nachchinaarkkiniyar muruku. 259, of. thevaram 7:32:5

*11*. puram 35: 25; pathittu 88: 14.
Ciru *101*; Cilap. 29: (5); 4; *15*: 80 nar *172*: 4.

kottravai's husband Sivan is called by the name of kottravan - chenthanaar's Thiruveelimilalai Thiruvichaippaa : 2. Cf. Tol. pulli. 52 nachchinarkkiniyar kottantai.

*12*. Taninayagam, Xavier S. Nature in Ancient Tamil poetry, Tamil Literature Society, Tuticorin 1953 pp. 75-76. For the worship of hero - stones see puram 306 and 335.

*13*. Thevaneyappaavaanar, G., Tamizar Madam, Nesamani Pathippakam, Kattuppai extension, North Arcot Dt. *1972* p. *35*.

*14*. Tol. purattinai 4.

15. nedunal: *166-168*.

16. akam *63*; *10-19*; *337*: *7-15* Cilap. *12*: (*21*); (*14*)

17. akam *309*: *1-6*.

18. pathittu *79*: *16-18*

19. mani *6*: *49-53*, Cilap *12*: (*18*), Tol. purattinai: *4* Nachchinarkkiniyar's commentary.

*20*. Akam, *309*: *4* The leaves of margosa tree are used to cure the diseases like smallpox which are supposed to be caused by the furi of kottravai - Cilapuraiperukatturai: 1,

21. puram*281*; *296*; perum *58-59* Nachchi naarkkiniyar's commentary, Mani *7*:*73*

*22*. perum *459*; Kali *89*:*8*; kalinkattupparani: *11*th chapter. Tol. meyppat. *12* Peraasiriyar's commentary.

*23*. perum *459*; Nachchinaarkkiniyar's commentary,

*24*. Cilap *12*

*25*. kuru *218*; *1*, Ciru *94-95*; *102-103* Nachchinaarkkiniyar's commentary. Cilap. *12*; (*14*).

*26*. perum *457-459*; murugu *256*;*258* pari *8*:*126-127*.

*27*. puram *1*: *7-8*; kali *104*: *11-12* murugu *153-154*; Cilap *12*: (*10*).
akam *181* : *16* puram *55*:*4-6*.

*28*. pari *11*:*99-100*; *8083*; *116-121* also see the theme of composition given under the poetry. Thiruvasakam *7*: *14*, *16* Cevvaiccoottuvaar's Paakavatham *10*: *9*: *6*

*29*. kuru *218*; nedunal *141-142*; *166-168*.

*30*. pillai, K. K., A. Social History of the Tamils, University of Madras, *1969* pp. *508-509*.

*31*. pathittu *79*:*12-18*; *88*: *11-14*.

*32*. pattinap. *57* Nachchinarkkiniyar's commentary.

*33*. puram, *247*: 4.

*34*. pathittu *88*; *2*.

*35*. akam *345*:*3-7*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொற்றவை

## பாலைநிலத் தெய்வம்

பேராசிரியர் டாக்டர் எஸ். சத்தியமூர்த்தி அவர்களினது ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கம்

தொல்காப்பியர் ஐவகை நிலங்களுள் பாலையையும் அடக்கியுள்ளார். பாலைக்குரிய பொழுதையும் பருவகாலங்களையும் குறிப்பிடும் தொல்காப்பியர் பாலைக்கு தனியே நிலங் கூறவில்லை. இளங்கோவடிகள் குறிஞ்சியும் முல்லையுந் திரிந்து பாலையாகியுள்ளது என்று கூறுகின்றார். பாலைக்குத் தொல்காப்பியர் தனியே நிலம் வகுக்காததற்கு இது ஒரு காரணமாக இருக்கலாம். இதேபோன்று பாலைக்குத் தனியே தெய்வமும் அவர் கூறவில்லை.

சங்ககாலத்தில் குறிஞ்சி நிலத்திலும் முல்லைநிலத்திலும் வாழ்ந்த மக்கள் கொற்றவையை வழிபட்டு வந்துள்ளார்கள். எனவே குறிஞ்சியும் முல்லையுந் திரிந்த பாலைக்குத் தெய்வமாக கொற்றவையைக் கொள்வதில் எதுவித மறுப்பும் இருக்க முடியாது. கொற்றவையைப் பாலைநிலத் தெய்வமாகப் புகழ்ந்து பாடுகின்றது சிலப்பதிகாரம். தொல்காப்பியர் தவிர்ந்த ஏனைய இலக்கண ஆசிரியர்கள் பாலைநிலத் தெய்வமாகப் பகவதியையும் ஆதித்தனையும் ஏற்றுக்கொண்டுள்ளதாக இறையனார் அகப்பொருள் முதற்சூத்திர உரை கூறுகின்றது.

பாலைநிலத்தைக் குறிக்குங் காடு என்னும் சொல் சுடுகாட்டைக் குறிப்பதாகப் பொருள் படுத்தலாம். கலிங்கத்துப்பரணியிலுள்ள காடு பாடியது, கூளி பாடியது என்னும் இரண்டு அதிகாரங்களும் பாலை நிலத்திலுள்ள கொற்றவையின் கோயிலைப் பற்றிக் கூறுகின்றன. சுடுகாட்டின் மத்தியில் கொற்றவைக்குக் கோயில் இருந்ததாகப் புறநானூறு குறிப்பிடுகின்றது. அக்கோயிலின் தெய்வத்தன்மையை எடுத்துக் காட்ட அற்புதமான நிகழ்ச்சிகள் அங்கே சித்தரிக்கப்பட்டுள்ளன. கொற்றவைக்குப் பணி செய்வதில் விலங்குகள் கூட ஈடுபடுகின்றன. கோவில் அமைந்துள்ள இடத்துக்கு வெளிச்சம் உண்டாக்க வேடுவர்களுக்கு விறகுக் கட்டைகளை யானைகள் எடுத்துச் சென்று கொடுப்பதாக ஒரு செய்தி காணப்படுகின்றது. அங்கே எரியுந் தீக்குப் பின்னால் மான்கூட்டங்கள் படுத்துறங்குகின்றன. கோயிலின் சூழலைக் கூட்டித்துப்பரவாக்குவதற்காக மந்திகள் மான்கூட்டங்களை எழுப்புகின்றன.

சங்க இலக்கியங்களில் கொற்றி, கொற்றவை, கூளி என்னும் பல்வேறு பெயர்களால் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். கொற்றி (வெற்றித் தெய்வம்) என்னும் சொல் 'கொல்' என்னும் அடிச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். அச் சொல்லோடு 'ற்றி' என்னும் பெண்பால் ஒருமை விகுதியுஞ்சேர்ந்து 'கொற்றி' ஆகியுள்ளது. கொற்றவை (தாய் - வெற்றித் தெய்வம்) என்னும் சொல் 'கொல்' என்னும் அதே அடியோடு தவ்வை அல்லது அவ்வை என்பதுஞ் சேர்ந்து தோன்றியதாகும், தவ்வை, அவ்வை என்னும் இரண்டு சொற்களும் தாய் என்று பொருள்படும். கொற்றம், அவ்வை என்னும் இரண்டு சொற்களும் சேர்ந்து கொற்றவை ஆகியுள்ளது என்று இன்னொரு வகையாகவும் கூறலாம். கூளி என்னும் சொல் திரிசூலத்தை உடைய கொற்றவையை உணர்த்துகின்றது.

பாலைநிலத்தின் மிகப் புராதனமான வழிபாட்டு வகையாகிய வீரக்கல் (நடுகல்) வழிபாடு படிப்படியாக வளர்ச்சியுற்று வெற்றித் தெய்வ வழிபாடாக - கொற்றவை வழிபாடாக உருவம் பெற்றிருக்க வேண்டுமென்பது சில பேரறிஞர்களின் கருத்தாகும். பாலைநிலத்துக்கு உரியவர்களாகிய மறவர்கள் அல்லது ஆறலை கள்வர்கள், அவர்களின் வீரச் செயல்களின் காரணமாக காலா காலத்தில் தமிழ் மன்னர்களின் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் படையில் சேர்க்கப்பட்டதின் காரணமாக பாலைநிலத் தெய்வமாகிய

183626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவையும் படைவீரர்களின் தெய்வ மாயினள். படையெடுத்துச் செல்லுங்கால் படைவீரர்கள் தங்களுக்கு வெற்றியளிக்க வேண்டுமென்று கொற்றவையை வழிபட்டுச் செல்வது வழக்கம். மன்னனைப் பிரிந்திருந்த அரசியின் துயரத்தை ஆற்று முகமாக மன்னன் வெற்றிபெற அருளுமாறு கொற்றவைக்கு விண்ணப்பஞ் செய்த பாடலே 'நெடுநல்வாடை' என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும். வழிப்பறி கொள்ளையை வேண்டி நின்றோருக்கும், பகைவரின் ஆனிரைகளை கவர்ந்துவர உறுதி பூண்டோருக்கும் வெற்றியளிப்பவளாகக் கொற்றவை விளங்கினள். பகைவர்களின் ஆனிரைகளைக் கவர்ந்து வெற்றியீட்டியதற்கு நன்றிக்கடனைப் படைவீரர்கள் கொற்றவைக்கு ஒரு பசுவைப் பலியிட்டு வணக்கஞ் செலுத்தினர். பலிப்பொருளைப் படைவீரர்கள் தம் காயப்பட்ட மார்பிலிருந்து வழியும் இரத்தத்தால் தெளித்து அர்ப்பணித்தாலொழிய கொற்றவை அப்பலிப்பொருளை ஏற்க மறுத்தாள். மனித உயிரையும் இரத்தத்தையும் கொற்றவைக்குப் பலியிட்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

கொற்றவை வேப்பமரத்தடியில் உறைபவள். வேம்பின் கருக்கு வடிவில் அமைந்த இலைகள் பேய்களை விரட்டும் சக்தி வாய்ந்தனவாகச் சொல்லப்படுகிறது. பேய்கள் கொற்றவையின் கணங்களாகவே கூறப்படுகின்றன. எல்லையற்ற அறிவுடையவளாகிய கொற்றவைக்கு பெண்பேய் ஒன்று கூறிய நொடிபற்றி இரண்டு இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. பேய்கள் கொற்றவையைப் புகழ்ந்து போற்றித் துணங்கைக் கூத்தாடுகின்றன. பாலைநிலமக்கள் தெய்வம் பிடித்து ஆடுங்கூத்தை நடத்துகிறார்கள். கொற்றவையாக மாறுவேடம்பூண்டு நிற்கும் கன்னிப் பெண்ணை வழிபடுகின்றனர். கொற்றவை திரிசூலத்தைச் சுழற்றுகிறாள். போர் ஆயுதங்களில் அவள் குடியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

போரில் கொற்றவையின் வெற்றியும் அவளது அழகும் சங்க இலக்கியத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. முருகனைப் பெற்றெடுத்ததற்காகக் கொற்றவையின் கருப்பை புகழப்படுகின்றது. பாதி பெண்ணும் பாதி ஆணுமாவுள்ள சிவனின் அர்த்தநாரீஸ்வரர் உருவம் பற்றிய கருத்து சங்க காலத்தில் இருந்திருக்கிறது. இமையா நாட்டமுடைய நெற்றிக் கண் கொண்ட தனது கணவனாகிய சிவனின் இடப் பாகத்தைத் தனக்கு இடமாகக் கொண்டுள்ளாள் கொற்றவை என்று கூறப்பட்டுள்ளது. தை நீராடலில் ஒரு பெண் இன்னொரு பெண்ணின் நெற்றியிலே சிவப்புத் திலகமிடுகிறாள் திலகந்தாங்கிய பெண் கொற்றவைபோல் காட்சி அளிக்க வேண்டுமென்று கருதியே அவள் அப்படிச் செய்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பொழுது கொற்றவையின் நெற்றியிலுள்ள நெருப்புக் கண்ணைப்பற்றிக் குறிப்பிடுகின்றார் புலவர். கொற்றவையாகிய அம்பாளை வேண்டி ஆடும் புனித நீராடலைக் குறிப்பதாக 'அம்பா ஆடல்' என்னும் சொற்றொடருக்குப் பொருள் கொள்ளலாம். பாவை நோன்பும், புனித நீராடலும் முற்றாகக் கொற்றவைக்கே உரியதாக பிற்கால வழக்கத்தில் காணப்படுகின்றது.

நாடு செழிக்க மழை நல்க வேண்டுமென்றும், தங்களை விட்டுப்பிரியாதிருக்கும் நல்ல கணவன் மாரைத் தந்தருள வேண்டும் என்றும் கொற்றவையின் அருள்வேண்டிக் கன்னிப் பெண்கள் நிற்பதை 'அம்பா ஆடல்' எடுத்துக் கூறுகின்றது. போருக்குச் சென்ற கணவன்மார்கள் திரும்பி வந்து சேரவேண்டுமென்று திருமணமாகிய பெண்கள் முன்கையில் சிவப்பு நூலணிந்து பலியிட்டுக் கொற்றவையின் அருளை வேண்டி நிற்கின்றனர். கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். திருமுருகாற்றுப் படையில் முருகனை 'மலைமகள் மகன், என்றும் 'கொற்றவை சிறுவ' என்றும் வருணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டுகின்றது. அங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங்கண்டு கொள்ளப்படுகின்றாள்.

அயிரைமலைக் கொற்றவை சேரமன்னர்களின் குலதெய்வம் என்று பதிற்றுப்பத்து என்னும் நூல் கூறுகின்றது. சேர மன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் கொற்றவைக்குப் பலியிட்டு வழிபாடாற்றிவந்துள்ளார்கள்; சோழ நாட்டின் தலைநகரிலுள்ள கொற்றவைக் கோயில், வாயிலில் உள்ள பேய்களினால் பாதுகாக்கப்படுகின்றது. பாண்டிய நாட்டிலுள்ள கொற்றவைக் கோயில் சுடுகாட்டில் இருக்கின்றது. கொற்றவை என்று பொருள்படும் விந்தை என்னும் சொல்லைக் கொண்டே விந்தியமலைக்காடு தன் பெயரைப் பெற்றுள்ளது. முல்லைநிலத் தெய்வமாகவே கொற்றவையை அகநானூறு கூறுகின்றது. கொற்றவையின் எழில் மலையைப் புகழ்ந்து பாடிய புலவர் ஒருவருக்கு வெள்ளைக் கால் உடைய குதிரைகளைக் கொற்றவை பரிசாகக் கொடுத்ததாகவும் அகநானூறு குறிப்பிடுகின்றது.

★

# கோவும் கோயிலும்

கோணேசர் ஆலயத்தின் பெருமையைக் கூறுவன தக்ஷிண கைலாய புராணம், கோணேசர் கல்வெட்டுப்போன்ற நூல்களாகும். இப்புராணங்களெல்லாம் செய்யுள் வடிவிலே உள்ளன. புராணங்களும் கல்வெட்டும் தரும் செய்திகளைக் "கோவும் கோயிலும்" என்னும் நூல் கதை வடிவில் எடுத்துக் கூறுகின்றது. இதில் குளக்கோட்டு மன்னனுக்கும் கோணேசர் ஆலயத்துக்கும் இருந்த நெருங்கிய தொடர்பைக் காணலாம். நாட்டில் வழங்கிவரும் கதைகளைக்கொண்டு இந்நூல் உருவம் பெற்றுள்ளது.

இதனை எழுதியவர்
திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட
திருமதி பாலேஸ்வரி நல்லரெட்டினசிங்கமாவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனைக்குரிய நாமங்கள்

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம்

ஓம் மஹேச்வர்யை நம
ஓம் ஜகதம்பாயை நம
ஓம் சங்கர்யை நம
ஓம் சிவாயை நம
ஓம் அன்னபூர்ணாயை நம
ஓம் அபயப்ரதாயை நம
ஓம் தயாகர்யை நம
ஓம் கல்யாண்யை நம
ஓம் உமாதேவ்யை நம
ஓம் கலிதோஷ ஹராயை நம
ஓம் அக்ஷராயை நம
ஓம் கல்மஷக்ன்யை நம
ஓம் திரிபுர ஸுந்தர்யை நம
ஓம் மகா வித்யாயை நம
ஓம் ராஜராஜேச்வர்யை நம
ஓம் மகா சக்த்யை நம
ஓம் சித்ரூபாயை நம
ஓம் விஜயாயை நம
ஓம் ப்ரபன்ன துக்க ஹாரிண்யை நம
ஓம் தமோ நாசின்யை நம
ஓம் ப்ரக்ருதி ரூபாயை நம
ஓம் கம்ர விக்ரஹாயை நம
ஓம் நாதரூபாயை நம
ஓம் த்யான கம்யாயை நம
ஓம் தகராகாச ரூபிண்யை நம
ஓம் கருணாம்ருத ஸாகராயை நம
ஓம் ஸ்ரீ பத்திரகாளி காயை நம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவசக்தி

சைவ சமயத்தவர்களால் முழுமுதற் கடவுள் என்று வழிபடும் சிவபிரான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் நிமித்தம் கொண்டருளிய சுத்த தத்துவங்கள் மூன்று. அவை சிவம், சாதாக்கியம், மகேஸ்வரம் என்பனவாம். இவற்றுள் சிவம் அருவமாய் அறிந்தவர்களால் வழிபடக்கூடியவராய் சதாசிவத்திற்கும் மேலானதாய்ப் பராசக்திக்குக் காரணமாய் இருப்பதாம்.

பராசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக ஆதிசக்தியும், ஆதிசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக இச்சாசக்தியும், இச்சாசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக ஞானசக்தியும், ஞானசக்தியின் ஆயிரத்தின் ஒரு அம்சமாக கிரியாசக்தியும் தோன்றின. எனவே இவைகள் நிஷ்கள சக்திகளாகும்.

இச் சக்திகளிலிருந்து யோகிகளாலும் ஞானிகளாலும் கிரியாவான்கள் செய்யும் பூசை நிமித்தம் சாதாக்கியங்கள் தோன்றின.

நாதமென்னும் லிங்கமும் பிந்துவென்ற பீடமும் சேர்ந்தது கன்மசாதாக்கியமென்னும் ஆவுடையாளுடன் கூடிய இலிங்கம் ஆகும். இது சிவசக்தி சுரூபமாகும். இவை பஞ்சகிருத்தியத்திற்குத் துணையாக உள்ளன. சக்தியாகிய இறைவி மேற்கூறிய பராசக்தி, சிற்சக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என ஐந்து சக்தியாகி ஐந்தொழில் நடாத்துவதுடன் ஐந்தொழில் கட்கேற்பப் போக, வீர, கோர அதிகார சக்தி வடிவங்களாயும் நிற்பனவாம்.

போகசக்தி பார்வதியும், வீரசக்தி துர்க்கையும், கோரசக்தி காளியும், அதிகார சக்தி நாராயணனை அதிட்டித்து நிற்கும் நாராயணியுமாம்.

போகசக்தி சகல உலகங்களையும் ஈன்றளித்துக் காப்பாற்றி அனுக்கிரகிப்பவள். வீரசக்தி மகிஷாசுர சங்காரத்தில் ஈடுபட்ட கோலமாய்ச் சகல வெற்றிக்கும் இருப்பிடமாயிருப்பவள்.

கோரசக்தி பயங்கர உருவுடையதாய் வினைகளை அழித்து ஆன்மாக்களை ஈடேற்றும் சங்காரியாவாள்.

அதிகாரசக்தி துஷ்டரை அடக்கிச் சிஷ்டரைப் பாதுகாத்து நிற்கும் திதி என்னும் பஞ்சகிருத்தியம் செய்பவளாம்.

கர்ம சாதாக்கியமாம் சிவலிங்கவடிவில் தியானித்துப் பூசிக்கப்படும் சதாசிவ மனோன்மணி சக்தி பக்குவான்மாக்களுக்கு மலத்தை நீக்கிச் சக்தி நிபாதத்தை அருளி ஆன்மாவைச் சிவத்தோடு சேர்ப்பவளாம். சிவம் சக்தியோடுகூடி உலக சிருஷ்டி நிகழும்படி சங்கற்பித்தலே உலகத்தோற்றமாம். சூரியனில் ஒளிபோலச் சிவபிரான் கருணை வடிவான சக்தியுடன் பிரிவின்றியிருத்தலாகிய வல்லமையே சிவசக்தியாகும்.

இத்தன்மையதாகிய உமை அங்கயற்கண்ணி, மீனாக்ஷி, காமாக்ஷி, ராஜராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மஹேஸ்வரி, நாகேஸ்வரி, காளி, மாரி முதலிய பெயர்களுடனும் உலகில் பிரசித்தமான கோயில்களில் மூர்த்தியாக இடம்கொண்டிருக்கின்றாள். இத்தகைய அம்மை வடிவங்களை வழிபடும் அடியார்கட்கு அருள்கொடுப்பவரும் உமாமஹேஸ்வரராகும் சிவபிரானேயாவர். அம்மையின் திருவுருவங்களில் சிவபிரான் அதிட்டித்து நின்றருள் செய்வார்.

'' உடையாள் நடுவுள் நீயிருத்தி '' என்ற திருவாசகம் இதனை வலியுறுத்துகின்றது.

சிவாகம சிரோமணி,
கிரியாகலாப முக்தாமணி,
பிரதிஷ்டாரத்னம்
**சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்**
பிரதம குரு: ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் கோவில்
தலைவர், அகில இலங்கை சிவப்பிராமணர் சங்கம்
இந்துசமய ஆலோசகர் - கலாச்சார அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விதமான அம்பாளை, பிம்பம், யந்திரம், மந்திரமாகிய வழிகளால் வழிபடலாம். மந்திர வழிபாடு எல்லோராலும் முடியாதது. யந்திர வழிபாடாகும் "ஸ்ரீ சக்கர" வழிபாடு பலராலும் விரும்பி வழிபடப்பட்டு வருகின்றது. ஸ்ரீ சக்கரம் ரேகை, கோணமுறைகளாகவே அமைப்பு உள்ளது. பஞ்ச தசாக்ஷரிமஹா வித்தையில் 3 ஹகாரங்களும், 2 ஹகாரங்களும், சிவாக்ஷரங்களாம். மீதியான (3 லகாரம், 2 லகாரம், ஈ காரம், ஏ காரம்) சக்தி அக்ஷரங்களாம். (ஹ்ரீம்) காரம் மூன்றும் சிவசக்தி வடிவான உபயாக்ஷரங்களாம்.

சக்கரங்களில், 4 சிவசக்கரங்கள், 5 சக்தி சக்கரங்களாக ஏற்பட்ட, ஸ்ரீசக்கரம் சிவசக்தியின் சரீரமாகும்.

பராசக்தி திரிகோண வடிவினள். பரமசிவன் பிந்து வடிவினர். ஆதலின் பிந்துத் திரிகோணங்கட்கு ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கமுடியாத சம்பந்தமுண்டு.

யார் பிருதுவி முதல் சதாசிவம் ஈறான தத்துவங்களைப் பின்னமாக வழிபடுகிறார்களோ அவர்கள் பாபம் செய்தவர்களாகுகின்றார்கள் என ஆருண சுருதி கூறுகின்றது.

இன்னும், லலிதா திரிசதி நாமத்தில், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. ஈசதாண்டவ சாக்ஷிண்யே நம; பரமேஸ்வரனது தாண்டவத்திற்கு சாக்ஷியானவள் என்பதாம். சாக்ஷி என்பது உலகில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் ஆகிய பஞ்சகிருத்தியங்களும், 64 கலை ஞானமுமாம். இவற்றுக்குச் சக்தியே சாக்ஷியாக உள்ளது என்று கூறப்பட்டுள்ளது.

ஈச சக்திநம; காமேஸ்வரப் பிராண நாடிநம்: 1:—

ஈசனுக்குச் சக்தியானவள் என்றும், காமேஸ்வரராகிய சிவபிரானுக்கு தானே "லீலை"யாகிய ஒரு சரீரத்தைச் சுவீகரித்து அதற்குப் பிராண நாடியாகவும் இருக்கின்றாள் என்றும், 'காமேஸ்வரோற் சங்கவாசி நே ந ம' காமேஸ்வரருடைய இடது தொடையில் வசிப்பவள் என்றும்,

'ஈஸ்வரார்த்தாங்கசரீராயை நம; ஈசனுடைய பாதிச்சரீரத்தைக் கொண்டவள் என்றும்,

'ஈசாநாதி பிரம்மமயிநம; பஞ்சபிரம்மஸ்வரூபிணி 'பஞ்சப்பிரமங்களும் நான் என்ற அகங்காரம் நீங்கிச் சச்சிதானந்த பரப்பிரம்மஸ்வ ரூபமாயுள்ளன என்றும், 'பஞ்சப்பிரேதாசநாச் நாணய நம' நான் என்ற அகங்காரம் நீங்கியவழித்தன் செயலற்று நிற்கும் நிலை. பிரேதம் என்பது இயங்கும் நிலையற்றது. எனவே மேற்கூறியன பஞ்சப் பிரமங்களும் சிவ சக்தியின் ஏகரூபம் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இவற்றால் கர்ம சாதாக்கிய வடிவமும் பஞ்சதசாக்ஷரீ மந்திரமும் ஸ்ரீ சக்கர வடிவமும் சிவசக்தி சுரூப வழிபாடேயாகும்.

உலகில் ஜீவன்களினால் கொடும் செயல் எவ்வெப்போது உண்டாகின்றதோ அக்காலங்களில் அவற்றை நிவர்த்திக்கத் துர்க்கை, காளி முதலிய சக்திகள் வெளிப்படுவது இயற்கை; அச்சக்திகளின் வெளிப்பாட்டால் தர்மம் நிலைக்கின்றது. இதனால் தேவி தர்மதேவியுமாகின்றாள். ஆலயங்களில் துர்க்கை காளி முதலியவற்றை வணங்குதலால் புறப்பகையாகிய நாஸ்திகத் தன்மையும் அகப்பகையாகிய காமாதி பகையும் நிவர்த்தியாகின்றன.

குடந்தை வழிவந்து யாழ் உடுவையம்பதி சுயம்பு மூர்த்தியாம் மீனாக்ஷி சுந்தரேஸ்வர, மயூரபந்தியாதீன சிவத்துவிஜராம் குமாரசாமி, சின்னத்துரை, சோமஸ்கந்த சிவாசாரிய அந்தணோத்தமரால் தேவியின் அருளுடன் எழுந்த இந்தக் காளியின் ஆலயத்தில் சக்திமட்டுமல்ல சிவசக்தி வழிபாடாக அமைந்து அடியார்களுக்கு அருள் புரியவேண்டும் என்னும் நன்முயற்சியால் சிவசக்தியேகரூபமாகக் காட்சி கொடுக்கும் ஸ்ரீ சக்கரமும் பூசை செய்யப்பட்டு வருகின்றது என்பது சிறப்புடைய அம்சமாகும். மேற்கூறிய வழித்தோன்றலில் ஒருவராகிய எனது பிதாவும் இத்தேவிக்கு நைமித்திக கருமங்கள் செய்துள்ளார்கள். எனவே இத்தேவி எமது கவுண்டின்யகோத்திர குல தேவியுமாவாள்.

ஆலயம், விக்கிரகம், யந்திரம், பூசை, நித்தியம், நைமித்திக விசேஷங்கள் எல்லாம் பக்தர்களினதும், தேசம், அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவர்களின் நன்மைக்கேயாகும். கும்பாபிஷேகம், யாகம், ஓமம் முதலியகிரியைகளால் தேவியின் அருள் என்றும் ஓங்கும். எமக்கும் தேவியருள் உண்டாகும். தேவியானவள் பக்தர்களைக் காக்கவே கருணை மூர்த்தியாகித் திரிகோணசலத்தில் கோணேசப்பெருமானருளுடன் என்றும் அருள் பாலிக்கின்றாள்.

இதற்கு இக்காலம் '' அருள்மிகு '' என்ற அடைமொழி முதலில் புகுந்து விட்டதே!

## உலக அன்னை வழிபாடு

சக்தி வழிபாடுதான் எல்லா வழிபாடுகளுக்கும் முதலில் தோன்றிய தெய்வ வழிபாடாகக் கருத இடமுண்டு. இயற்கைக்கு இறைமைத் தன்மை கற்பிக்கத் தொடங்கிய காலத்திலிருந்தே சக்தி வழிபாடும் ஏற்பட்டிருக்கிறது. மனிதன் தனக்கு உண்டி கொடுத்து உயிரளிக்கும் பூமியைத் தெய்வமாகப் - பூமாதேவியாக போற்றி வழிபட்டு வந்திருக்கிறான். பெற்று வளர்க்கும் அன்னையைப் போற்றிவந்த புராதன மக்களிடம் பூமாதேவி வழிபாடு தோன்றியது வியப்புக்குரிய ஒன்றல்ல. பூமாதேவி வழிபாடே சக்தி வழிபாடாக விரிந்து பரவி வந்திருக்கின்றது. அள்ளிவழங்கும் அன்னபூரணியாக - தாய்த்தெய்வமாக - அண்டங்கள் யாவையும் ஈன்று பராபரிக்கும் உலக அன்னை வழிபாடாக சக்தி வழிபாடு இன்று காட்சி அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "சக்தியின் வடிவங்கள்"

**சிவ சக்த்யா யுக்த: யதிபவதிசக்த: ப்ரபவிதும்"**

"சக்தியுடன் இணைந்த சிவனே செயல் புரிய சக்தியுள்ளவனுவான்" என்றபடி, அகில லோக நாயகனுன இறைவன் சிவமும் சக்தியுமாகவிருந்து ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கின்ருன். முத்தொழில்களையும் புரிகின்ருன், இறைவனுடன் இரண்டறக் கலந்திருப்பதே சக்தி. "எத்திறம் நின்ருனீசன் அத்திற மவளும் நிற்பள்" என்றவாறு இறைவன் பிரமனுகும்போது சரஸ்வதியாகவும், விஷ்ணுவாகும்போது இலக்குமியாகவும், ருத்திரனுகும் போது துர்க்கையாகவும் மாறுகின்ருள். இறைவன் உயிர்களிடம் காட்டும் இரக்கமே கருணை, தயை, இரக்கம் எனப்படுகிறது இரக்கத்தின் உறைவிடமாய் தனிப்பெரும் கருணையின் வடிவமாய் விளங்குகின்ருள் அம்பிகை. சர்வமங்கள உருவமான அன்னை பராசத்தியின் அருள் இன்றேல் ஆன்மாக்கள் உய்வடையமுடியாது. அசுரர்களை அழித்து தேவர்களைக்காக்க தியோர்களை அடக்கி நல்லோர்களைப் பாதுகாக்க பயங்கர உருவத்தோடு துர்க்கை காளி என்ற உருவங்களிலும் காட்சிதருகின்ருள். தேவியே எல்லாமாக விளங்குகின்ருள் என

"யாதேவீ சர்வபூதேஷுசக்தி ரூபேணசமஸ்திதா நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம! என்று தேவிமஹாத்மியம் கூறுகின்றது.

கடவுளை வணங்குவதற்கு மாத்ரு பாவனையே— அன்னையாக நினைந்து வழிபடுதலே சிறந்தது. உலகில் பிறவியெடுத்த உயிர்கள் தம்மைச்சேய்களாகவும் இறைவனைத்தாயாகவும் நினைந்து வழிபடவேண்டும். ஒரு குழந்தை தான் விரும்பிய பொருட்களைப் பெறயாரிடம் செல்கின்றது? அன்னையிடம் அல்லவா சென்று விரும்பியதைப் பெற்று மகிழ்கிறது. அன்னையும் சிறிதும் தயக்கமின்றி வாரி வழங்குவது நாம் அனைவரும் கண்முன்னே காணும் காட்சியன்ருே!

இவ்வாறு அன்னையை வழிபடும்போது எங்கள் மனம் அன்னையின் பாதகமலங்களில் பதிய வேண்டும். வார்த்தைகள் அவள் புகழினைப் பாடவேண்டும். கைகள் பூமாரி பொழிந்து அர்ச்சனை செய்தல் வேண்டும். காதுகள் அன்னையின் புகழினைச்செவிமடுக்க எண்ணங்கள் தியானத்தில் லயிக்க வேண்டும். கண்கள் அன்னையின் திருவுருவத்தில் அலங்காரத்தில் பதியவேண்டும். இவ்வாறு எல்லாப்புலன்களையும் அன்னையின் மீது செலுத்தி ஆராதனை செய்தோமானுல் உள்ளன்புடன் வழிபட்டோமானுல் நாம் சகல நலன்களையும் பெறலாம்.

முன்னர் எழுத்து வாசனையே இல்லாது அறிவற்றவனுகவிருந்த காளிதாசன் (காளி -காளியின்தாச-அடிமை) காளியின் அருள் பெற்றதும் எத்தனையோ அற்புதமான காவியங்களைப் படைத்து கலாதேவிக்கு காணிக்கையாக அளித்தானல்லவா! இக்காலத்திலும் உள்ளன்புடன் பக்திசெய்து வழிபடுகின்றவர்களுக்கு வேண்டியதை அருளும் சக்தியாக விளங்குகின்ருள் அன்னை காளிதேவி.

திருகோணமலையிலே அழகுற அமைக்கப்பட்ட ஆலயத்திலே லக்ஷ்மீதேவி, சரஸ்வதிதேவி ஆகியவர்களுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றவளும் (காலயதீதிகாளி-அதாவது உயிர்களையெல்லாம் அடக்கி ஒடுக்கும் யமனை-மரணபயத்தை நீக்குவதால் மஹாகாளி எனவும் (பத்ரம்-மங்களம்) சர்வமங்களங்களையும் அருளுவதால் பத்ரகாளி, பத்ரேஸ்வரி என திருநாமம் பூண்டவளுமான பத்ரகாளி அம்மையின் பெருமை சகல சௌபாக்கியங்களையும் அருளும் திறமை சொல்லில் அடங்காது. எனவே நாமும் நாடோறும் ஆலயம் சென்று திரிகரணசுத்தியுடன் அவள் பாதகமலங்களைப் பணிந்து காளியின் கருணையினுல் இஷ்டசித்திகளைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்வோமாக.

சுபம்.

---

" சிவாச்சாரிய சிரோரத்தினம் "

**பூரண சண்முகரத்தினக் குருக்கள்**

(பிரதம குரு: சிவன்கோவில், திருகோணமலை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் கிரியைகள்பற்றிச் சில வார்த்தைகள்

**வே**தசிவாகமங்களிலும் பத்ததிகளிலும் சகலாகமசாரம், சைவசமய நெறி உரை முதலிய நூல்களிலும் சைவசமயக்கிரியைகள் பற்றிய விளக்கம், செயல்முறை, பயன் என்பனபற்றி அறியலாம். இக்காலத்தில் பலர் மந்திரம் என்ருல் எழுத்துக்கள், அல்லது ஒலிகளின் கூட்டம் என்றும் கிரியைகள் என்ருல் பாமரசனங்களின் திருப்திக்காகவும், சிலரின் சீவன உபாயமான சம்பிரதாயங்கள் அடங்கிய வைபவம் என்றும் கருதி தமக்கும் பிறர்க்கும் கேடு சூழ்கின்றனர். ஆனல்; மந்திரம், கிரியை பாவனை மூன்றும் அடங்கியதாயும் செய்பவர், செய்விப்பவர், உலகு ஆதியவற்றின் நன்மை வளர்ச்சிக்கும் தீமை அழிவுக்கும் காரணமானவை சைவக்கிரியைகளாம். இத்தகைய சைவக்கிரியைகளே- சைவாலயங்களில் நடைபெறும் சிறப்புக்களாகும், இவைகளில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால் என்ன என்ன தீமை உண்டாகும் என்பதையும் பரிகாரத்தால் தீர்க்கக் கூடிய தவறுகளையும் பரிகாரங்களையும் பற்றியும் வேதாகமங்கள் முதலான நூல்களில் அறியலாம். சைவாலயக்கிரியைகளில் ஏற்படும் தவறுகளில் சில உபயகாரருக்கும் சில குருமாருக்கும் சில நாட்டுக்கும் கேடுதரும் என்பதும் அவற்றுக்குரிய பரிகாரங்களைச் செய்வதால் ஏற்படும் நன்மை எப்படியிருக்கும் என்பதும் இக்காலத்தில் பலருக்குத் தெரியாமையால் பலவிதமான நெருக்கடிகளுக்கு வழிவகுப்பவர்களாக உள்ளோம்.

சைவாலயக்கிரியைகளைச் செய்யும் பிரதான சிவாச்சாரியார் முதலாயினேர்போதிய சாஸ்த்திரப்பயிற்சியும் மந்திர சித்தியும் நல்லொழுக்கமும் உடையவர்களாக இருக்க வேண்டியதுமட்டுமன்றிக் கிரியாகாலங்களில் அகமும் புறமும் தூய்மை மிக்கவர்களாகவும் அச்சம் கலக்கம் அவசரம் முதலியன இல்லாதவர்களாகவும் இருந்தால்தான் அவர்களால் செய்யப்படும் கிரியைகள் பூரண நற்பலனைத்தரும். கிரியைகளைப்பற்றிய விளக்கமின்றியும் சாஸ்திர விரோதமாக நடப்பதற்கு அஞ்சாது சந்தர்ப்பம் சூழ்நிலைகளை உத்தேசித்து சமாளித்துக்கிரியைகளைச் செய்வதால் கிரியைகளுக்கு மதிப்புக் கெட்டுள்ளது. குருமாருக்குப் பெருமைகள் இலவாகிவிட்டது. சைவமக்கள் அறியாமை அவமானம் அடிமைத்தனம் முதலிய பலப்பல சிறுமைகளுடையவர்களாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கலிகால வலிமையாலும் சைவமக்களின் அலட்சியபுத்தியாலும் ஏற்பட்ட இந்நிலையை சீராக்க சைவநன்மக்களும் சைவக்குருமாரும் அக்கறை கொள்ளவேண்டும். இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தா விட்டால் நாமெல்லோரும் எங்கள் மனிதப்பிறவியை வீணுக்குபவர்கள் என்பதுமட்டு மன்றி இப்பிறவிக்காக முந்தின முந்தின பிறவிகளில் செய்த புண்ணியப்பயனை அனுபவிக்காது இழந்தவர்களாவோம். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல சைவமக்களும் குருமாரும் தனித்தனி சிறுநடவடிக்கைகள் மூலம் சைவகிரியைகள் பற்றிய உண்மை நிலைக்கு வேண்டிய ஆயத்தமும் ஆதரவும் நல்குவராயின் சிவனருளால் நற்கிரியையும் நல்ல பயனும் உண்டாவதுதிண்ணம். கலிகாலச்சிறப்பால் சுலபமாகவும் விரைவாகவும் நன்மையுண்டாகும் என்பது எல்லோருக்கும் வெளிப்படும்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

— திருஞானசம்பந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்ட வரலாறு

1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பத்திலிருந்து திருக்கோணமலை மாவட்டத்தில் தொல்பொருள் ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. இதன்விளைவாக ஸ்ரீ கோணேஸ்வரர் கோயிலின் வளவின் பின்புறத்திலுள்ள முதலாம் ராஜராஜனின் காலத்துக்குரிய சாசனம் ஒன்றையும், திருக்கோணமலை மாளுங்கேணி வெள்ளை வில்வத்தடி கோணநாயகர் கோயிலுள்ள கல்வெட்டொன்றையும் ஆராய்ந்து கொண்டிருந்தேன். இக்கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்துதவியவர், சாம்பல் தீவுக் கிராமசபையின் முன்னாள் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான திரு. நா. தம்பிராசா என்பது இவ்விடத்துக் குறிப்பிடத் தக்கதொன்றாகும். இக்காலகட்டத்தில் மீண்டும் ஒரு கல்வெட்டுப்பற்றிய செய்தியினைத் தம்பிராசா அவர்கள் அறிவித்திருந்தார். அக்கல்வெட்டே இப்போது இக்கட்டுரைக்குப் பொருளாக அமைகின்ற ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் முதலாம் ராஜேந்திரன் காலக் கல்வெட்டாகும். மனித இனப் பண்பாட்டுத் தொன்மை காட்டும் தொல்பொருட்களைக் கண்டுபிடிப்பதில் தம்பிராசா காட்டிவரும் ஆர்வம், இக்கல்வெட்டுத் தொடர்பாக அவர் எழுதி அனுப்பிய கடிதச் செய்தியினால் நன்கு புலப்படுகின்றதாதலால் அக்கடிதச் செய்தியினை இங்கு எடுத்தாழ்வது மிகப் பொருத்தமாகும்.

சாம்பல்தீவு — 19-6-72

அன்புள்ள உயர்திரு செ. கு. அவர்கள்

ஐயா,

18-6-72இல் வழமைபோல் கோணேஸ்வரப் பெருமானைத் தரிசிக்கச் சென்றேன். கைமேல் பலன் கிட்டியது. சுமார் 15 அடி நீளமாகவும் 10 அங்குல அகலங்கொண்டதுமான நெடுந்தூண் சிலாசனத்தில் தமிழ் கிரந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் ஒரு பெரியார் தந்தார். உடனே அந்தக் கோயிலில் சென்று கண்டு கொண்டேன். இதை அறிந்த பலர் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தார்கள். இதை நாம் வாசிக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல அரிய அதிசயங்கள் இச்கல்வெட்டில் அடங்கியுள்ளன. எனவே எனது அபிப்பிராயம், கல்தூண் கல்வெட்டின் உயரம் 15 அடி, அகலம் 10 இஞ்சி, மூன்று பக்கம் எழுதப்பட்டுள்ளது. வணக்கம்.

(ஒப்பம்) நா. தம்பிராசா

**பின்குறிப்பு:**

இக்கல்வெட்டு திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் சந்நிதான மண்டபத்தில் தூணாக நிறுத்தப்பட்டு மை பூசப்பட்டுள்ளது. கோயில் தர்மகர்த்தாவிடம் அனுமதி கிடைத்தவுடன் பதில் உடன் அனுப்புவேன்,

நா. தம்பிராசா
19-6-72.

## திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலில் முதலாம் இராஜேந்திரசோழன் காலக்

# கல்வெட்டு

கலாநிதி செல்லத்துரை குணசிங்கம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

இக்கடிதச் செய்தியினைத் தொடர்ந்து ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலிலுள்ள கல்வெட்டின் மைப் பிரதியை எடுப்பதற்காக 1972 ஜூன் மாதம் 25 ஆம் திகதி திருக்கோணமலைக்குச் சென்று அன்றைய தினமே அக்கல்வெட்டைப் பார்க்க முடிந்தது.

### கல்வெட்டின் நிலை

இக்கோயிலின் நிருத்த மண்டபத்தில் வலதுபுறத் தூண் ஒன்றில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. திருக்கோணமலையிலுள்ள அழகுமிக்க தேவாலயங்கள் சிலவற்றுள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய விதத்தில் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் நன்கு நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. அழகுபடுத்துவதற்காகக் கோயில், மை வேலைப்பாடுகளினால் காலத்துக்குக் காலம் அலங்கரிக்கப்பட்ட சமயத்தில் நிர்த்தமண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதாலும் இத்தகைய அலங்கரிப்புக்குள்ளானது. அடிக்கடி அலங்கரிப்புக்களுக்குள்ளானபோது, தூணிலுள்ள எழுத்துக்களின் மேல் பல படைகளில் மைப் பூச்சு இருந்தமையினால் எழுத்துக்கள் தெளிவற்றுக் காணப்பட்டன. இதன்காரணமாக, பல படைகளாகக் காணப்பட்ட மைப்பூச்சை அகற்றிய பின்னரே அத்தூண் கல்வெட்டின் மைப் பிரதியை எடுக்கவேண்டியிருந்தது.

மிக அழகாகப் பராமரிக்கப்பட்டுவந்த இக்கோயிலின் அழகுமிக்க தூணை மாசுபடுத்தியே மைப் பிரதி எடுக்கவேண்டியிருந்தமையினால், அதற்கான அனுமதியை எவ்வாறு பெறலாம் என எனக்குள் எண்ணிக்கொண்டபோதிலும் அனுமதியைப் பெறுவதில் எத்தகைய கஷ்டமும் இருக்கவில்லை. மனித இனத்தினது, குறிப்பாகத் தமிழ் இனத்தினது கடந்தகால நடவடிக்கையினையும் அதன் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் அறிவதற்கு மிகப் பயனுடைய சான்றுக்கள் கல்வெட்டுக்களே என்பதில் நம்பிக்கைகொண்ட வணக்கத்துக்குரிய பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் இத்தகைய அருமையான பொக்கிஷங்களைப் பேணுதலும், அவை கூறும் பொருளினை அறிந்துகொள்ளுதலும் அவசியமானதெனக் கருதி அத்தூணிலுள்ள மைப்பூச்சினை அகற்றுவதற்கு முழுமனதோடு அனுமதித்தார்.



கல்வெட்டுத் தூண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிபெற்றுக்கொண்டதும் தொடர்ந்து இருநாட்கள் மைப்பூச்சினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். இம்முயற்சியில் எம்முடன் ஒத்துழைத்தவர்களான ஆசிரியர் சின்னத்தம்பி அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கா. இந்திரபாலா அவர்கள், வ. நா. தம்பிராசா அவர்கள், திருக்கோணமலை இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபர் நடராசா அவர்கள், ஆசிரியர் சந்திரகாந்தன் அவர்கள் ஆகியோரது உதவி நினைவுகூரத்தக்கதாகும்.



பத்திரகாளி கோயிலின் முகப்புத் தோற்றம்

**பத்திரகாளி அம்மன் கோயில்**

இக்கோயிலின் தற்போதய கட்டிடம் பழமையானதாக இல்லாவிட்டாலும், அதன் தோற்றக்காலத்தைத் திட்டவட்டமாக நிர்ணயித்துக்கொள்ளுதல் கஷ்டமாகும். இக்கோயிலின் தோற்றக்காலத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளத்தக்க ஆதாரங்கள் இதுவரையில் எமக்குக் கிடைக்கவில்லை. இக்கோயிலின் காலம் சம்பந்தமாக எமக்குத் தெளிவாகக் கிடைக்கின்ற அதிமுக்கிய சான்று, இக்கோயிலிற் காணப்படும் உல்லில் (தேங்காய் உரிக்கும் கல்லு) பொறிக்கப்பட்ட கல்வெட்டாகும். அக்கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

உ. காளி அம்மனுக்கு
அயி செம்புலிங்கம்
செய்து கொடுத்தது;
1878 தை ஆசாரி

இக்கோயிலுக்குச் சேர்ந்ததான "தூண்" கல்வெட்டு, அதன் எழுத்து வளர்ச்சியின் அடிப்படையில் அது கூறும் பொருளின் அடிப்படையிலும், இற்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன் பொறிக்கப்பட்டதாகும். இக்கல்வெட்டில் இதுவரை நாம் ஆராய்ந்த பகுதியில் இக்கோயில்பற்றிய தகவல்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. இக்கல்வெட்டின் முழுப்பகுதியும் எமக்குக் கிடைக்காத விதத்தில் இக்கல்வெட்டின் சில பகுதிகள் முற்றாகச் சேதமடைந்துவிட்டமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யினுல் பத்திரகாளி அம்மன் கோயிலுக்கும் இத்தூண் கல்வெட்டிற்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும் நாம் கூறமுடியாதுள்ளோம். இக்குறிக்கப்பட்ட தூணில் வரலாறுபற்றி இருவிதமான வேறுபட்ட கருத்துக்களைக் கொடுக்கலாம்.

*(1)* எழுத்துப் பொறிக்கப்பட்ட இத் தூணுனது, இக்கோயிலின் பழைய அழிபாடுகளுக்குச் சேர்ந்ததொன்ருக இருக்கலாம்.

*(2)* ஏதோ ஒருகாலப்பகுதியில் இக் கோயிலின் கட்டுவேலைப்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் பிறஇடத்திலிருந்து இத்தூண் இங்கு கொண்டுவரப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

இத்தூணின் வரலாறு சம்பந்தமாக மேற்கண்ட இருவகைப்பட்ட கருத்துக்களில் எக்கருத்து ஏற்றுக்கொள்ளப்படத்தக்கது எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்க முடியாவிட்டாலும், கிடைக்கின்ற சந்தர்ப்ப ரீதியான சான்றுகளின் துணைகொண்டு இது பற்றிய பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக் காண முயற்சிக்கலாம். இக்கோயிலின் வரலாறு தொடர்பாகச் செவிவழியாகப்பேணப் பட்டுவரும் கதைமரபு ஒன்று இந்த இடத்தில் கவனிக்கத் தக்கது.

மதுரையில் பிராமண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இல்லறவாழ்வில் ஈடுபாடின்றித் துறவறம் மேற்கொள்ள விரும்பிய போது ''இல்லறம் அன்றித் துறவறம் செய்யக்கூடாது'' என்ற அசரீரியைத் தொடர்ந்து ராமேஸ்வரத்தில் இல்லறம் நடாத்திவந்தார். இவ்வாறிருக்கும் காலத்தில் தெய்வ விக்கிரகம் ஒன்றுபற்றி தெய்வ வாக்கு அவருக்குக் கிடைத்தது. இப்போது



கிடாரத்துள் கண்டெடுத்த காளி விக்கிரகம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பத்திரகாளி அம்மன் கோயிலின் தெற்குப் பக்கத்திலுள்ள அலரி மரம் இருக்கின்ற இடத்தில் முன்பு ஒரு தொங்கு செவ்வரத்தை மரம் நின்றது. அந்த மரத்தின் அடியின் கீழ் ஒரு தெய்வ விக்கிரகம் உண்டு, என அத்தெய்வ வாக்கினால் அறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்தஇடத்தில் வெட்டிப் பார்த்தபோது ஒரு செப்புக் கிடாரத்தினுள் காளி அம்மன் விக்கிரகம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அன்று தொட்டு இன்றுவரையாக இக்கோயிலில் நடைபெறுகின்ற பிரதான விழாக்களில் இக்காளி அம்மன் உருவம் சிறப்பிடம் பெற்று வருகின்றது. அதுவேயன்றிச் செப்புக்கிடாரத்துள்ளிருந்து காளி விக்கிரகம் வெளியே எடுக்கப்பட்ட காட்சி இக்கோயிலின் தேரில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

மிகப்பழமை வாய்ந்த சில நிறுவனங்களினதோ, அல்லது ஏதாவது அமைப்புக்களினதோ தோற்றக் காலம்பற்றி எதனையும் அறிய முடியாமலிருக்கும் போது அல்லது அவற்றின் தோற்றக் காலம்பற்றித் தெளிவாக ஆதாரங்கள் கிடைக்காதபோது, அவற்றின் தோற்றத்தை விளக்குவதனை மையமாகக்கொண்டு பல கதைகள் தோன்றுவது வழக்கம். இப்படியான கதைகளுள் மக்களின் கவனத்தை ஈர்க்கத்தக்க விதத்தில் அமைந்துள்ளவை, அவர்களின் மனத்தில் ஆழமாகப்பதிந்து நிலைபெற்று விடுகின்றன. குறிப்பாகச் சமய நிறுவனங்களைப் பொறுத்து இத்தகைய கதைகளின் செல்வாக்குக் கூடுதலாகக் காணப்படுகின்றது. நாம் மேலே கவனித்த பத்திரகாளி அம்மன் கோவிலின் தோற்றக்காலம் தொடர்பான கதையும் இத்தகைய தன்மைகெண்ட கதைகளுள் ஒன்றாக இருக்கலாமோ என ஐயப்பாட்டாலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட செப்புக் கிடாரமும் அதற்குள் வைத்துப் பாதுகாக்கப்பட்டிருந்த காளி அம்மன் விக்கிரகமும் இக்கோயிலின் தோற்றக்காலம் சம்பந்தமான தரவுகள் சிலவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு உதவியாகவுள்ளன.

செப்புக்கிடாரத்தின் வடிவமைப்பினையும். உலோக வார்ப்பு முறையினையும் அவதானிக்கையில் மிகப்பழமை வாய்ந்ததொன்றாகவே இக்கிடாரம் காணப்படுகிறது. காளி அம்மன் விக்கிரகத்தினுடைய வடிவமைப்பு ஏறத்தாழப் பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தமிழகக் கோயில்களில் பேணப்பட்ட காளியம்மன் உருவங்களை ஒத்ததாகக் காணப்படுகிறது. இவ்விக்கிரகத்தின் கால எல்லையைத் திட்டவட்டமாகக் கூறமுடியாவிட்டாலும் அது மிகப் பழமை வாய்ந்ததொன்றெனக் கூறிக்கொள்ள முடியும். செப்புக்கிடாரமும் அதனுள்வைத்துப் பேணப்பட்ட காளி அம்மன் விக்கிரகமும் ஒரு காலத்தில் நிலத்துக்கடியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்டன என இக்கோயில் பற்றிய கதை மரபில் வரும் செய்தி, இலங்கையில் காலத்துக்குக் காலம் நடைபெற்ற படையெடுப்புக்களை நினைவூட்டுவனவாயுள்ளன.

படையெடுப்பாளர்களது ஆக்கிரமிப்பிலிருந்தோ, அல்லது திடீரென்று ஏற்படுகின்ற ஏதாவது பாதகமான நிகழ்வுகளிலிருந்தோ தற்காலிகமாகப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் சமய நிறுவனங்களைச் சேர்ந்த வழிபாட்டுருவங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்குச் சான்றுகள் உண்டு. இத்தகைய பாதுகாப்பு முயற்சியில் வழிபாட்டுருவங்கள் பொதுவாக முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணம், ஆக்கிரமிப்பாளிகளின் நடவடிக்கைகளினால் அவற்றின் புனிதத்தன்மை கெட்டுவிடாமல் இருப்பதற்காகவே எனக்கொள்ளலாம். மத்திய காலத்தில் பொலனறுவையில் நடைபெற்ற படையெடுப்புக்களிலிருந்து தெய்வ உருவங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையை இங்கு உதாரணமாகக் காட்டலாம். கணேசர், நடராஜர், பார்வதி, ஸ்கந்தர், காரைக்காலம்மையார், சரஸ்வதியாகிய தெய்வங்களின் உருவங்களை நிலத்தில் அதிசயிக்கத்தக்க கல்லறைகள் ஏற்படுத்திப் படையெடுப்பாளர்களின் கண்ணிற்படாதவாறு பாதுகாத்து வைத்திருந்தனர். இதுவேயன்றிப் பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வர்த்தக நோக்குடன் இலங்கை வந்த போர்த்துக்கீசர், தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்குத் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டபோது இந்து மதமும், இந்துமத நிறுவனங்களும் கடுமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான பாதிப்புக்குள்ளாயின. போர்த்துக்கீசரின் ஆக்கிரமிப்பிலிருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையாகக் கோணேஸ்வரர் கோயிலுக்குச் சேர்ந்த சோமாஸ்கந்தர், பார்வதி, சந்திரசேகரர் ஆகிய தெய்வ விக்கிரகங்களைக் கிணற்றுள் மறைத்திருந்தனர் என அறிகிறோம். இத்தகைய ஒரு நடவடிக்கையாகவே, போர்த்துக்கீச இந்துமத விநோதச் செயல்கள் நடைபெற்ற வேளையில் கோயில் தெய்வத்தினைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடன் காளி கோயில் அம்மன் விக்கிரகமும் செப்புக் கிடாரத்துள் பாதுகாப்பாக வைத்து மண்ணுக்கடியில் மறைக்கப்பட்டிருந்தது என எண்ணவேண்டும்.

போர்த்துக்கீசர் இலங்கையில் கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, என்னென்ன வழிகளில் அம்மதத்தை மக்களிடையே பரப்பமுடியுமோ அந்தந்த வழிகள் எல்லாவற்றையும் கைக்கொண்டனர். இவர்களின் மதவெறித் தீவிரவாதத்தை, சமகாலத்தவரான பாதிரியார் குவைறோஸ் பலவாறு கண்டித்துள்ளார் எந்தெந்த நிறுவனங்கள் கத்தோலிக்க மதப் பரப்பலுக்குத் தடையாக இருந்தனவோ அந்நிறுவனங்களை அழிப்பதற்கு அவர் தயங்கவில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில், மிகப்பழமை வாய்ந்த பெரும்புகழோடு விளங்கிய இந்து ஆலயங்களே போர்த்துக்கீசரின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தன. இதனாலேயே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற பழமை மிக்க - வரலாற்றுப்புகழ்மிக்க இந்துக் கோவில்கள் போர்த்துக்கீசரின் நடவடிக்கைகளினால் தரைமட்டமாயின. காரணம் வரலாற்றுப் புகழ்பெற்று இந்துப்பண்பாட்டின் சின்னங்களாக விளங்கி இக்கோவில்கள் நிலைபெற்றிருக்கு வரை கத்தோலிக்க மதப்பரப்பலை வெற்றிகரமாகச் செயல்படுத்துவது கடினம் எனவறிந்தபோதே வரலாற்றுப்புகழ் பெற்று விளங்கிய கோவில்கள் அவர்களது கவனத்தைப் பெரிதும் ஈர்த்து ஈற்றில் தரைமட்டமாகின. இத்தகையதொரு நிலையிலேயே திருக்கோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயிலும் அடைந்திருக்கலாம். எமது இவ்விளக்கம் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதாக இருந்தால், போத்துக்கீசர் காலத்துக்கு முன்னரேயே பெரும்புகழ்பெற்ற பெருங்கோயிலாக பத்திரகாளி அம்மன் கோவில் இருந்தது என கூறிக்கொள்ள முடியும்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்தே தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே பலவகைத் தொடர்புகள் இடம் பெற்று வந்துள்ளமையைக் கிடைக்கின்ற சான்றுகளின் துணைகொண்டு அறியமுடியும். இத்தொடர்புகளின் பண்பாட்டுத்தொடர்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பகாலத்தில் இலங்கையில் ஏற்பட்ட குடியேற்றங்கள் வர்த்தகக் குடியேற்றங்களாகக் காணப்படுகின்றமையால் இப்பண்பாட்டுத் தொடர்புகள் ஏற்படுவதற்கு வர்த்தகப் பெருமக்கள் பெரிதும் காரணமாக இருந்தனர் எனக் கூறிக்கொள்வதில் தவறில்லை. தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சென்ற வர்த்தகக் குடிகளினால் இந்துமதப் பண்பாட்டுக் கருத்துக்கள் இலங்கையில் பரப்பப்படலாயின. இதனால், பௌத்த மதம் இலங்கையில் உத்தியோகபூர்வமாகப் பரப்பப்படுவதற்கு முன்னரேயே, இந்துமதப் பண்புகள் இலங்கையில் நிலைபெற்று விட்டமையைக் காணமுடிகின்றது. இந்துமதப் பண்புகள் பொதுவாக இலங்கையில் பரப்பப்பட்டிருந்தாலும் இந்துமதச் செல்வாக்குத் தொடர்ச்சியாக நிலைபெற்றிருந்தது திருக்கோணமலை மாவட்டத்திலேயே எனக்கொள்ளச் சான்றுகள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டில் இந்துமதபண்பாடு தொடர்பான அபிவிருத்திகள் ஏற்பட்ட காலங்களிலெல்லாம் அவ்வபிவிருத்திகள் திருக்கோணமலைப்பகுதியில் பிரதிபலித்தமையை அவதானிக்க முடிகின்றது. இத்தகையதொரு போக்கினைத் தமிழ்நாட்டின் பல்லவர்காலப்பகுதியிலிருந்து அவதானிக்கக்கூடியதாயிருக்கின்றது. சங்கமருவிய காலத்தின் இறுதிப்பகுதியில்காரைக் காலம்மையார் போன்றோரால் ஆரம்பிக்கப்பட்ட பக்தியியக்க நடவடிக்கைகள் பல்லவர் காலத்தில் நாயன்மார், ஆழ்வார்கள் ஆகியோர் தலைமையில் அபிவிருத்தியடைந்து அக்காலப்பகுதி முழுவதும் நடைபெற்று வந்தன. முன்பு ஆதிக்கம் பெற்றுவிளங்கிய பௌத்தம். சமணம் ஆகிய மதங்களைச் செல்வாக்கிழக்கச் செய்து சைவம், வைஷ்ணவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மதங்களை நிலைபெறச் செய்யவேண்டு மென்ற நோக்குடன் நாயன்மார்களும், ஆழ் வார்களும் தீவிரமாகச் செயல்பட்டுவந்தனர். இவ்வாறு இக்கால அளவில் தமிழ்நாட்டில் நடைபெற்ற பக்தியியக்கத்தின் செல்வாக்கு இலங்கையில் வேறு எந்த மாவட்டத்தைக் காட்டிலும் திருக்கோணமலை மாவட்டத்தில் கூடியளவிற்குப் பிரதிபலித்தது எனக் கொள்ள அங்கு இதுவரையிற் கண்டுபிடிக் கப்பட்ட தொல்பொருட்கள் போதியளவு சான்றுகளாக அமைகின்றன.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை தென்னிந்தியாவில் நிலை பெற்றிருந்த சோழப் பெருமன்னர் காலத் தில் பண்பாட்டுத்துறையிற் பெருவளர்ச்சி காணப்பட்டது. சோழப் பெருமன்னர் களின் நடவடிக்கைகளினால் பேரரசில் அரசியல் அமைதியும், பொருளாதாரச் செழிப்பும் ஏற்பட்டது. இத்தகைய அரசியல் அமைதியும் பொருளாதாரச் செழிப்பும் நிறைந்த காலத்தில் பல்லவர் காலத்தின் பக்தியியக்க நடவடிக்கைகளின் பெருந்தாக்கம் ஏற்பட்டபோது பண்பாட்டு நிறுவனங்கள் பெருமளவில் தோன்றி அவை பெருவளர்ச்சி அடையமுடிந்தது. தமிழக வரலாற்றில் வேறு எக்காலத்தையும்விட அமைப்பளவில் பெரிதான, எண்ணிக்கை யில் அதிகமான கோயில்கள் தோற்றம் பெற்றன. அரசியலும் மதமும் சோழர் காலத்தில் ஒன்றிணைந்தபோது, சமய நிறு வனங்களான கோயில்கள் பண்பாட்டுத் துறையில் மேலாதிக்கம்பெற்று விளங்க லாயின. அரச வம்சத்தவர் பெருந்தொகை யில் பெருங்கோயில்களைக் கட்டியதோடு அவற்றிற்குப் பெருந்தொகையான தானங் களையும் வழங்கினர்.

சோழப் பெருமன்னர் தமிழகத்தில் ஆட்சி நடத்திய காலத்திலேயே முதல் தடவையாக இலங்கை தமிழ்நாட்டு வம்சம் ஒன்றின் நேரடியான ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது, முதலாம் ராஜராஜ னும் அவனது மகன் ராஜேந்திரனும் மேற் கொண்ட அரசியல் நடவடிக்கையின் பலனாக இலங்கையின் பெரும்பகுதி கைப்பற்றப் பட்டு மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் சோழப் பேரரசின் ஒரு மாகாண மாக இணைக்கப்பட்டது. சோழப்பேரரசர் இலங்கையைக் கைப்பற்றி இணைத்தபோது, தமிழகத்தில் எத்தகைய பண்பாட்டுரீதி யான நடவடிக்கைகளை மேற்கொண்டார் களோ அதேபோன்று இலங்கையிலும் மேற்கொண்டனர். குறிப்பாக இக்கால மளவில் சிறப்பான பண்பாட்டு நிறுவனமாக விளங்கிய கோயில்களை இலங்கையிலும் அமைத்து அவற்றுக்குத் தான ஏற்பாடு களையும் செய்துவைத்தனர் எனக்கொள்ளச் சான்றுகள் கிடைக்கின்றன.

இலங்கையின் பெரும்பகுதியைப் பொது வாகக் கைப்பற்றி இணைத்தபோதிலும் சோழப் பெருமன்னர்களின் கவனத்தை அதிகவளவில் ஈர்த்தபகுதி திருக்கோண மலைப்பகுதி எனக்கொள்ளலாம். இதற்கான காரணத்தை விளங்கிக்கொள்வது கஷ்ட மன்று. தென்கிழக்காசிய வர்த்தகத்தில் இலங்கை கொண்டிருந்த தொடர்பைப் பொறுத்தவரையில் இலங்கையின் ஏனைய துறைகள் எவற்றைக் காட்டிலும் திருக் கோணமலைத் துறைமுகம் வர்த்தக வசதி யைப் பொறுத்து முக்கியம்பெற்று விளங் கியது. இலங்கையைக் கைப்பற்றுவதன் மூலம் இந்துசமுத்திரத்தில் தமாதிக்கத் தைத் தாபித்துக்கொள்ள விரும்பிய சோழர், சிறப்புப்பெற்றிருந்ததும், அடிக் கடி தொடர்பு கொள்ளப்பட்டதுமான திருக்கோணமலைத் துறைமுகப் பகுதியில் போதியளவிற்குத் தமது கவனத்தைச் செலுத்தியிருக்கின்றார் எனக்கூறவேண்டும். துறைமுகம் தொடர்பாகத் திருக்கோண மலைப் பகுதியில் சோழப்பேரரசர் தமது பெருங்கவனத்தைத் திருப்பியபோது, அவர் களது பண்பாட்டு நடவடிக்கைகள் கூடுத லாக இடம்பெற்ற இடமாகவும் திருக் கோணமலைப் பகுதியே காணப்பட்டது. இலங்கையில் வேறு எந்த மாவட்டத்திலும் இதுவரையிற் கண்டுபிடிக்கப்படாத அள விற்குப் பெருந்தொகையான சோழர்காலக் கல்வெட்டுக்கள் திருக்கோணமலை மாவட் டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது மாத்திரமன்றிச் சோழப்பேரரசின் பிரதிநிதி களின் காலத்துக்குரியனவாக இதுவரையிற் கிடைத்த இரு கல்வெட்டுக்களும் திருகோண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைப் பகுதியிலேயே கிடைத்துள்ளன. மேலும் இப்பகுதியில் பெரும் பிராமணக் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு அங்கு இந்துமதப் பண்பாடு ஓங்கிவளர்ந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. இவையே யன்றித் திருக்கோணமலையின் பல பகுதி களிலும் சோழர்காலத்துக்குச் சேர்ந்தன வான கோயில் அழிபாடுகள் கிடைக்கின்ற மையினல், சோழப்பெருமன்னர் தமது கூடியகவனத்தை இப்பகுதியில் செலுத்திய போது அனேகமான கோயில்களை இப்பகுதி யில் அமைத்தனர் எனக் கூறமுடிகின்றது. இதன் அடிப்படையில், இன்று ஸ்ரீ பத்திர காளி அம்மன் கோயில் உள்ம் இடத்தில் சோழர்காலத்துக் கோயில் ஒன்று இருந்த தெனவும், அக்கோயிலுக்குச் சேர்ந்த தூண் கள் நாம் இப்போது கவனிக்கின்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட தூண் இருந்திருக்க முடியும் என்றும் கூறலாம். அக்கருத்துச் சரியாயின் காலப்போக்கில் போத்துக்கீசரின் நடவடிக் கைகளினல் இக்கோயில் அழிக்கப்பட்டு அது மறுபடியும் இந்த இடத்தில் புனரமைக் கப்பட்டது எனக்கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் காளி வணக்கமுறை எப்போது தோற்றப்பெற்றது என்பதனை வரையறுத்துக் கூறுவது கடினம் எனினும் சோழப்பெருமன்னர் காலத்தில் அவ்வணக்க முறை சிறப்புப்பெற்று விளங்கியது எனக் கூறத் தகவல்கள் கிடைக்கின்றன. ஒன்ப தாம் நூற்ருண்டில் வாழ்ந்த சோழப்பெரு மன்னன் விஜயாலயன் நிகம்பசூதனி எனப் பட்ட துர்க்காதேவிக்கு கோயில் எடுத்த செய்தி அவனது சாசனங்களில் உண்டு. குலோத்துங்கன் பேரில் பரணிபாடிய சயங் கொண்டார் முதலில் காளியைத் துதிப் பதையும், தன் புரவலன் வெற்றி வேண்டிக் காளியை வழிபடுவதையும், தருணம் வந்த போது காளிக்குத் தலைகளையே தானமாக ஈயும் சலியாத தனியாண்மைத் தறுகண் வீரரைப் பற்றிக் குறிப்பிடுதலையும் காண லாம். இக்கால வடநாட்டுத் திவாகரம் என்ற நூல் சூலி, எண்தோளி, மாதரி, வீரி, கௌரி, முக்கண்ணி, பைரவி, குமாரி, சாமுண்டி, வேதாளி, மாகாளி எனக் குறிப்பிடுவதையும் குமரி, கௌரி, சூலி, நீலி, மாலி எனச் சிலப்பதிகாரமும் குறிப் பிடுவதையும் கவனிக்கையில் சோழப்பெரு மன்னர் காலத்தில் தமிழ்நாடும் வடநாடும் காளி வழிபாட்டில் கருத்தொருமிக்கு மளவிற்கு இவ்வழிபாடு சிறப்புற்று விளங்கி யது எனலாம்.

ஏற்கனவே நாம் கவனித்ததுபோன்று, சோழப்பெருமன்னர் காலத்தில் இலங்கை கைப்பற்றப்பட்டுத் தமிழ்நாட்டுப் பேரரசு டன் இணைக்கப்பட்டபோது தமிழ்நாட்டுப் பண்பாட்டு நிறுவனங்கள் இலங்கையிற் பெரு மளவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த விதத்தில், சோழப்பெருமன்னர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய காளி வணக்கமுறை யும் அக்காலத்திலிருந்து இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுக் காலப்போக்கில் வளர்ச்சிபெற்றது எனலாம். இலங்கையில் இதுவரையிற் கிடைத்த காளி உருவங்கள் சில சோழர்காலத் தமிழ்நாட்டுக் காளி உருவங்களை ஒத்தனவாகக் . காணப்படு கின்றமை, எமது மேற்படி கருத்தை வலி யுறுத்துவனவாக உள்ளன.

ஒரு கோவிலில் அதன் பழமையடிப் படையிலோ அல்லது மக்களின் ஆத்மீக உணர்வுஅடிப்படையிலோ எந்த அளவிற்குச் சிறப்புப்பெற்று விளங்குகின்றதோ அந்தள விற்கு அதிகளவில் அக்கோயிலின் மகிமையை விளக்கத்தக்க அதிசய சம்பவங்கள் பற்றிய மரபுவழிக் கதைகள் நிலைபெறுவது வழக்க மாகும். திருக்கோணமலைப் பத்திரகாளி அம்மன் கோயில் தொடர்பாக இன்றும் பலகதைகள் நிலைபெற்று வருகின்றமையைச் செவிவழியாக அறிவதோடு அக்கதைகளை விளக்கவல்ல முறையில் அவை புடைப்புச் சிற்பங்களாகத் தேரில் பொறிக்கப்பட் டுள்ளமையையும் காணலாம்.

### கல்வெட்டும் அதன் முக்கியத்துவமும்

எழுதுக்கள் பொறிக்கப்பட்ட தூண் 9 அடி 2 அங்குல நீளமும் 9 அங்குல அக லமும் உடையது. 1972ம் ஆண்டு முதல் தடவையாக இக்கல்வெட்டைப் பார்வை யிட்ட போது இத்தூணின் மூன்று பக் கங்களில் இருந்த கல்வெட்டையே கவனிக்க முடிந்தது. காரணம் தூணின் வடக்குப்பகுதி சுவரிடையே வைத்துக்கட்டப்பட்டிருந்தது. ஏற்கனவே ஆரம்பத்திற் குறிப்பிட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று தூணின் மேல் பூசப்பட்டிருந்த மைப்பூச்சினை மிகுந்த சிரமத்துடன் அகற்றிக் கல்வெட்டின் மைப்பிரதியை எடுத்துப்பார்த்தபோது தூணின் மூன்று பக்கங்களிலும் எழுத்துக்கள் காணப்பட்டாலும் கல்வெட்டுப் பாதுகாப்பான முறையில் பேணப்படாதிருந்தமையினால் கல்வெட்டின் சில பகுதிகள் தெளிவற்றுக் காணப்பட்டன. இருந்தும் தெளிவாகக்காணப்பட்ட எழுத்துக்களை மிக நுணுக்கமாக அவதானித்தபோது கல்வெட்டில் எமக்கு கிடைத்த பாகம் எது பற்றியது என்பதனை அறிந்துகொண்டமையால் அதன் பின்னர் தூணின் மூன்று பக்கங்களிலுமுள்ள எழுத்துக்களை முழுமையாக வாசித்தறிய முடிந்தது. கல்வெட்டு கிழக்குப்பகுதியில் ஆரம்பித்து, தெற்கு மேற்குப் பகுதிகளில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருந்தது. கிழக்குப்பகுதியில் முப்பத்தேழு வரி எழுத்துக்களும் தெற்குப்பகுதியில் முப்பத்தாறு வரிகளும் மேற்குப்பகுதியில் முப்பத்தேழு வரிகளும் காணப்பட்டன. கல்வெட்டில் காணப்படும் எழுத்துக்களைக் கவனிக்கையில் அவை சீரான முறையில் காணப்படாது சிலஎழுத்துக்கள் பெரிதாகவும் சில எழுத்துக்கள் சிறிதாகவும் இருப்பதோடு வரிகளும் நேரான முறையில் எழுதப்படவில்லை. திருக்கோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட பிற கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட முறையினை அவதானிக்கையில், இப்போது நாம் கவனிக்கின்ற கல்வெட்டைப்பொறித்தோர், அதனை அழகுறப்பொறிப்பதில் போதிய கவனம் எடுக்கவில்லையென்றேகூறவேண்டும்.

தூணின் மூன்று பக்கங்களிலும் கிடைத்த கல்வெட்டுப்பகுதி முதலாம் ராஜராஜனின் மகனாகிய முதலாம் ராஜேந்திரனின் (1012 கிபி—1044) மெய்க்கீர்த்திப் பகுதியாகும். மெய்க்கீர்த்தி என்பது, அரசர் தமது காலங்களில் தாம் மேற்கொள்ளும் வெற்றிகரமான படையெடுப்புக்களையும் தம் கால பிற சிறப்பான வீரமிக்க நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்ற பகுதியாகும். இவ்வாறு தமிழ்நாட்டில் தமிழ்க்கல்வெட்டுகளில் மெய்க்கீர்த்திகளைச் சேர்த்துக்கொள்ளும் வழக்கத்தை முதன்முதலில் ஆரம்பித்து வைத்தவன் முதலாம் ராஜராஜ சோழன் என்பது குறிப்பிடத்தக்கது. மெய்க்கீர்த்திக்குப்பின்னரே கல்வெட்டுப் பொறிப்பதற்கான நோக்கங்களும் அதனோடு சேர்ந்த பிற விபரங்களும் எழுதப்படும். இப்போது நாம் ஆராய்கின்ற கல்வெட்டிலும் எமக்குக் கிடைத்த பகுதி மெய்க்கீர்த்திப் பகுதியே. 1972ம் ஆண்டு, இக்கல்வெட்டினை முதன் முதலில் ஆராய்ந்தபோது, கல்வெட்டுப் பொறிக்கப்பட்டதன் நோக்கம்பற்றிய செய்தி, சுவருள் சேர்த்துவைத்துக் கட்டப்பட்ட தூணின் வடக்குப்பகுதியில் பொறிக்கப்பட்டிருக்கலாம் எனக்கருதினேன். அண்மையில் இக்கோயில் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது இத்தூணானது கோயிலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுப் பேணப்பட்டபோது மீண்டும் இக்கல்வெட்டின் மைப்பிரதியை எடுக்கும் சந்தர்ப்பம் எனக்குக்கிட்டியது. இதனால் இப்போது நான்காவது பாகத்தின் மைப்பிரதியையும் எடுக்கமுடிந்தது. இந்த நான்காவது பகுதியின் மேற்பாகம் பெரிதும் சேதமடைந்து விட்டமையால் அப்பகுதியை வாசித்தறிந்து முழுமையாகப் பெறுவது கஷ்டமாகும். எஞ்சியுள்ள பகுதியில் இருந்து இக்கல்வெட்டு, கோயிலொன்றுக்குக் கொடுக்கப்பட்ட தானத்தைப் பற்றியும் அதன் எல்லைகள் பற்றியும் குறிப்பிடுவதாகத் தெரிந்தாலும், அது எந்தக் கோயில் என்பதனை அறிய முடியாமலுள்ளது. தொடர்ந்து இப்பகுதியை ஆராய்வதன் மூலம் சில செய்திகளை மேலும் அறியலாம் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து முயற்சித்து வருகிறேன்.

முதலாம் ராஜேந்திரன் காலத்துக்குரிய கல்வெட்டுக்கள் சில ஏற்கனவே திருக்கோணமலை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், நாம் இப்போது கவனிக்கின்ற பத்திரகாளி அம்மன் கோவில் கல்வெட்டின் முக்கியத்துவம்பற்றிப்பொதுவாக பின்வருமாறு கூறலாம். சமகாலத் தென் கிழக்காசியப் பேரரசுடன் போராடி இந்து சமுத்திர வர்த்தகத்தில் தம்மாதிக்கத்தை ஏற்படுத்த விரும்பிய சோழர், இலங்கையைக் கைப்பற்றியபோது சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கிய திருக்கோணமலைத் துறைமுகத்திற் பெருங்கவனம்செலுத்தினர். இதனால், நாம் முன்னர் ஓர் இடத்திற் கூறியதுபோல், இலங்கையின் வேறு எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தைக்காட்டிலும்திருக்கோணமலை மாவட்டம் சோழரின் கூடியளவு கவனத்தை ஈர்த்த மாவட்டமாக விளங்கியது. எமக்குக் கிடைக்கின்ற பிறசான்றுகள் மாத்திரமன்றித் திருக்கோணமலை மாவட்டத்தில் இதுவரை கிடைத்துள்ள அதிகளவிலான சோழர்காலக் கல்வெட்டுக்களினால் இக்கருத்து உறுதிப் படுத்தப்படும். இந்த விதத்தில், பத்திரகாளி அம்மன் கோயிலிலுள்ள சோழர்காலக் கல் வெட்டு, திருக்கோணமலை மாவட்டத்திற் குரிய சோழக் கல்வெட்டுக்களின் தொகையை அதிகரித்து எமது மேற்படி கருத்தினை மேலும் வலுப்பெறச் செய்கின்றது என்ற விதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

UNIVERSITY OF JAFFNA LIBRARY
183626

# பழமைவாய்ந்த நகரத்துப் பத்திரகாளி அம்மன்

ஈழநாட்டின் மிகப் பழமையான நகரங்களில் ஒன்று திருக்கோணமலை. சைவத் தமிழ் மக்கள் இந்நகரப் பகுதியைச் சூழ்ந்துள்ள இடங்களில் தொடர்ந்து நிலைபெற்று வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. கோணேசர் ஆலயமும் அதன் வரலாறும் இந் நகரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதிலிருந்தே இதனை நாம் அறிந்து கொள்ளலாம். பல்லவர் காலத்துக்கு முன்பிருந்தே கோணேசர் ஆலயமும் திருக்கோணமலையும் சிறப்புற்ற நிலையில் இருந்திருக்கிறது. இத்தகைய சைவ மணங்கமழும் நகரத்தில் தான் பத்திரகாளி அம்மன் கோவிலும் அமைந்திருப்பது இந்நகரின் தெய்வீகத் தன்மையை மேலும் சிறப்புறச் செய்து கொண்டிருக்கிறது. கௌரி நோன்புக் காலத்தில் பத்திரகாளி அம்பாளை நேரில் தர்சிப்பவர்களின் பாக்கியமே பாக்கியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வெட்டின் பாடப்பிரதி

| கிழக்கு, பக்கம் 1 | தெற்கு, பக்கம் 2 | மேற்கு, பக்கம் 3 | வடக்கு, பக்கம் 4 |
|---|---|---|---|
| 1 டவ ஸி ஸ்ரீ<br>த | 1 சுந்தர | 1 திருத்தகு | |
| 2 திருமன்னிவ | 2 முடியும் | 2 முடியும் | |
| 3 ளர இரு நில | 3 இந்திர | 3 பய (ங்) கொடு | |
| 4 மட (ந்தை) | 4 ரைமு | 4 பழி மிக | |
| 5 யு (ம்) (பொ) ற்ச | 5 ம் தெண் | 5 முயங் | |
| 6 யப் (பாவை) | 6 டிரை ஈழ | 6 கியில் | |
| 7 (யு) ம் தன் | 7 மண்டல | 7 முதுகி | |
| 8 (பெருந்தெவி) | 8 முழுவது | 8 ட்டு த | |
| 9 யராகி இ— | 9 ம் எறிவ | 9 (ழித்த) | |
| 10 ன் (புற) நெ— | 10 டைக்கெர | 10 ஜ (ய) சி | |
| 11 டு தியல் ஊ | 11 ளன்முறைம | 11 (ங்) கன் | |
| 12 மியுள் இட | 12 யிற் (சூடுங்) | 12 அளப்பரும் | |
| 13 (துறை) நா (டும் | 13 (குல தரு) மா | 13 புகழொ | |
| 14 (தொடர்வன) | 14 கியபல (ர்) | 14 டு பீடி | |
| 15 வெலிப் (படர்) | 15 புகழ்மு— | 15 யல் இ | |
| 16 (வன) வா (சி) | 16 டியும் | 16 ரட்ட பா | |
| 17 யும் சுள்ளிச் | 17 செங்கதி | 17 டி ஏழ | |
| 18 (சூ) ழ் மதில் கொ | 18 ர் மாலை | 18 ரை இல | |
| 19 ள்ளிப்பா— | 19 யும் சங் | 19 கமும் ந | |
| 20 க்கையும் | 20 கதிர் வெ | 20 வ (ெ) நதிக் | |
| 21 நண்ண | 21 லைத் தொ | 21 குலப் பெ | |
| 22 ற்கருமுர | 22 ல் பெருங்கா | 22 ரு மலை | |
| 23 ண் மண் | 23 வற் பவ்ப | 23 களும் | |
| 24 ணைக்கட | 24 டிந் தீவும் | 24 (விக்) கிர (ம) | |
| 25 க்கமும் | 25 செருவில் (சி) | 25 (வீர) ர்ச (க்) | |
| 26 பொருகட | 26 னவி இரு | 26 கரக் கொட் | |
| 27 வீழத்த | 27 ப (த்தொரு) கா | 27 (ட) மும்மு (தி) | |
| 28 ரைசர் தம் | 28 ல் அரை சு | 28 ர் படவல் | |
| 29 முடியும் | 29 (க) ளை கட்ட | 29 லை மது (ரை) | |
| 30 ஆங்கவர் | 30 பரசுராமன் | 30 மண்டல | |
| 31 தெவியர் ஓ .. | 31 மெவரும் | 31 மும் (ம்) காமி | |
| 32 ங் கெழில் | 32 சா (ந்) திம (த்) | 32 டை வள (ந) | |
| 33 முடியும் | 33 தீ வரண் க | 33 மணக் (கொ) | |
| 34 முன்னவர் | 34 நதி (இரு) | 34 ணை (யும்) வெ | |
| 35 பக்கல் தெ | 35 த்திய செ | 35 (ஞ்சின) வீ – | |
| 36 ந்நவர் | 36 ம் பொற் | 36 (ரர் பஞ்சப்) | |
| 37 வைத்த | .................... | 37 (பள்ளியும்) | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதாம்பிகை

◆ பிரம்மஸ்ரீ எஸ். குகானந்த சர்மா ◆

ஈழத்தில் உள்ள புராதன காளி ஆலயங்களுள் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயமும் ஒன்றாகும். தக்ஷண கைலாசம் எனப் போற்றப்பட்டு வழிபடும் திருக்கோணமலைத் திருநகரிலே, இந்துமா சமுத்திரத்தை நோக்கிய வண்ணம் எழுந்தருளி இருக்கின்றாள் ஸ்ரீ பத்திரகாளி இந்நாட்டின் அதி அருட்சக்தி வாய்ந்த ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதால் இன மத வேறுபாடு ஏதுமின்றிச் சகலரும் இங்கு வந்து வழிபாடுசெய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவுசெய்துகொள்கின்றார்கள். அவ்வாறு அதிசக்தி வாய்ந்த காளியின் தொன்மையை ஈண்டு நோக்குவோம்.

## ஆராய்ச்சியாளர்களின் கருத்து

இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், இவ்வாலயத்தின் தொன்மையை அறியப் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். இங்கு, கற்றூண்களில் உள்ள எழுத்துக்கள் அவர்களுக்குப் பெரிதும் உதவின. இவைகளை நோக்கிய ஆராய்ச்சியாளர்கள் இக்கோவில் போர்த்துக்கீசர் காலத்துக்கு முற்பட்டது என முடிவு செய்தார்கள். இப்பொழுதும் இலங்கைப்பல்கலைக்கழக சரித்திர விரிவுரையாளர் கலாநிதி குணசிங்கம் அவர்கள் இவ்வால்யம் பற்றி மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறார் என்றால் மிகையாகாது. இவைகளை நோக்குமிடத்து 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது இக்காளி கோவில் என்று திண்ணமாகக் கூறலாம்.

## வரலாறு

மதுரையில் இருந்து காசியில் துறவறத்தை மேற்கொள்ள ஒரு பிராமணர் ஸ்தலயாத்திரை சென்றார். அவரது மனம் பக்குவநிலையை எய்தாமையால் அவர் ராமேஸ்வரம் வரநேர்ந்தது. இங்கு அவர் 'இல்லறம் அன்றித் துறவறம் இல்லை' என்ற வாக்கின்படி இல்லற வாழ்வில் ஈடுபடலானார். அவ்வாறிருக்குங்கால் ஓர் இரவு அவர் ஒரு கனவினைக்காண நேர்ந்தது. 'கடற்கரையோரமாக உள்ள இடத்தில் சிமிக்கிச் செவ்வரத்தைக்கு அடியில் ஓர் கிடாரத்துள் ஒரு காளியும், மணி, தீபங்களும் உண்டு. அதனைத் தோண்டி எடுத்து அக்காளிக்கும் நித்திய பூஜைகளைச் செய்வாயாக' என்பதே அக்கனவாகும். இதன்படி அவர் திருக்கோணமலையை அடைந்து குறிப்பிடப்பட்ட இடத்தைத் தோண்டிப் பார்த்தபொழுது அதிசக்திவாய்ந்த காளியைக் கண்டு களிப்புற்று அவ்விடத்தேயே ஆலயம் அமைத்துப் பூசைசெய்து வரலானார். அவர் மதுரையில் இருந்து வந்தமையால் 'மதுரை ஐயர்' என்று திருக்கோணமலை மக்களால் அழைக்கப்பட்டார். இன்றும் 'மதுரை ஐயரது' பரம்பரையினரே கோவிலைப் பரிபாலனஞ் செய்து, நித்திய பூஜைகளை வழுவாது செய்துவருகின்றனர்.

## சந்ததிக்கு வந்த சாபம்

பல சந்ததிகளுக்கு முன், இக்கோவிலைச் சேர்ந்த ஒரு பெண், ஒரு பிள்ளையையும், நாகம் ஒன்றையும் பெற்றெடுத்ததாகக் கூறப்படுகிறது. பிள்ளையையும், நாகத்தையும் பேணிவளர்த்து வருங்காலை, ஒரு திருமணவிழாவின்போது மூலையிலே சுருண்டு படுத்துத் துயில்கொண்டிருந்த நாகத்தைக் கவனியாது, அதன்மேல் வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர் தற்செயலாக கிடாரம் ஒன்றைப் பாம்பின்மேல் வைக்கவே அஃது இறக்கும்போது, உனக்கு ஆறு சந்ததிகளுக்கு ஆண்பிள்ளை இல்லை எனக் கோவிற் குருக்கள் குடும்பத்திற்குச் சாபமிட்டு இறந்தது. இதனால் இக்கோவிலைச் சேர்ந்தவர்களுக்கு ஆறு சந்ததிகளுக்கு ஆண்மகவு பிறக்கவில்லை என்றும், ஏழாவது சந்ததியிலேயே ஆண்மகவு பிறந்ததாகவும் கூறுகின்றனர்.

இஃது இவ்வாறிருக்க, இச்சந்ததியிலேயே இன்னுமொரு நிகழ்வு இடம் பெற்றிருப்பதை நாம் அறியமுடிகிறது. இற்றைக்குப் பலவருடங்களுக்குமுன் அர்த்தஜாமப்பூஜை முடிந்தபின் தமது உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணச்சென்ற பிரதமகுரு, தமது ஆண் பிள்ளையைக் காணுது இரவிலே எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்து பிள்ளையைக் காணுது மனம்வருந்தி, காளியிடம் முறைப் பாடுசெய்யச் சென்ருர். அங்கு அவர் தமது பிள்ளை யாருடனே மூலஸ்த்தானத்துக்குள் உரையாடிக்கொண்டிருப்பதைக் கேட்டார். இரவுப்பூஜை முடிந்தால் மறுநாள் உதயத் திலேயே கோவில் திறக்கப்படவேண்டும் என்ற சாஸ்திரவிதியுண்டு. இருந்தும் பிள்ளைப்பாசத்தால் பிரதமகுரு மூலஸ் தானத்தைத் திறக்கச்சென்ருர். இதற்கு முன் வைரவர் கோவிலில் இருந்த மூலஸ்த் தானத் திறப்பை எடுக்கும்போதே இராச பல்லி சப்தமிட்டுத் தடை சொல்லிற்று, அதை அவரின் பிள்ளைப்பாசம் உணரவிட வில்லை. மூலஸ்தானத்தில் இருந்து அசரீரி வாக்குக் கேட்டது. "நில்! உன்பிள்ளை இங்கு என்னுடன் பத்திரமாக உள்ளான். நீ, நாளைக்காலை அவனைக் கூட்டிச்செல்!" என்பதே அக்கட்டளை. குரு மனம் புழுங் கிஞர். மனைவியோ துடியாய்த்துடித்து, பிள்ளையைத் தரும்படி அடம்பிடித்தாள். சாஸ்திரவிதி ஒருபுறம், பிள்ளைப்பாசம் மறுபுறம், காளி அம்பாளின் கட்டளை முன்புறம்; குருக்கள் தடுமாறிஞர் செய்வ தொன்றறியாது ஆவேசத்துடன் மூலஸ் தானத்தைத் திறந்தார். அப்போது மீண் டும் காளியின் பயங்கரக்கட்டளை கேட்டது. உனக்குப் பிள்ளைதானே வேண்டும்...... இந்தா! உனக்குப்பாதி, எனக்குப் பாதி" எனக்கூறிப் பிள்ளையை இரண்டாகக் கிழித் துப்போட்டது.

பிள்ளையின் ஈமைக்கிரியைகளின்பின் ஒரு மண்டலம் உபவாசம் இருந்து, அவர் மீண்டும் ஓர் ஆண்மகவைப் பெற்ருர். இப்பொழுதும் அச்சந்ததியினரே காளி அம்பாள் ஆலயத்தைப் பரிபாலித்து, நித் திய பூஜைகள் செய்துவருகின்றனர். இந் நிகழ்ச்சிகளுக்குப் பின்பு, அவர்கள் அம் பாளுக்குக் குறையேதும் இல்லாது மிக்க பக்தி சிரத்தையுடன் ஒவ்வொருவேளைப் பூஜைக்கும் தலையிலே தண்ணீர் ஊற்றித் தோய்ந்து, சந்தியாவந்தனம் முதலான நித் திய கடமைகளை நிறைவேற்றி, திருவமுது வைத்து பக்தியுடன் அம்பாளுக்கு பூஜை செய்து வருகிறனர்.

## அற்புத நிகழ்ச்சி

மிகவும் பழமைவாய்ந்ததும் மிக்க அழகானதுமான ஒரு சிங்கவாகனம் இக் கோவிலிலே உள்ளது. தென்இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இச்சிங்கவாக னத்தைக் கொண்டுவந்தபோது திருக்கோண மலையில் கப்பல் நங்கூரமிடநேர்ந்தது. கப்பலில் வந்தோர் தமது வேலைகளை முடித்துவிட்டு கப்பலை இயக்க, அஃது இயங்க மறுத்து விட்டது. இதனுல், சிங்கவாகனத் தைக் கடலுக்கு அண்மித்தாக இருக்கும் இக்ககாளிகோவிலுக்கு அர்ப்பணித்து, வழிபாடு செய்தபின் அவர்கள் மீண்டும் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். கப்பற்காரர் கொடுத்த சிங்கவாகனம் இப் போதும் சிங்கவாகனத்திருவிழாவில் நடு நாயகமாக வருவதை நாம் காணலாம்.

மிக்க அழகுள்ள பெண் ஒருத்தி, தனது அழகு மிடுக்குடன் காளியைக் கனஞ்செய் யாது மறுபுறம் பார்த்துச் சென்ருள். அவள் எப்பக்கம்திரும்பிச்சென்ருளோ, அப் பக்கமே அவளது கழுத்தும் வாங்கிவிட்டது, இதனுல் மனம் நொந்து காளிமீது பழி போட்டுத்தினமும் வழிபாடு செய்யவே. கோவில் கிணற்றிலே தோய்ந்து உனது தலை முடியை வெட்டி, எனக்குக்காணிக்கை யாகத்தா "எனக்காளி கேட்பது போன்ற கனவினைக்கண்டாள்; அவ்வாறே செய்தாள், இதனுல் அவளது கழுத்து, முன்பு இருந்த நன்நிலைக்கு வந்துவிட்டது. இந்த நிகழ்ச்சி களுக்குப் பின் குறிப்பாகப் பெண்கள் பக்தி சிரத்தையுடன் காளிஅம்பாளை வழிபாடு செய்து வருகின்றனர்.

## விஷேச உற்சவங்கள்

தைமாதத்தில் லக்ஷார்ச்சனையிலே தினமும் அபிஷேகம், யந்திரபூசை முதலி யனவும் பூர்த்தியன்று சங்காபிஷேகமும் உற்சவமும் நடைபெறுகின்றது. பங்குனியில் மஹோற்சவம் 'பங்குனி உத்திரத்துடன். முடிவுறுகின்றது. வைகாசியில் அம்பிகைக்கே உரித்தான பொங்கல், திங்களன்று நடை பெறுகின்றது. புரட்டாதியில் நவராத்திரி தினங்களில் அம்பிகை ஒவ்வொருநாளும், ஒவ்வொரு திருவுருவில் காட்சி அளிக்கின் ருள்; கேதாரகௌரி விரதமும் ஆரம்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐப்பசிலல் தீபாவளி அமாவாசையுடன் நிறைவேறுகின்றது. திருவெம்பாவை, மார்கழியில் சிறப்புற நடைபெறுகின்றது.

**தேர்த்திருவிழா**

கிழக்கு மாகாணத்தில் மூன்று சித்திரத் தேர்களைக்கொண்ட ரதோற்சவம் ஸ்ரீ பத்திரகாளி கோவிலில் மட்டுமேயாகும். இங்கு உள்ள மஞ்சம் மிகவும் அழகுவாய்ந்ததாகும்.

**நூதனப் பிரதிஷ்டை**

இன்று நடைபெறும் புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகத்தில் லக்ஷ்மியும், ஸரஸ்வதியும் கும்பாபிஷேகஞ் செய்துவைக்கப் படுகின்றனர். காளி, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய முச்சக்திகளையும் கொண்ட கோவில் இலங்கையில் வேறில்லை என்று கூறவேண்டும்.

இலங்கையில் சிவாகமவிதிப்படி பூஜைகள், உற்சவம், மகோற்சவம் முதலானவை நடைபெறும் கோவில்களுள் திருக்கோணமலை, ஸ்ரீ பத்திரகாளி கோவிலும் ஒன்று. இவை எவற்றிலுமே குறையேதும் ஏற்படா வண்ணம் மேற்படி தேவஸ்தான ஆதீன கர்த்தா, சிவதர்ம பாஸ்க்கரன் சிவஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள் தினமும் பூஜைகளைச் செய்து, கோவிலைத் திறம்படப் பரிபாலித்து வருகின்றார். சோமாஸ்கந்த ஐயா எனக் கூறும்போது அவரது ஏகபுத்திரன் பிரம்மஸ்ரீ. ரவிச்சந்திர சர்மா அவர்களை எவரும் மறக்கமாட்டார்கள். சிறுவயதுமுதல் அம்பிகையின் தொண்டிற்கே தமது வாழ்வை அர்ப்பணித்து அம்பிகையின் திருத்தொண்டில் ஈடுபட்டு வருபவர் அவர். இவர்கள் இருவருடைய பெருமுயற்சியாலும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வீற்றிருந்து, செங்கோலோச்சி, அருள்பாலித்த வண்ணம் இருக்கின்றாள். திருக்கோணமலை மக்கள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் பக்தர்கள்; திருத்தொண்டர்கள். இன்று நடைபெறும் மஹா கும்பாபிஷேகத்தைக்கண்டு வழிபடும் நாம், நாமும் திருத்தொண்டுகள் பலசெய்து, அம்பாளைத் தினமும் வழிபட்டு, காளியின் திருவருளைப்பெற்று, ஈடில்லா பெருவாழ்வு வாழ்வோமாக!

---

## அபிராமி அந்தாதி

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாம்எம்பி ராட்டிநின் தண்ணளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சக்தி! எங்கும் சக்தி!! இது தான் இன்றைய விஞ்ஞான கோட்பாடு. இதுவேதான் அன்றைய ஆத்மீககோட்பாடும் என்று அறியும்போது கொஞ்சம் வியப்பும் ஏற்படுகின்றது.

விஞ்ஞானியும் மெஞ்ஞானியும் கண்டறிந்த இந்த ஒரே முடிபு - அஞ்ஞானிகளின் கண்களைத் திறக்கின்றன.

'யாதுமாகி நின்றாய் காளீ -
எங்கு நீ நிறைந்தாய்'
என்று பாடிய பாரதி

பூதமைந்தும் ஆனாய் - காளீ
பொறிகளைந்துமானாய்
போதமாகி நின்றாய் காளி
பொறியை விஞ்சி நின்றாய் -
என்று தொடர்ந்து பாடுகின்றான்.

# சக்தி

'சக்தி இன்றி சிவனில்லை' என்ற மெஞ்ஞானிகளின் தத்துவ கோட்பாட்டுக்கு 'சக்தி இன்றி சிவனுமில்லை' என்ற விஞ்ஞான கோட்பாடும் ஒத்துவருகின்றது.

சலனமில்லாது நிற்கின்ற பொருளும் நிலைப்பண்பு சக்தி கொண்டுள்ளது. அந்தப் பொருள் அசையத் தொடங்கியதும் அந்த நிலைப்பண்பு சக்தி இயக்கப்பண்பு சக்தியாக செயற்பட ஆரம்பிக்கின்றது. இதனை ஆங்கிலத்தில் - PUTENTIAL ENERGY என்றும் இயக்கப்பண்பு சக்தியை KINETIC ENERGY என்றும் சொல்வர். எனவே சக்தியில்லாப் பொருள் ஒன்றும் இவ்வுலகில் இல்லை.

இயக்கப்பண்பு சக்தி - மேலும் வெப்ப சக்தியாகவும், ஒளிச்சக்தியாகவும், ஒலிச் சக்தியாகவும் மாறுபாடுகொள்ளவல்லது.

சக்தி என்றும் அழிவதில்லை. ஒரு நிலைப் பண்பில் இழந்து வேறு ஒரு நிலைப்பண்புக்கு சக்தி மாறுமே ஒழிய சக்தி அழிந்துபடுவதில்லை.

ஒளிச்சக்தி - வெப்பசக்தியாக மாறலாம். வெப்பசக்தி - மின்சக்தியாக மாறலாம். இப்படி ஒவ்வொரு தொழிலுக்கு ஏற்றவாறு சக்தி மாறலாம் ஆனால் நிச்சயம் அவை அழிவதில்லை. இது விஞ்ஞானம்.

மெஞ்ஞானத்தில் சக்தியே தாயாகி நிற்கின்றாள். அந்தச் சக்தியின் ஆயிரம் முகங்களில் குளிர்ச்சியைக் காண்கின்றோம், வெப்பத்தைக் காண்கின்றோம். தாய்மையைக் காண்கின்றோம். தூய்மையைக் காண்கின்றோம். செல்வத்தைக் காண்கின்றோம். கல்வியைக் காண்கின்றோம். எந்த எந்த குணநலனில் எங்கள் சக்தியை காண்கிலும் அவள் ஒரே சக்திதான். அந்த சக்தியின் ஆயிரம் பண்புகள்தான் அவை என்பதை நாம் அறிவோம். வெப்பம் - நெருப்பு - வீரம் - துர்க்கை - இவைகளுக்குத்தான் எத்தனை தொடர்பு! எதையும் எரிக்கின்ற வெப்ப சக்தியாக வீர துர்க்கை நம் கண்ணெதிரே தெரிகின்றாள்.

கல்வி எனும்போது - சங்கீதம் - ஒளி - தூய்மை - வெண்மை - எமக்கு தெரிகின்றது. ஒலிச்சக்தியாக - சரஸ்வதி தோன்றுகின்றாள்.

டாக்டர் சி. அருள் இராமலிங்கம்

செல்வம் எனும்போது - தங்கம் - பளபளப்பு - ஒளிர்வு - ஒளி எண்ணத்திற்கு வருகின்றது. ஒளியின் வடிவாக லக்ஷ்மி தெரிகின்றாள்.

எனவே துர்க்கைக்கும், லக்ஷ்மிக்கும், சரஸ்வதிக்கும் நாமெடுக்கும் விழா - நவராத்திரி விழா - வீரத்திற்கும், செல்வத்திற்கும், கல்விக்கும் எடுக்கும் விழாவாகக் கொள்ளலாம்.

இன்றும் ஒருபடி மேல்நோக்கி - விஞ்ஞான கருத்துடன் பார்த்தால் - சக்தியின் வெப்ப, ஒளி, ஒலி வடிவத்திற்கு நாம் எடுக்கும் விழாவாகவும் கொள்ளலாம்.

நமது முன்னோர் நம்மிலும் அறிவானவர்கள். நமது விஞ்ஞான அறிவினை அன்றே அறிந்திருந்தவர்கள் என்பதைத்தான் இது காட்டுகின்றதா?

" எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெல்லாம
பண்ணியதோர்
சக்தியே நம்மை சமைத்தது காண் நூறாண்டு
பக்தியுடன் வாழும் படிக்கு"

என்று பாரதியுடன் நாமும் பக்தியுடன் சக்தியைத் தொழுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராதிருந்தால்..

"ஈயறியாப் பூந்தேனே
எழுத்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே
கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந்து
உயிரூட்டும் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ
நிகிலபரம்பர மூர்த்தி."

திருவருள் ஆற்றல் உலகை வாழ்விக்கின்றது. உலக இயக்கத்திற்கு ஆணிவேரே திருவருள்தான். அருளின்றேல் யாதொரு பொருளும் அசைவதும் இல்லை. பம்பரம் சுற்றும்பொழுது அதனைச் சுற்றவைத்த கருவி ஒன்று உள்ளது என்று தெளிவாவது போல உலக இயக்கத்தை உற்று நோக்கும் பொழுது அதனை உள்ளிருந்து இயக்கும் உறுபொருள் ஒன்று உள்ளது என்பது தெளிவாகின்றது.

அந்த மறைப்பொருளே ஈயறியாப் பூந்தேனாகவும், எழுத்தறியா மறைப் பொருளாகவும், காயறியாச் செழுங் கனியாகவும், தாயறியாக் கருவிலிருந்து உயிரூட்டும் தாய்த் துணையாகவும் நின்று இயக்குகின்றது. மணிவாசகப் பெருந்தகை இக்கருத்தை இன்னும் அழகாகக் கூறுவார்.

"உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந்து என்உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினு லாண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை
அருத்தியினல் நாயடியேன்
அணிகொள் தில்லைகண்டேனே"

கருத்து இருத்திக் கருவிக் காக்கும் கருணை உள்ளத்தைத் தான் நமது முன்னோர்கள் "இறை' வடிவாகக் கண்டனர். தாயிற் சிறந்த அந்த தயாவான தத்துவத்தைத் தான பரம்பொருள் வடிவமாக வணங்கினர். சகல நலன்களுக்கும் ஆதார சுருதியாக, அடிப்படைப் பண்பாக மிளிரும் பரம் பொருளின் தன்மைக்கு தாய்மை வடிவம் தந்து மேலும் மெருகூட்டினர் நம்முன்னோர்.

தன்னலம் கருதாத தாயுள்ளம் கருணை நற்றேன் நிரம்பிய அன்பு வள்ளம். ஆகவே தான் பாரினில் தாய்க்குலத்திற்குத் தனித்த தோர் பெருமை நிலைத்திருக்கின்றது. பேரின்பக்காடாக விளங்கும் இறைவனை நம் முன்னோர் தனித்துத்துதிக்கவில்லை. இறைவியுடன் இணைத்தே வந்தித்து வழிபட்டனர். ஈடிலா இறைவன் சக்தியுடன் இணையும் பொழுதுதான் நம்முள்ளத்தில் சக்தி பிறப்பதை அறிந்தனர் நம் ஆன்றோர்.

"கண்ணுதல் யோகிருப்பக்
காமன்நின் றிடவேட்கைக்கு
விண்ணுறு தேவராதி
மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனைஏவ
எரிவிழித்து இமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து
உயிர்க்குப் பேரின்பம் அளித்த தோரார்"

தாயாகிக் காக்கும் அத்தெய்வத்தை தண்டையணியும் குழந்தையாக்கி, தாலாட்டிப் பாலூட்டி, நீராட்டிச் சீராட்டுகின்றனர் தமிழறிந்த புலவர் பெருமக்கள். தமிழுடன் பிறந்த அந் நெல்லைத் தவமும் அவர்கள் ஆசைக்கெல்லாம் வளைந்துகொடுக்கிருள்.

ஒருநாள் ............பொய்யாத வளமை தரும் பொருநைப் புனலிலே அவர் பைங் கூந்தல் காந்திமதிக் குழந்தையை மஞ்சன மாட்டிவிட்டு, அம்பு விழிக்கு அஞ்சனம் கொண்டு, பொன்னுபரணங்கள் ஏந்தி ஓடி வருகின்ருள் அன்னை. தண்ணீரில் நீராடிய பொழுதே தந்தையின் நினைவு வந்துவிட்டது குழந்தை காந்திமதிக்கு. அக்கம் பக்கம் பார்த்து அபயம் கிடைத்ததும ஓடிச்சென்று தந்தையின் மார்பிலே தஞ்சம் புகுகின்ருள் உலகனைத்திற்கும் தஞ்சமளிக்கும் அஞ்சுக மொழியாள்.

வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிவந்த அன்னை நீர்க்கரையிலே குழந்தையைக் காணுமல் துணுக்குறுகின்ருள். திரும்பிப் பார்க்கின்ருள். அதோ...அந்தக் குறும்புக் குழந்தை தந்தையின் மார்பிலேறி விளையாடியவாறு தாயை நோக்கிப் புன்னகை பூக்கின்றது. நேரம் ஓடுகின்றது. எப்படியாவது குழந்தையைத் தன்னிடம் அழைக்க வேண்டுமே!...... என்ன செய்வது -- ஓ - குழந்தைக்கு விருப்பான ஒன்றைச் செய்வதாகவோ தருவதாகவோ சொன்னுல் ஓடி வந்துவிடமாட்டாளா ........ அன்னையின் மனத்திலே ஆசை. எண்ணத்தை வார்த்தையாகத் தொடுக்கின்ருள்.

"நீ வாராதிருந்தால்........ இனிநான் உன் வடிவேல் விழிக்கு மையெழுதேன்." குழந்தைக்கோ விளையாட்டின் மும்முரம் ஒப்பனையைக் காட்டிலும் ஒளிகாலும் அணி பணிகளை விரும்புவது மழலை உள்ளத்தின் ஏன் மங்கையர் உள்ளத்தினதும் இயற்கை தானே "மணியால் இழைத்த அணி புனையேன் குரல் கொடுக்கின்ருள்........... குழந்தையின் காதில் ஏறவில்லை...........

வளரும் பயிருக்கு வான் மழைபோல தளிர்க்கும் குழந்தைகளுக்கு தாயன்பு அதிக முக்கிய மல்லவா?— அடுத்த படிக்கு இறங்குகின்ருள். பேராதாத்திநெடு பழக்கம் பேசேன்—சிறிதும் முகம் பாரேன்"......... மழலை உள்ளம் கனியவில்லை.

உனது தந்தை விரும்பினுல் நல்லாவின் தீம்பாலைக் கறந்து உனக்கு ஊட்டலாம். அவராலும் நான் தரும் உயிரமுதத்தை அளிக்க முடியாதே...... அறம் வளர்த்த நாயகியின் அமுதப் பால்தானே ஒரு காழிக் குழவியை உலகிற்குத் தந்தது ....."பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்." அது மட்டுமா ........ என் இடுப்பில் உன்னை அமர்த்திக்கொண்டு உனது மலர்க்கண்கள் அகல விரிய தேரோடும் வீதி அழகைக்காண்பிப்பேனே...... அதையும் இனிக்காட்டமாட்டேன். இளங்குருத்து இம்மியும் இடம் பெயரவில்லை. தாயின்உள்ளத்திலே தவிப்புச் சூடு ஏறுகிறது.

"ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து
நீ முத்தந்தா வென்று அவர் கொஞ்சும்
வேளையில் நித்த நித்தம்
வேய்முத்தரோடு என் குறைகளெல்லாம்
மெல்ல மெல்லச் சொன்னுல்
வாய்முத்தம் சிந்திவிடுமோ நெல் வேலி
வடிவம்மையே."

என்று நெல்வேலியுறை நாயகியைப் பார்த்து ஒரு புலவர் வினவுகின்ருர். வேய் முத்தருக்கு வாய்முத்தம் அளிக்கும் முக்தி தாயினியைப் பார்த்து அன்னை நெஞ்சு வெதும்பக் கூறுகின்ருள். "செய்ய கனிவாய் முத்தமிடேன்."..... காந்திமதி திரும்பவும் இல்லை...

கடைசியாக இருந்த ஒரு பாணத்தையும் பயன்படுத்துகின்ருள். திகழும்மணித்தொட்டிலில் ஏற்றித் திருக்கண் வளரச் சீராட்டேன்' தாயார் இமவான் தடமார்பில் தவழும் குழந்தை இவ்வளவு முறைப்பாடுகளையும் செவியேற்காமல் தனது விளையாட்டிலேயே கருத்தூன்றி இருப்பதைக் கண்ட தாயின் கோபம் விம்மிவெடித்து எல்லையைக் கடக்கின்றது.

"சாலிப்பதி வாழ் காந்திமதித்தாயே! வருக! என்று கதறலைக் கேட்டுத் திரும்பிய குழந்தை தாயின் கால்களில் தஞ்சம் புகுகின்றது. அவளது விழிநீரைத் தன் பிஞ்சு விரலால் துடைக்கின்றது.

பலமுறை பலவிதமாக அடித்தும் வராத குழந்தை இப்பொழுது ஏன் வந்தது ....... ஆம்—அதில்தான் உண்மை ஒளிந்து நிற்கின்றது. அண்டாண்ட கோடிகளையும் ஈன்ற பெருமாட்டியைத் தாயே! என நாம் தளர்ந்து நின்று தழைந்து, நின்று அழைக்கும் பொழுது அவளது உள்ளத்தில் கனிவு ஊற்றெடுக்கின்றது. எந்தச் சொல்லிற்கும் இல்லாத உருக்கமும் நெருக்கமும் "தாய்" என்ற தனிப்பெரும் சொல்லிற்கு இருக்கின்றது. மேலும் ஒரு தாயின் உள்ளத்தை மற்ருெரு தாயால் தானே புரிந்து கொள்ள முடியும் ..... இத்தனை அரிய பெரிய உண்மைகளையெல்லாம் உள்ளடக்கி, அழகிய சொக்கனுதப்பிள்ளை என்ற பெரியவர் "காந்திமதியம்மன் பிள்ளைத்தமிழில்" இந்த வருகைப் பருவப் பாடலை அமைத்து நமது கருத்துக்கு விருந்தளிக்கின்ருர். சிந்திப்பதற்கரியதான இத்தெய்வத் தமிழ்ப்பாடலை சிந்தித்து நலம் பெறுவோம்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாரா திருந்தால் இனிநான் உன்
 வடிவேல் விழிக்கு மையெழுதேன்.
மதிவாள் நுதற்குத் திலகமிடேன்
 மணியால் இழைத்த அணிபுனையேன்
பேராதரத்திலெடு பழக்கம் பேசேன்
 சிறிதும் முகம் பாரேன்.
பிறங்கு சுவைப்பால் இனிதூட்டேன்
 பிரியமுடன் ஒக்கலையில் வைத்துத்
தேரார் வீதி வளம் காட்டேன்
 செய்ய கனிவாய் முத்தமிடேன்
திகழும் மணித் தொட்டிலில் ஏற்றித்
 திருக்கண் வளரச் சீராட்டேன்
தாரார் இமவான் தடமார்பில்
 தவழும் குழந்தாய்! வருகவே!
சாலிப்பதி வாழ் காந்திமதித்
 தாயே! வருக! வருகவே!!

# மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தல்
 பிடியே வருக; முழுஞானப்
பெருக்கே வருக; பிறைமௌலிப்
 பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக; மும்முதற்கும்
 வித்தே வருக; வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
 விளைவே வருக; பழமறையின்
குருந்தே வருக; அருள்பழுத்த
 கொம்பே வருக; திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
 குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக; பசுங்குதலை
 மழலைக் கிளியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
 வாழ்வே வருக வருகவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்ஞானி ஆத்மீகஞானி ஆகிறார்

= வே. வரதசுந்தரம் =
(ஆங்கில ஆசிரியர், திருக்கோணமலை மேற்கு தமிழ் மகாவித்தியாலயம்.)

தேவி தரிசனம் கிடைத்தபோதெல்லாம் அடியார்கள் விடுத்த கோரிக்கைகள் பலவகையானவை.

செம்பொனும் மணியும் கேட்டிருக்கிறார்கள் பசியால் வாடும் மக்களின் பசிநோய் போக்கும்படி கோரியிருக்கிறார்கள், நோயின் காரணமாகத் துயருறும் மக்களின் நோய் போக்கும்படி கெஞ்சியிருக்கிறார்கள்.

நல்ல மனம் கேட்டிருக்கிறார்கள். முத்தி பீடுபேறு, திருவடிப்பேறு ஆகியவற்றை நாடியிருக்கிறார்கள். மனிதப் பிறவி அன்பு தருமாறு இரந்து கேட்டுள்ளனர். அன்பும் அருளும் அறமும் வேண்டியிருக்கிறார்கள் ஆனால்...

''அன்னையே! எனது நாட்டு மக்களின் விடுதலைக்குப் போராட எனக்கு நெஞ்சுறுதியும் நீண்ட ஆயுளும் தருக.''

இறைவி தரிசனம் கிடைத்தபோது இவ்வாறு கேட்டவர் வேறு யாருமல்ல அரவிந்த அடிகளாரே ஆவர்

ஒரு தீவிரவாதியாகப், புரட்சி வீரனாக வாழ்க்கையை ஆரம்பித்து சமயவாதியாக மெய்யியற் சிந்தனையாளனாக பராசக்தி பக்தனாக மலர்ந்த புரட்சியோகி அரவிந்த அடிகள்.

இந்தியாவில் பிரித்தானியப் பேரரசுக்கு எதிராக இயங்கி தேசத்துரோகக் குற்றச் சாட்டின் பேரில் கைதாகி விசாரணையை எதிர்நோக்கி இருந்த வேளையில் இறைவியின் இடத்து நாட்டம் பெருக்கெடுத்து ஓடியது,

அவர் கைது செய்யப்பட்டதும் மனம் தளர்ந்து போனார். ''எனக்கு வாழ்க்கையிலே ஓர் இலட்சியம் உண்டு. எனது நாட்டு விடுதலைக்குப் பாடுபடல் வேண்டும். இவ்வாறு ஆகிப்போனால் என்சேவை என்னாவது?' என்றெல்லாம் கவலைப்பட்டார்.

இவ்வாறு மூன்று நாட்கள் அவர் கவலைப் பட்டுக் கொண்டிருந்த பொழுது ''பொறுத்திருந்து பார்'' என்ற அன்னையின் குரல் கேட்டது. ஒரு மாதமாகத் தனிமையில் அடைபட்டுக் கிடந்தபோது சொற்ப நாட்களுக்கு முன்னர் நிகழ்ந்த சம்பவம் ஒன்று அவர் ஞாபகத்துக்கு வந்தது.

எல்லா அலுவல்களையும் ஒதுக்கிவிட்டு, செயற்பாடுகளில் இருந்து உள்ளத்தாலும் உடலாலும் ஒதுங்கி, தனிமையை நாடிச் சென்று உள்ளூரப் பார்த்து அன்னை பராசக்தியின் சிந்தனையில் இரண்டறக் கலக்க வேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டது. எனினும் அந்த உள்ளுணர்வுக்கு இறைவியின் ஆணைக்குச் செவி கொடுக்கும் உள்ளத் திண்மை அரவிந்தரிடம் அப்போது இருக்கவில்லை.

''உன்னால் சாதிக்க முடியாத உனது முயற்சியால் ஒடிக்க முடியாத பாச விலங்கினை ஒடிக்க இன்று இச்சிறையில் அடைத்து நானே வழிப்படுத்திவிட்டேன்'' என்று அன்னை பராசக்தி குரல் கொடுப்பது அவருக்குக் கேட்டது.

அச்சிறைச்சாலை அறையொன்றில் அவரிடம் இறைவி பகவத்கீதை ஒன்றினை வழங்கினாள். அரவிந்தருக்கு புதிய தெம்பும் அசையாத இறை நம்பிக்கையும் ஏற்பட்டது கீதை கூறும் சாதனையை ஒழுக்காறாகக் கொண்டார். கிருஷ்ண பகவான் அருச்சுனனிடம் கோரியது என்ன என்பதைச் சிந்தித்தார்.

''நாம் நமது கடமைகளை விருப்பு வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும்.

சேவை ஆற்றும்போது பலனைப்பேணாது இயங்க வேண்டும்.

நான் என்னும் அகந்தையை விடுத்து இறைவியின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலிழந்து செயற்படல் வேண்டும்.

வாழ்க்கையின் உயர்மட்டம் கீழ்மட்டம் ஆகிய இரு நிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.

நண்பன் எதிரி என்ற வேறுபாடின்றிச் செயலாற்றும் பக்குவம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி தோல்வி இரண்டினையும் ஒக்கவே நோக்கும் மனத்திராணி வேண்டும்.

இதுவே கீதைகூறும் செய்தி என்பதைத் தெளிந்தார். ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று துணிந்தார். அன்னையைச் சரணடைந்தார் அரவிந்தர்.

இறைவியின் திருவருளால் அவரிடம் சிறைக் காவலர்கள் கருணை காட்டியதும், சிறையில் இருந்த குற்றவாளிகள் அவருக்கு இறைவியாகவே தோன்றியதும், எதிர்பாரத விதமாக விசாரணையின்போது நீதிமன்றத்தில் அன்றைய புகழ்பூத்த வழக்கறிஞர் சித்தரஞ்சன் தாஸ் தோன்றி இவருக்காக வழக்காடியதும், இவர் விடுதலை பெற்றதும் நாம் அறிந்ததே. இவை எல்லாம் திருவருட் குறிப்பினுல் இறைவியின் கடாட்சத்தால் நிகழ்ந்தவை ஆகும்.

அரவிந்தரின் வாழ்வினை ஊன்றிப் பார்த்தால் ஓர் உண்மை புலனுகும். அரவிந்தர் பொதுவாழ்க்கைக்குத் தம்மையே அர்ப்பணித்தவர். இந்திய நாடு தருமத்தினுல் வாழ்வது. தருமத்துக்காக வாழ்வது என்பதே அவரின் திடமான நம்பிக்கை. இதுவே அவர் பொதுவாழ்க்கை.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டபோது அவருக்கு வேதனைகள் சோதனைகள் ஏற்பட்ட வேளைகளில் அன்னையிடத்துப் பரிபூரண சரணுகதி அடைந்து விடிவுபெற்றிருக்கிறுர் விடுதலை பெற்றிருக்கிறுர்.

அன்னை பராசக்தியிடம் பூரணமாகச் சரண் அடைதலே அவர் வாழ்க்கையின் உயிர்ப்பாக, உயிர் நாடியாக வேட்கையாக விளங்கியது.

## காளிதேவியின் மந்திர நாமம்

தேவியின் நாமத்தை அனுதினமும் ஓதுபவரைத் துன்பங்கள் அணுகா. 'ஓம்ஸ்ரீ காளிகாயை நம:' என்னும் மந்திரம் மகா சக்திவாய்ந்தது. இம் மந்திரத்தைப் பய பக்தியோடு நாளும் பொழுதும் ஓதிவரின் பேராபத்துக்களினின்றும் விடுபடுவர்.

மந்திரத்தை ஓதி நீறை அணியுங்கள். எல்லாக் காரியங்களும் ஜெயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிலமெல்லாம் அருள்சுரக்கும் ஆதி ஸ்ரீ பத்திரகாளி

முகாந்திரம் சி. முத்துக்குமாரு ஜே. பி.

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தால், கும்பாபிஷேக மலர் ஒன்று வெளியிட இருப்பதையறிந்து பெரு மகிழ்வடைந்தேன். இது எனது எழுபத்தேழு வருட வாழ்க்கையில் மன நிறைவைக் கொடுப்பதொன்றாகும். காரணம் இக்கால வெல்லையில் இக்கோயிலின் வரலாற்றை ஓரளவறிந்திருந்தமையேயாகும்.

இன்று ஆயிரமாயிரம் அடியார்கள் வழி பட்டு அருள்பெற, நித்திய நைமித்தியங்கள் வழுவாது நடைபெறும் இவ்வாலயம் அன்று சாதாரண நிலையிலேயே இருந்துவந்தது. இன்றுபோலன்றும் இருகாலப் பூசையே நடைபெற்று வந்தாலும், இன்ன நேரந் தான் பூசையாகும் என்பதை உத்தேசிக்க முடியாது. அப்போது வழிபட வரும் அடி யார்களும் விரல் விட்டெண்ணக் கூடியவர் களே. உற்சவ மகோற்சவங்களும் அவ்வாறே யாகும். ரதோற்சவத்தின்போது இதற்கென உள்ள ஒரு சிறிய சகடையைக் கம்பு தடி களால் சிறிய தேராக்கி ரதோற்சவம் நடை பெறும். அதன்பின் வேலுப்பிள்ளை கந்தையா அவர்களால் ஒரு தேர் செய்விக்கப்பட்டது. இன்று மிக முக்கியமானதும் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் பக்தி சிரத்தை யுடன் அம்பாளை வழிபட்டு அருள்பேற் றையடையும் விரதமான ஸ்ரீ கேதாரகௌரி விரதத்தை அன்று மிகக் குறைந்த அளவி னரே அனுஷ்டித்துவந்தனர். எனது இள வயதில் இவ்வாலயத்தை நிர்வகிப்பதே மிகச் சிரமமான காரியமாக இருந்துவந்ததாக சொல்லலாம். எனது காலத்திற்கு முன்பு இவ்வாலயத்தில் பல அற்புதங்கள் நடந்த தாக முன்னோர் சொல்ல அறிவேன். இதுவும் இவ்வாலயத்திற்கு வழிபட வரும் அடியார் கள் குறைவாயிருந்ததற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

அவ்வித நிலையில் இருந்த ஆலயத்தில் நான்காவது கும்பாபிஷேகத்தையும் கண்டு உளமுருக வழிபட்டுப் பிறவிப்பயனடையக் கிடைத்தது அம்பாளின் அருட் செயலே யாகும். காலத்துக்குக்காலம் இவ்வாலயத் தின் கட்டிட அமைப்பு திருத்தியமைக்கப் பட்டு இன்று ஒரு கலைக்கோயிலாகவே காட்சி தருகின்றது. கடந்தகாலத்தோடு இக்காலநிலையை ஒப்புநோக்குமிடத்து இவ் வாலயத்தின் துரித வளர்ச்சியை உணர முடியும்.

அன்று பல இடிபாடுகளுடன் இருந்த கர்ப்பக்கிருகம் நான்காவது முறையாகத் திருத்தியமைக்கப்பட்டு, பல சிற்பங்களும் அமைக்கப்பட்டு அழகுறக் காட்சி தரு கின்றது. அன்று சாதாரணமண்டபங்களாக இருந்த மகா மண்டபம், அர்த்தமண்ட பங்கள் முற்றுமுழுதாகத் திருத்தியமைக்கப் பட்டு சிற்ப சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய ஒரு கலைக்கோயிலாகவே காட்சி தருகின்றது.

எரியும் விளக்கிற்கு எண்ணெய் தேடிய இவ்வாலயத்தில் எங்கும் ஜோதியாக மின் விளக்கு ஒளிர்கின்றது. விரல்விட்டு எண் ணக்கூடிய அடியார்கள் வழிபட்டு வந்த இவ்வாலயத்தில் நித்திய பூசைக்கே திரு விழா கூட்டத்தைக் காணக் கூடியதாக வுள்ளது. தேர்த் திருவிழாவின்போது நான்கு வீதியும் பிரதட்சணம் பண்ணும் அடியார்களால் நிரம்பி வழிவதிலிருந்து அம்பாளின் திருவருளை நாம் அறியமுடியும். அடியளிக்கும் அன்னையர் தொகையோ இதிலிருமடங்காகும். இதிலின்னுமொரு அற் புதம் சக்தியின் ஆலயத்தில் சக்தியே வடி வான தாய்மார்கள் ஒரு வடந்தொட் டிழுப்பது. அன்று சாதாரண சகடையைத் தேராக்கி இழுத்த இவ்வாலயத்தில் இன்று புத்தம் புதிய மூன்று சித்திரத் தேர்கள் பவனி வருவதைக் காணலாம். அத்தோடு சிற்பவேலைகளுடன் கூடிய மஞ்சமும் காண லாம். இச்சித்திரத்தேர்கள் மூன்றும், மஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமும் ஆறே ஆறு மாதங்களில் உருவான தென்ருல் இது அம்பாளின் அருளன்றி வேறில்லை.

இவ்வாலயத்தில் இவ்வாண்டு முப்பத்தாருவது லெட்சார்ச்சனை நடைபெற்றதும் மூர்த்தியின் சிறப்பிற்குக் காரணமாயமையலாம். அத்தோடு ஐப்பசி மாதந்தோறும் இங்கு நடைபெறும் ஸ்ரீ கேதாரகெளரி நோன்பு முக்கியமாகும். இன்று இங்கு இனமத பேதமின்றிப் பல்லாயிரக் கணக்காணேர் இவ்விரதத்தை அனுட்டித்துப்பயனடைந்துள்ளனர் என்று சொன்ஞல் மிகையாகாது. இருபது நாள் கௌரிப் பூசை நடந்து இருபத்தோராவது நாள் திருக்காப்பு வழங்குவதோடு அடுத்தநாள்காலையில் அன்னதானமும் வழங்கப்படுகிறது. இத்தினம் இவ்வாலயத்தில் கூடும் அடியார்கள் கூட்டத்தைக்காண்போர் எதிர் காலத்தில் இவ்வாலயத்தின் வீதிகள் விஸ்தரிக்கப்படவேண்டியதின் அவசியத்தை உணர்வர். இதுநாள் வரை சுமார் 15 அடியுயரத்தில் இருந்த மணிக்குப் பதில் சுமார் 40 அடியுயரத்தில் 600 ருத்தல் நிறையுள்ள கண்டா மணி எண்திசையும் அம்பாளின் திருவருளை ஒலியெழுப்புவதையறியலாம்.

இவ்வாண்டு இவ்வாலயத்தில் சரித்திரத்தில் பொன்னெழுத்தில் பொறிக்கப்படவேண்டியதொன்ருகும். தக்ஷணகைலாயத்தில் கோயில் கொண்டருளும் ஆதியாகிய கோணேநாதேஸ்வரப் பெருமான் சிவராத்திரி ஊர்வலத்தின்போது ஒரு நாள் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் சோடோபசாரங்களுடன் வரவேற்கப்பட்டு, அன்று கூட்டு வழிபாடு, பிரார்த்தனைகளும், விசேட பூசையும் நடைபெறுவது வழக்கம். இது கடந்த 19 வருடங்களாக நடைபெற்றுவருகிறது, ஆனல் இவ்வாண்டு மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெற்ற உற்சவ காலத்தில் மகாசிவராத்திரி அமைந்ததால் மாதுமைசமேதகோணேநாதேஸ்வரப் பெருமானேடு ஆதியாகிய ஸ்ரீ பத்திரகாளி அம்பாளும் வீதியுலா வந்தது அற்புதக் காட்சியாகும்.

ஒரு ஆலயத்தின் நித்திய நைமித்தியங்கள் விதிமுறைப்படி வழுவாது நடைபெறுமாஞல், அவ்வாலயத்தில் உள்ள மூர்த்தி அருள்பெறும் என்பதற்கு இவ்வாலயம் ஓர் எடுத்துக்காட்டாகும். இவ்வாலயத்தின் திருக்கைங்கரியங்களை முறைப்படி நடத்தி வருபவர் இதன் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் ஆவர். சுவாமிநாதக் குருக்கள் அவர்களின் மைந்தரான இவர் தமது பதிஞருவது வயதில் இவ்வாலயத்தின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்க வேண்டிவந்தது. இன்று அவருக்கு வயது எழுபது. இத்தனை வருடகாலமும் இவர் அம்பாளின் திருக்கைங்கரியத்திற்கே தன்னை அர்ப்பணித்து வந்துள்ளார். அம்பாளின் சேவையைத்தவிர வேறெதையும் தமது கருத்திற் கொண்டாரில்லை. இவரது காலத்திலேயே படிப்படியாக இவ்வாலயம் வளர்ச்சியடைந்து இன்று நான்காவது கும்பாபிஷேகத்தையும் கண்டுள்ளது. தனக்கென ஒரு நிலமோ, பணமோ தேடாது அம்பாள் தருவது அம்பாளுக்கே என்ற மன நிறைவோடு பணியாற்றிவருகின்ருர். ஆலயத்திற்குரிய நிலம் ஒரு ஸ்திரத்தன்மையடைந்ததும் இவரது காலத்திலேயேதான். இவ்வாலயத்தின் வரலாற்றில் அம்பிகை இவரை ஒரு கருவியாகக்கொண்டு தனது அருள்நிலையைப் பெருக்கியுள்ளது என்று தான் கூறவேண்டும்.

இன்று இவர் உடல்நிலை நலிவுற்றதால், இவர்தம் மகன் ரவிச்சந்திரசர்மாவே ஆலயத்தின் பெரும் பொறுப்பையும் ஏற்று நிர்வகிக்கின்ருர். தந்தைக்கு மைந்தன் எது விதத்திலும் தளர்ந்தவனில்லை என்பதை நிரூபிப்பதுபோன்று இவரும் அம்பிகையின் கைங்கரியத்தை மிகவும் சிறந்தமுறையில் நடத்திவருகின்ருர்.

இந்த அம்பிகையின் திருவருள் எல்லா உலகமும் பரந்து ஆன்மகோடிகள் உய்ய அருள்பாலிக்கவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவியைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புதம் நிறை பத்திரகாளி அம்மன்

பாலேஸ்வரி நல்லரெட்ணசிங்கம்
உப அதிபர், ஸ்ரீ விக்னேஸ்வர மகாவித்தியாலயம், திருக்கோணமலை.

திருக்கோணமலைப் பத்திரகாளி அம்மன் ஆலயத்தை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். ஆலடி விநாயகப் பெருமான் ஆலயமும் பத்திரகாளி அம்மன் ஆலயமும் அருகருகே அமைந்து கிழக்கு நோக்கித் திருக்கோணமலை வாழ் மக்களுக்கு என்றும் அருள் சுரந்துகொண்டிருப்பதை யாவரும் அறிவர். கோணநாயகர் எழுந்தருளிப் பல அற்புதங்களைப் புரியும் திருக்கோணமலைப் பதியில் பத்திரகாளி அம்மன் புரியும் திருவிளையாடல்களோ அனந்தம். பண்டைநாட்களில் அம்பாள் புரிந்த அற்புதங்களைக் காவியமாகப் பாடிச்சென்ற அன்பர் கோ. வேலுப்பிள்ளையைப் பற்றி இன்னும் பேசப்படுகிறதாயினும் காவியம் கிடைப்பது அருமையாக உள்ளது. அக்காவியத்தை மனனஞ் செய்துவைத்துள்ள எனக்கு வேண்டிய ஒருவரிடம் வாய்மொழிமூலம் கேட்ட ஒரு செய்யுளைமட்டும் ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

''ஈரமென முழுகுதலை கூந்தல் முடியாமல்
ஏகியே யாவுகப் பெண் உனது வாசல்
திரமுடன் தாவிவர அயலவர்கள் கண்டு
தீங்கேது மணுகுமடி கூந்தல் முடியென்ன
வீரமுடன் கேளாமல் உன்வாசல் பார்த்து
விரைவாக ஏகின்ற வேளை நீ அவளின்
சீரான சென்னியோர் பக்கமது வைத்தாய்
செவ்வியே தேடரிய காளியெந் தாயே.''

தன் கூந்தலை விரித்துக்கொண்டு சென்றபோது அப்பெண்ணின் தலை ஒரு பக்கத்துக்குத் திரும்பிவிட்டதாகவும் அப்பெண் தன் கூந்தலை காளியம்மனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து தலை திருப்பக்கூடிய நிலை பெற்றதாகவும் கதை வழங்குகிறது. அந்தக் கூந்தலையே அம்மன் மானம்பூ போட வரும்போது தலையில்வைத்து வந்ததாகவும் தற்போது அது அழிந்துவிட்டதாகவும் கூறுகின்றனர். இக்காவியம் அவ்வற்புதத்திற்குச் சான்று பகர்கின்றது.

ஆயினும் தற்பொழுது பிரார்த்தனை மூலம் அம்பாளின் கலைகளைக் குறைத்து விட்டதாகச் சொல்வர். சுமார் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்கூட ஒரு சிறு அற்புதம் நடைபெற்றதாக அறியக் கிடக்கிறது. ஆண்டுதோறும் நடைபெறும் நவராத்திரி விழாவின் இறுதியில் திருக்கோணமலையில் கும்பத்தை கோலாகலமாக வீதிதோறும் சுற்றிக் கொண்டாடுவார்கள். அது ஒரு கண்கொள்ளாக் காட்சி. அவ்வேளை வேற்று இனத்தைச்சேர்ந்த சிறுவன் ஒருவன் அம்மன் சந்நிதி முன்றலில்வைத்து இந்நிகழ்ச்சியைப் பரிகசித்ததாகவும் அதனால் வாய்பேச முடியாமல் பரிதவித்துத் திரும்பவும் பத்திரகாளியைப் பிரார்த்தித்துப் பிராயச்சித்தம் செய்து பேசக்கூடியநிலை பெற்றதாகக் கூறுகிறார்கள்.

இதேபோல பல ஆண்டுகளுக்கு முன்னர் வேற்று இனத்தைச் சேர்ந்த கணவன் மனைவியர்க்கு அடுத்தடுத்து இரண்டு ஊமைக்குழந்தைகள் பிறக்கவே அவர்கள் பத்திரகாளி அம்மாளுக்கு நேர்த்தி வைத்ததாகவும் அதன்பின்னர் பிறந்த குழந்தைகள் பேசும்சக்தி பெற்றிருந்ததாகவும் அத்தம்பதியர் முதலாவது கும்பாபிஷேகத்துக்கு (ஜப்பானியர் குண்டுவீச்சுக்குப் பின்னர்) மூலஸ்தான விமான வேலைகளை நிறைவேற்றிக்கொடுத்ததாகவும் சொல்கிறார்கள்.

இதேபோல் மூன்றுமாதங்களுக்கு முன்னர் நான் மட்டக்களப்புக்குச் சென்றிருந்த வேளை மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற விரிவுரையாளர் ஒருவரைச் சந்தித்தேன். அன்னாரின் கணவர் நோய்வாய்ப்பட்டுப் பேசும்சக்தியை இழந்து டாக்டர்கள் கைவிட்டநிலையில் நண்பர்களின் ஆலோசனையின்பேரில் கேதார கௌரி நோன்புக் காலத்தில் அம்மன் சந்நிதிக்கு வந்து இரந்து கண்ணீர்விட்டு வேண்டி வீட்டிற்குச் சென்றசமயம் 'பூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்துவிட்டதா'? என்று பேசும் சக்தியைப் பெற்றுத் தன் கணவர் கேட்டதாகக் கூறிப் பரவசப்பட்டார்.

பங்குனித் திருவிழா, நவராத்திரி விழா கேதாரகௌரி நோன்பு ஆகிய விசேட தினங்களில் இங்கே வந்துகூடும் மக்களின் தொகையைக் கணக்கிட்டுக் கூறமுடியாது. கேதாரகௌரி நோன்பின்போது காப்புக் கொடுப்பதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்களின் பெயர்கள் ஒலிபெருக்கி மூலம் அழைக்கப்படும்போது அந்தப் பெயர்களில் பல மதத்தைச் சார்ந்தவர்கள் காப்பு எடுப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். இந்நிகழ்ச்சி காளித்தாய்மேல் இன மத பேதமின்றி மக்கள் காட்டும் பக்தியைக் காட்டுகிறது. 6 . 2 . 80 ல் காளிகோயில் குடமுழுக்கு மிகவும் விமரிசையாக நடைபெற்றது.

இந்த ஆலயத்தில் நிகழும் இத்தனை சிறப்புக்கும் காரணம் இவ்வாலய ஆதீன கர்த்தா சு. கு. சோமாஸ்கந்தக் குருக்களாவர். அவரது நிர்வாகத்திறமை ஆலய பரிபாலனத்தின் மூலம் வெளியுலகுக்குத் தெரிகிறது. குறித்த நேரத்தில் பூசை தொடங்கி குறித்த நேரத்தில் முடிக்கும் திறமை இந்த ஆலயத்தின் ஒரு சிறந்த அம்சம். எந்த தொழில் செய்பவர்களும் நேரங்குறித்து சென்று வரலாம். அந்த அளவுக்கு ஐரோப்பியர்களை விஞ்சிய கால ஒழுங்கு இங்கே கடைப்பிடிக்கப்படுகிறது.

சிறியவர் பெரியவர் என்ற பேதமின்றி உபயகாரர் வருகைக்காக பக்தர்களைக் காக்கவைக்காமல் காரியங்கள் நிகழ்வதால் எவரும் பூசைக்குத் தாமதிப்பதில்லை. இந்த ஒழுங்கினால் அம்பாளின் அநுக்கிரகமும் அடியார்களுக்கு அருளப்படுகிறது.

கோயில் திருப்பணிகள் கூட ஆலய வருமானத்திலேயே நடைபெறுகிறது. பொதுமக்களின் நிதி கோரப்படாதபோதும் பொதுமக்கள் முண்டியடித்து நிதியுதவி செய்ய முன்வருவது இக்கோயிலுக்குள்ள இன்னுமொரு சிறப்பம்சம். இவற்றிற்குக் காரணம் எவரும் குறைகூற முடியாத நிர்வாகத்திறமை என்று துணிந்து கூறலாம்.

இத்தனை வல்லமை பெற்று பெரும் சக்தியாக விளங்கும் பத்திரகாளி அம்மனை பக்தர்கள் அன்புடன் காளி ஆச்சி. காளித் தாய். அம்பாள் என்றெல்லாம் பெயர் சொல்லி அழைப்பார்கள். அம்பாளின் அருட் பார்வை பெற நாமும் ஆவன செய்து கடைத்தேறுவோமாக.

''ஈழத்தின் கீழ்த்திசையில் திருக்கோண மலைநகரில் என்னம்மை பத்திரகாளி அம்மன் கோயில் பூசைகளும், கிரியைகளும் காலக்கிரமத்தில் நடைபெறும் விந்தைகண்டு எண்ணற்ற பக்தர்குழாம் நம்பிக்கையோடு நாள் தோறும் வருகைதந்து நல்வரம் பல பெற்று நனிசிறக்க நவில்கின்றார் பத்திரகாளி அம்மன் புகழ்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்த்திருப்பணி, ஒரு புனிதமான பணி

~ சி. குருநாதன் ~

இந்துசமயத் தத்துவங்களில் ஒன்ருகத் தேர்த்திருப்பணி அமைகின்றது. தேர்த் திருப்பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் ஒரு சிலரே. அவர்களுக்கும் உள்ளூரில் போதிய ஆதரவு காட்டப்படுவதில்லை.

உள்ளூர்ச் சிற்பாசாரிகளில் முதலிடம் வகிக்கின்ருர் திரு. ஜீவரத்தினம் அவர்கள். இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாசாரியாரின் புதல்வர்களில் ஒருவராவர்.

ஆறுமுகம் ஆசாரியாரின் குடும்பமே ஒரு கலைக்குடும்பம். அவரது ஏழு புதல்வர்களும் ஏதோ ஒருவகையில் கலைச்சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள். மூத்தவர் வடமாநில சித்திர வித்தியாதரிசியாகப் பணிபுரிகின்ருர் அவர் பெயர் திரு. ஆ, தம்பித்துரை.

திரு. ஜீவரத்தினம், தந்தை காட்டிய வழியில் தேர்த்திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்ருர்.

கிழக்கு மாகாணத்திலே சித்திரத் தேரைப் பெற்ற பெருமை திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு உரியது.

அச்சித்திரத்தேரை கலைவண்ணத்துடன் அமைத்த பெருமை திரு. ஜீவரத்தினம் ஆசாரியாருக்குச் சேருகின்றது.

அப்பாக்கியத்தைப் பெற்ற திரு. ஜீவரத்தினம் பற்றி, சைவமக்கள் அறிந்து வைத்துக்கொள்ள வேண்டுமல்லவா!

கல்லிலே கலைவண்ணம் கண்டான், தமிழன் என்பர் நம்மவர்கள்.

மரக்கட்டைகளிலே உணர்ச்சிகளைத் தேக்கிக் கலைவண்ணம் கண்ட கைகள் திரு. ஜீவரத்தினத்துடையவை.

இறைவன் இறைவியின் திருவிளையாடல்களை உணர்ச்சி நிறைந்த சிற்பங்களாக மரக்கட்டைகளிலே செதுக்குவது என்ருல் சாதாரணமான காரியமா?

செதுக்கும் சிற்பாசாரியரின் உள்ளம் மரக்கட்டையாக இருந்துவிட்டால் என்ன செய்வது?

ஆனல் திரு. ஜீவரத்தினத்துடைய உள்ளமோ, இறைவன் - இறைவியின் திருவிளையாடல்களின் உட்கருத்தை உணர்ந்த உள்ளமாக இருக்கின்றது.

அவரது கைகள் வெறும் மரங்களின் மேல் விளையாடவில்லை. பக்தர்களின் உள்ளங்களின் மென்மையை தட்டுமாற்போல் பணியாற்றுகின்றன.

இனிய நாதம் ததும்ப வீணையின் தந்திகளை மென்மையான விரல்கள் எப்படி மீட்டுகின்றனவோ, அதேபோன்றுதான் திரு: ஜீவரத்தினத்தின் கைகள் பக்தர்களின் உள்ளங்கள் நெகிழக்கூடியவகையில் இறைவன் திருவிளையாடல்களை மரத்தில் செதுக்குகின்றன.

திரு. ஜீவரத்தினம் கூறுகின்ருர்:

''தேர்த் திருப்பணித் தொழிலை விரும்பியே செய்துவருகின்றேன். பூரண மனத்திருப்தி இத்தொழில்மூலம் அமைந்திருக்கின்றன.''

இப்படிக்கூறும் திரு. ஜீவரத்தினம் ஆசாரியார், இப்பொழுது திருக்கேதீஸ்வரத்தில் எட்டு லட்சம் ரூபா செலவில் ஐந்து தேர்களைச் செய்யும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்ருர்.

o


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கென 1972ம் ஆண்டு புதிதாய் அமைக்கப் பெற்ற தேர்கள் மூன்றும் ஆலய வாசலில் நிற்கும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை பத்திரகாளி கோவில் மகாகும்பாபிஷேகத்தை நடத்திய பிரதமகுரு பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களுக்கு கலாநிதி பிரம்ம ஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவ ஸ்தான ஸ்ரீ சக்கரம் பதிக்கப்பெற்ற தங்கப்பதக்கம் அளித்து 'சிவாச்சார்ய துரந்தரர்' பட்டமளித்துக் கௌரவிக்குங் காட்சி.



அதினகர்த்தாவும் சிற்பாசாரியார்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் விசேட வைபவமாக நீண்ட காலமாக நடைபெற்று வரும் கௌரி நோன்பின்போது ஸ்ரீ கேதார கௌரி அம்பாளுக்கு பூசை நடைபெறும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரிக் காட்சிகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரிக் காட்சிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவராத்திரிக் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரம் பெற்ற திருக்கோணமலையில் கோயில் கொண்டருளி அடியார்க்கருளும் அன்னை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்

திரு. ச. சின்னத்தம்பி ஆசிரியர் (செயலாளர் - சக்தி நிலையம்)

எங்கும் நிறை கடவுளை எல்லாப் பாங்குடனும் பாராட்டி வழிபடுபவர் இந்துக்களேயாம். உறவாடுவதற்கு என்னென்ன முறைகள் இருக்கின்றதோ அவையாவையும் இந்து மதத்தில் காணலாம். கடவுளைக் கர்த்தாவென்றும், கருணாநிதியென்றும், பிதாவென்றும், பிள்ளையென்றும், அண்ணலென்றும், அரும்பொருளென்றும் இன்னும் எண்ணரிய விதங்களில் அழைத்து அன்பு பாராட்டுகின்றனர். இத்தகைய நிலைகளில் கடவுளைத் தாயென்று சொல்லுவது நலையாயது. தாயின் தன்மையுடைய தெய்வத்தை வணங்குவது மிகவும் எளிதாகிவிடுகின்றது.

இகபரம் இரண்டிலும் மக்களுக்கு இன்றியமையாத புருஷார்த்தங்களைப் பராசக்தி பகுத்தருளிய வண்ணமாயிருக்கின்றாள். அந்தப் பராசக்தியின் பெயர்கள் எண்ணிறந்தவை. அவற்றுள் காளி என்பதும் ஒன்று. கோடானுகோடி கற்பங்கள் அடங்கப்பெற்ற காலத்தையே அவள் எடுத்து விழுங்கித் தன்னகத்தில் அடக்குகின்றமையால் அவள் வடமொழியில் காலி என்றும் காலிதா என்றும் அழைக்கப்படுகின்றாள். காலி என்னும் பெயர் தென்மொழியில் காளி எனத் திரிபுபட்டது. அவளே கால சொரூபிணியாக இருந்துகொண்டு பாரெங்கும் பெரும் மாறுதல்களை விளைவித்துவருகின்றாள். அன்னையின் இயல்பு என்றைக்கும் மாறாதது. பிள்ளையானவன் நன்றே செய்திடினும், தீதே செய்திடினும், உயர்தன்மையெய்திடினும், தாழ்மையுற்றிடினும் தாயினது அன்புக்கு அன்னியனாகின்றானல்லன். அவ்வாறான அன்னை பராசக்தியை காளி என அழைத்து வழிபடக்கிடைத்தது நாம் செய்த புண்ணிய பலனேயாம்.

இயற்கை வளங்கொழிக்கும் ஈழவள நாட்டின், பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரத்தின்கண் கோயில் கொண்டருளி வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அன்னை ஸ்ரீ பத்திர காளியின் அருட்சக்தி அளப்பரியது.

இவ்வாலயத்தின் வரலாறு திட்டவட்டமாய் அறிய முடியாவிடினும், இங்குள்ள கல்வெட்டுக்கள், மற்றும் சாசனங்கள், கர்ணபரம்பரையாக வழங்கிவரும் கதைகள் அதனோடு தொடர்புடையதாகக் கூறப்படும். விக்கிரகம், தகளி, வாகனம் மற்றும் பொருட்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ச்சியில் ஈடுபட்ட இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழக சரித்திரப் பேராசிரியர் கலாநிதி செ. குணசிங்கம் அவர்கள் முதலாம் இராஜேந்திரன் காலமாகிய பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்றிருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இவ்வாலயம் அதற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே வழிபாட்டிற்குரிய ஸ்தலமாக இருந்து வந்துள்ளது தெளிவு.

இவ்வாலயத்தின் நித்திய நைமித்தியங்கள் நியமம் தவறாது ஒழுங்காக நடைபெறுவதற்கும், ஆலயமும், ஆலயச் சூழலும் எந்நேரமும் அழகுறச் சுத்தமாக இருப்பதற்கும் இவ்வாலய ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களும், அவர்தம் மகன் ரவிச்சந்திர சர்மா அவர்களுமே காரணமாவர்.

பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்கள் தனது தகப்பனாரின் காலத்திற்குப் பின், 1927-ஆம் ஆண்டளவிலிருந்து இக் கோயில் பொறுப்பை ஏற்று நடத்தி வருகின்றார்கள். தனக்கென வாழாது அம்பிகையின் சேவைக்கே தன்னை அர்ப்பணித்து, அதன்மேல் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி வந்ததால், இவ்வாலயம் சிறியதாக இருந்தாலும் இலங்கையின் ஓர் உயர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தை அடைந்துள்ளது. இன்று தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி என்றபடி ரவிச்சந்திர சர்மா கோயில் பொறுப்பு பெரும்பகுதியையும் ஏற்று திறம்பட நடத்தி வருகின்றார்.

இவ்வாலயத்தில் இலட்சார்ச்சனை, கொடியேற்ற மஹோற்சவம், வைகாசிப் பொங்கல், நவராத்திரி, திருவெம்பாவை, ஸ்ரீ கேதாரகௌரி விரதம் ஆகியன விதி முறைப்படி சிறப்பாக நடைபெற்று வருகின்றதைக் காணலாம். திருக்கோணமலையில் முதன்முதல் சித்திரத்தேர் உருவாக்கிய பெருமையும் இவ்வாலயத்திற்கே சேரும். இவ்வாலயத்திற்கென உபயோகத்தில் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் புதிதாக ஒரு தேர் உருவாக்க வேண்டுமென்று 1969-ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்ட முயற்சி அம்பிகையின் அருளால் மூன்று சித்திரத்தேரும், ஒரு மஞ்சமுமாக உருவானது. திருநெல்வேலியைச்சேர்ந்த ''ஆறுமுகம் சிற்பாலயத்தினரின்'' அயராத உழைப்பால் அழகிய சிற்பவேலைகளுடன் 1972-ஆம் ஆண்டு பங்குனி மாதம் இச் சித்திரத்தேர்களும், மஞ்சமும் வீதிவலம்வந்தது.

இதற்கடுத்ததாக இங்கு ஸ்ரீ கேதார கௌரி விரதத்தை குறிப்பிட வேண்டும். இலங்கையில் ஸ்ரீ கேதாரகௌரி விரதத்தை பெருந்திரளான அடியார்கள் பக்தி சிரத்தையுடன் இவ்வாலயத்தில் அனுஷ்டிக்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது. இங்கு ஸ்ரீ கேதாரகௌரி அம்பாளுக்கு இருபத்தொரு நாளும் பூசை நடந்து இருபத்தோராவது நாள் திருக்காப்புகள் வழங்கப்படும். அத்தினம் இவ்வாலயத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் திரண்டு நின்று பக்தியுடன் அம்பிகையை வழிபட்டு நிற்கும் காட்சி அற்புதமானது. இவ்விரதத்தை அனுஷ்டிக்கும் அடியார்கள் பலர் தாம் விரும்பியவைகளை அம்பிகையின் அருளால் பெற்றதாக சொல்வதைக் கேட்கலாம். இவ் விரதத்தை இனமத பேதமின்றிப் பிற மதத்தவர்களும் நம்பிக்கையுடன் அனுஷ்டித்துப் பயன்பெற்றுள்ளதாகச் சொல்வர்.

இவ்வாலயத்தின் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் 1980 பெப்ருவரி 6-ம் நாள் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் விதிமுறைப்படி சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முன்பதாக 1933இலும், 1946இலும், 1962இலும் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. பொதுவாக இவ்வாலயத்தில் எந்தத் திருப்பணி வேலைகள் ஆரம்பித்தாலும் அம்பிகையின் திருவருட்சக்தியால் அப்பணிகள் எண்ணியதிலும் இருமடங்கு சிறப்பாக அமைவது இயற்கை. அந்தவகையிலே 1980ஆம் ஆண்டில் நடந்த திருப்பணிவேலைகளும் இரட்டிப்புமடங்கு சிறப்புற அமைந்துள்ளது. கர்ப்பக்கிருகவிமானம் திருத்தி அமைக்கப்பட்டு, புதிதாக முச்சக்திகளும், அம்பாள், விநாயகர், முருகனும், சப்தகன்னிகைகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. எழுந்தருளி அம்பாள் மண்டபத்தின் ஸ்தூபியில் கௌரி அம்பாளும் முன் முகப்பில் இராஜராஜேஸ்வரியும் அமைக்கப்பட்டுள்ளது. நிர்த்த மண்டபம் முற்றும் புதிதாக அழகிய சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பட்டுள்ளதோடு, புதிதாக சரஸ்வதி, இலக்குமிக்கும் சிறு கோயில் கட்டப்பட்டுள்ளது. இவைகளன்றி பலிபீடம், நாகதம்பிரான் கோயில் ஆகியனவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதோடு கோபுர அம்பாளும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் மேற்கொள்ளும் திருப்பணிகள் எதுவாக இருந்தாலும், அவை எண்ணியவைக்கும் மேலாக இனிதே நிறைவேற ஏதுவாக இருப்பது இங்கு கோயில் கொண்டருளும் அன்னை பராசக்தியின் அருட்கடாட்சமேயாகும். ஒரு ஆலயத்தில் நித்திய நைமித்தியங்கள் விதிமுறைப்படி குறைவிலாது நடைபெறுமானால் அங்கு கோயில் கொண்டருளும் மூர்த்தியின் திருவருளும் பூரணமாகக்கிட்டும் என்பது உறுதி. இந்த வகையிலே இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தாவும், அவர்தம் மகனும் வணக்கத்திற்குரியவர்கள் ஆவர்.

இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களின் வாழ்க்கை அன்றுபோலவே இன்றும் அமைந்துள்ளது. ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையும், அல்லும் பகலும் அம்பிகையின் நினைவுமாக வாழ்ந்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆலயத்தின் பெயரால் எப்படி யெப்படியெல்லாமோ வாழ்ந்துகொண்டிருப் போர் மத்தியில் தனது சுகவாழ்வைக்கூட தெய்வ சேவைக்காகவே தியாகம்பண்ணும் அவரது கொள்கையே இன்று இவ்வாலயத் தின் வளர்ச்சிக்கு முக்கியமாயமைந்துள்ளது. அத்தோடு நியம முறை வழுவாது நடை பெறும் நித்திய நைமித்தியங்களுமாகும்.

இவ்வாலயத்தில்சாதாரணமாகவெள்ளி செவ்வாயில் வழிபாட்டிற்கு வரும் அடியார் கள் கூட்டம் ஒரு தேர்த்திருவிழாவை நினை வூட்டுவதாக அமையும். இவ்வாலயத்தில் நடைபெறும் நித்தியபூசை, உற்சவங்க ளனைத்தும் குறித்த காலந்தவறாமல் நடை பெறுவதும் இதற்கொருகாரணமாயமைய லாம். தேர்திருவிழாவின்போது அடியளிக்கும் அன்னையர்களும், அங்கப்பிரதட்சணம் செய் யும் அடியார்களதும் கூட்டம் நாற்புற வீதி யும் பரந்திருப்பதைக்காணலாம்.

இத்துணைச் சிறப்புமிக்க ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கோயில்கொண்டரு ளும் அன்னை பராசக்தியை வழிபடவும், திருத்தொண்டுகளில் பங்குகொள்ளவும் கிடைத்தது இப்பிறவியில் எமக்குக்கிடைத்த பெரும்பேறுகும். அவன் அருளாலே அவன் தாழ் வணங்கி என்றுர் மணிவாசகப் பெரு மான். அம்பிகையை வணங்கி, காலாந் தரத்தில் அழியும் அற்ப வாழ்வை காளி தேவிக்கு அர்ப்பணம்செய்து நித்தியானந் தப் பெருவாழ்வைப் பெறத்தக்க மனப்பக்கு வத்தை எமக்குத் தந்தருளவேண்டும் என்று அன்னையை வணங்குவோமாக.

□

# தேவி துதி

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயர்க்க ணெம்பி ராட்டி
அரும்புமிள நகைபோற்றி ஆரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி நோன்பு

பிரம்மஸ்ரீ சோ. ரவிச்சந்திர சர்மா
ஆதீனகர்த்தாவின் ஏகபுத்திரன்

கைலையங்கிரியின் சிகரத்தில் உமாசமேதராய் விளங்கும் பரமசிவன் பக்தகோடிகள் தரிசிக்கும்பொருட்டு தேவசபை ஒன்றை ஏற்படுத்தி அதிலே வீற்றிருக்கின்றார்.

அங்கே தேவவாத்தியங்கள் முழங்க கிருதாசி, மேனகை முதலிய தேவமாதர்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருக்கின்றார்கள். அதிலே நடன ஸ்திரீகளில் சவுந்தர்யம் மிக்கவளாகிய அரம்பையானவள் அற்புதமான நடனவிசேஷங்களை நடித்துக் காட்டுகின்றாள்.

அப்பொழுது அந்தரங்க பக்தராகிய பிருங்கிமகரிஷி பக்தியோடு விசித்திரமான விகடநாட்டியம் ஒன்றை ஆடிக்காட்டுகின்றார். பார்வதிதேவியும் அங்கே இருக்கிறாள். தேவர்கள் ஆனந்தத்தால் சிரித்து மகிழ்கிறார்கள்.

பர்வதக்குகை அச்சிரிப்பொலியால் கலகலவென எதிரொலிக்கின்றது. பரமசிவனும் பிருங்கியின் நாட்டியத்தில் மூழ்கித்திளைத்து மகிழ்கிறார். பரமசிவனின் அனுக்கிரகமும் பிருங்கி மகரிஷிக்குக் கிடைக்கிறது. அதைக் கண்டு சபையிலுள்ளோர் பிருங்கி மகரிஷியைக் கௌரவித்துப் பாராட்டுகிறார்கள். அந்தநேரத்தில் பிருங்கி மகரிஷி பயபக்தியோடு பார்வதியை நீக்கிப் பரமசிவனை மாத்திரம் வலம்வந்து வணங்குகின்றார், இதைக்கண்டு

''சுவாமி, இந்தப் பக்தன் என்னை விட்டுத் தங்களைமட்டும் வணங்கிச்சென்றாரே, அதற்குக்காரணம் என்ன? இந்த ஆச்சரியமான விஷயத்தை எனக்கு விளக்கவேண்டுமென்று தேவி கேட்கின்றாள்.

''தேவி, சிவயோகியாகிய பிருங்கி மகரிஷி முக்திநிலையை விரும்பிநிற்பவர். அதை அடைவதற்கு உன்னை வணங்குவதால் பிரயோசனமில்லையென்ற திடசித்தங் கொண்டவர். அதனாற்றான் உன்னைவிட்டு என்னைமாத்திரம் வணங்கிச் சென்றார் ''

என்று பரமசிவன் பார்வதிக்கு விளக்கங் கூறுகின்றார். பார்வதிதேவி வருத்தப்பட்டு பரமசிவனிடத்துக் கோபம் கொள்கிறாள். கோபாவேசத்தில் தனது சக்தியின்கூறு பிருங்கிரிஷியினின்றும் அகலக்கடவது என்று வாய்விட்டுக் கூறியும்விடுகின்றாள். பிருங்கி ரிஷியின் உடல் உதிரம் பிழிந்து சக்கையாகிறது. அவர் நிற்பதற்கும்முடியாமல் தள்ளாடுகின்றார். அப்போது பரமசிவன் பிருங்கியின் கையில் தண்டொன்றுவரச் செய்கின்றார். பிருங்கி தண்டின் உதவியோடு தன் ஆச்சிரமம் போய்ச்சேர்கிறார்.

தேவிக்கு மேலும் கோபம் உண்டாகிறது. கைலையைவிட்டு நீங்கிப் பூலோகத்துக்கு வருகிறாள். வால்மீக மகரிஷி சஞ்சரிக்கிற பூங்காவனத்தில் ஓர் விருட்சத்தின் அடியில் அமர்ந்திருக்கிறாள். அந்த இடத்தில் 12 வருடம் மழையின்றி வாடிக்கிடந்த விருட்சங்களெல்லாம் மலர்ந்து மணம் வீசுகின்றன. வால்மீக மகரிஷி அவ்வனத்துக்கு வருகிறார். பன்னிரண்டு வருடம் மழையில்லாமல் வாடிக்கிடந்த விருட்சங்களெல்லாம் தளிர்த்துப் பூத்து மணம் வீசுவதைக்கண்டு அதிசயிக்கிறார். வனத்தில் இந்த அற்புதம்! அங்கு வந்திருப்பவர் யாராயிருக்கலாம் என்று தேடிப்பார்க்கின்றார். பார்வதிதேவி ஒரு வில்வ விருட்சத்தின் அடியில் எழுந்தருளியிருப்பதைக் காண்கின்றார்.

''தேவி தங்கள் கைலாசகிரியை விட்டு இப் பூலோகத்திற்கு எழுந்தருள்வதற்குக் காரணமென்ன? என்று கேட்டுவிடுகிறார். தேவி தான் பூலோகத்துக்கு வந்த கதையைச் சொல்கிறாள். வால்மீக மகரிஷி தேவியைத் தனது ஆச்சிரமத்துக்கு அழைத்துச் செல்கிறார். தேவியும் ஆச்சிரமத்துக்குச் சென்று வால்மீக ரிஷி தேவிக்கெனத் தனியாக அமைத்துக் கொடுத்த ஆச்சிரமத்தில் நவரெத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்து, ''மகரிஷியே, பூலோகத்தில் நான் விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அனுட்டிக்க வேண்டும்? மேலான விரதம் ஒன்று இருக்குமேயானால் அதனை எனக்கு கூறுங்கள் என்கிறாள். மகரிஷி, ''தாயே தாங்களே விரதமுகத்தோடு எழுந்தருளியிருக்கிறீர்கள். அதைவிடவா பூலோகத்தில் சிறந்த விரதமொன்றுண்டு.'' என்று கூற தேவி, புன்னகைபூத்து தன் விரதத்தை ஆலவிருட்சத்தின் கீழமர்ந்து ஆரம்பிக்கிறாள் மணலினாலே லிங்கம் பிடித்து ஈஸ்வரனைப் பாவித்துப் பூஜை செய்கின்றாள் 21 நாள் பூசை நிகழ்கின்றது. 21 பழம். 21 அதிரசம், 21 வெல்லவுருண்டை, 21 சந்தண உருண்டை, 21 மஞ்சளுருண்டை நிவேத்தியமாக வைத்து தூய தீபம்காட்டி வணங்குகிறாள். 21 இழை எடுத்துத் திரித்து 21 முடி முடித்து ஈஸ்வரனைத் தியானம் செய்து காப்புங் கட்டுகிறாள். காப்பணிந்ததும் பரமசிவன் பார்வதிக்குக் காட்சி கொடுத்து ''தேவி உமக்கு என்ன வரம் வேண்டு''மென்று கேட்கிறார். தேவி ஈசனைப் பார்த்து ''உமது தேகத்திலே பாதி எனக்கருள வேண்டும்'' என்று கேட்டுவிடுகிறாள். 'ஆகட்டும்' என்கிறார் ஈஸ்வரன். பார்வதி தேவியும் பரமசிவன் மேனியில் பாதியாய் இருக்கும் பாக்கியத்தையும் பெறுகிறாள்.

''என்னை நோன்பு நோற்று வரம்பெற்ற உன்னைநோக்கி யார் இந்த 21 நாட்களும் விரதம் அனுட்டிக்கிறார்களோ அவர்கள் உன்மூலம் சகல சௌபாக்கியங்களையும் அடைவார்கள்'' என்று வரமும் நல்கி பரமசிவன் பார்வதிசமேதராய் அர்த்த நாரீஸ்வர வடிவத்தோடு கைலையங்கிரிக்கு எழுந்தருளினார். அதிலிருந்து கௌரி நோன்பு பூலோக வாசிகளால் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. இக் கௌரி நோன்பை அனுட்டித்து கைமேல் பலன் கண்டவர் பலர்.

நோன்பு நோற்று வரம்பெற்ற பராசக்தியை நோக்கி இவ்விரதம் அனுட்டிக்கப் படுவதால் இது கௌரி நோன்பென அழைக்கப் படுகின்றது.

பரமசிவன் உறையும் கைலாசகிரியை விட்டுப் பத்திரகாளியாய் உக்கிரமூர்த்தங் கொண்டு பூலோகத்துக்கு வந்த தேவியை நோக்கி அனுட்டிக்கப்படுவதால் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயத்தில் அனுட்டிக்கப் பெறும் கௌரி விரதத்துக்கு அளவிடற்கரிய சக்தி உண்டு.

திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சந்நிதியில் 'கௌரி விரதம் இருத்தல்' இதனாலேயே மகத்துவம் பெற்று விளங்குகின்றது.

இதனை அன்பர்கள் இன்றும் காணலாம். வருடா வருடம் விரதம் அனுட்டிப்போர் தொகை அதிகரித்து வருவதற்கும் இதுவே காரணமாகும்.

கௌரி நோன்பின் பலனால் கோணநாயகரும் அர்த்த நாரீஸ்வரராய் விளங்குகின்றார். இதனை உள்ளத்தில் கொண்டே கோணமாமலை அமர்ந்த பெருமானை ''நிரைகழல் அரவஞ் சிலம்பொலி அலம்பும் நிமலர்' என்றும், ''வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த வடிவினர்'' என்றும் பக்தி கனியப் பாடுகின்றார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தப் பெருமானின் பாடல் கௌரி நோன்பின் மகத்துவத்தை எடுத்துக்காட்டி நிற்கின்றது. பத்திரகாளி அம்பாள் ஆலயமும் கோணநாயகர் ஆலயத்தை நோக்கியிருப்பதும் பத்திரகாளி ஆலயத்தில் நடைபெறும் கௌரி நோன்பிற்கு மகத்துவம் அளித்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### தேவாரப் பாடல்பெற்ற திருக்கோணமலைப் பதியில் அற்புதாம்பிகையாய் கோயில்கொண்டு அருள்பொழியும் பத்திரகாளி அம்பாள்மீது பாடிய

# காளி கவிமாலை

♥

கழகப்புலவர்

பெ. பொ. சிவசேகரனுர்

## காப்பு

கல்வியிலான் ஞானமிலான் காதல் மிகுதியினுல்
சொல்லுங் கவிமாலை சோர்வின்றி — எல்லாமே
நல்லாய் முடியுமே நற்காளி தன்னருளால்
கல்லானு மாவான் கவி.

பத்திரத்தை ஏந்திப் படியில் விளையாடும்
உத்தமியாள் காளி உபாசகரின் — புத்தியிலே
நின்று நடம்புரிவாள் நெஞ்சத்தில் சித்துருவாய்
என்றும் ஒளிர்வாள் இருந்து.

## நூல்

அகர வுயிராகி அண்டங்கள் தானுகி அன்பருளச்
சிகர மிசைநிற்குஞ் செய்யாள் சிவானந்தி செம்பவளந்
திகழுந் திருவாயாள் தென்கோணைப் பெருமாட்டி தேவருக்கும்
பகர வொணுப்பத் திரகாளி தன்னைப் பணிமின்களே 1

முத்தியும் வாழ்வு மளித்திடு வாள்முடை தீர்த்திடுவாள்
புத்தியும் ஞானமுந் தந்திடு வாள்வினை போக்கிடுவாள்
இத்தரை மீதினில் எண்ணிய யாவையு மெய்துவிப்பாள்
பத்திர காளித்தா யின்பதம் போற்றிப் பணிமின்களே 2

கல்லாய்க் கிடந்து கலையாய் வெளிவந்து காண்பவர்தம்
எல்லாப் புலனும் ஒடுங்கி நிலைபெற உள்ளகத்தே
பல்லா ருயிரும் பணிந்திடும் பத்திர காளிகையாய்
வல்லாண்மை கொண்ட வராகியை வாழ்த்தி வணங்குதுமே 3

பாடுங் கவிதையிற் காளி பசுந்தேன் பரிமளிக்கச்
சூடுந் தொடையில் சுவையும் பொருளுஞ் சுரந்திடுவாள்
ஆடும் மயில்போ லழகும் நடையு மணிபெறவே
கூடும் படிசெய்வாள் கொற்றவை யாள்மனக் கோயிலிலே 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று மறியே னுனைப்பாட நெஞ்சி லுறுதியிலேன்
நின்று திகைக்கின்றேன் நீயன்றி வேறோர் நினைவுமிலேன்
மன்றுள்நின் ருடும் பெருமா னமரும் மலைவிளக்கே
பன்றியும் பாடுமே பத்திர காளியுன் பார்வையிலே 5

யாப்பும் பொருளும் அணியும் நலம்பெற யாவையுமே
பாப்பண் ணிசையுடன் பாடிட நல்லருள் பாலிக்குஞ்சொற்
காப்புங் கவசமும் நீயன்றோ பத்திர காளியுனைக்
கூப்புங் கரங்கொண்டு கும்பிட்டேன் நாவில் கொழிதமிழே 6

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமெனும் மந்திரத்தாளை உளத்திருத்தி
ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமெண் றயராமல் எந்நாளு முச்சரித்தால்
ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீமாக வந்துநிற் பாள்காளி யோவியமாய்
ஓம் ஐம்ஹ்ரீம் ஸ்ரீம்மந் திரத்தை உவந்துவந் தோதுமினே 7

பாரும் விசும்பும் பரந்து விளங்கும் பராபரையைத்
தேரு மறிவின் திருமுடி யேறித் திகழ்ந்திடினும்
ஆரு மறிய முடியா தவளி னருளிலையேல்
வாருந் தொழுது வளம்பெறு வோங்காளி வார்கழலே 8

அந்தணர் போற்றும் அழியாத வேத அரும்பொருளைச்
சந்தணம் பூசி யபிடேகஞ் செய்கின்ற சாம்பவியை
முந்தையர் பூசித்து வந்தமுக் கண்ணன் முதல்விதனை
மந்திர மாய்நிற்கும் மாகாளி யம்பாளை வாழ்த்துமினே 9

பத்திர காளியின் பாதம் பணிந்தேத்தும் பாவிகளும்
இத்தரை மீதினில் தேவரு மெய்தா விருஞ்சிறப்பும்
முத்தியும் எய்துவர் கண்டாய் முதலு முடிவுமிலாச்
சக்தியைப் போற்றுமின் காக்கு மவள்பொற் சரணங்களே 10

பாடும் பொருட்டுப் பலகால் முயன்று பரிதவித்தேன்
கூடும் படியருள் கூட்டுவித் தால்குரல் காட்டிநின்றால்
நாடும் பொருளும் நயமும் விளங்கிட நற்றமிழால்
பாடுங் கவிமாலை பத்திர காளிக்கே பாடுவனே 11

பூரித்து மலர்தூவி அர்ச்சித்து நெஞ்சாரப் பூசைசெய்மின்
ஈரெட்டுத் திக்கும் இடமாகக் கொள்ளும் எழிற்புயத்தில்
தாரிட்டு மாலை தரித்திட்ட கைகள் தனம்பெருக
நேரிட் டருள்செய் வாள்பத் திரகாளி நித்தமுமே 12

ஓதி யுணர்ந்துணர்ந் துள்ளம் உருகி யுருகிநின்றால்
சோதி வடிவாகிச் சொர்ண உருவாகிச் சூழ்ந்துநிற்பள்
பாதி யுருவாகி பரம னிடப்பாகம் பங்குகொண்டாள்
பூதி யுருவாகிப் பத்திர காளியாய்ப் பூரிப்பளே 13

நோயாகி நோய்க்கு மருந்தாகிப் பாரினில் நொந்தவரை
மாயாது காக்கும் மகமாயி கோண மலையினிலே
தாயா யிருந்துந் தருங்கைகள் கொண்டுந் தரித்திரற்கின் (று)
ஈயா மனமெனக் கேன்படைத் தாய்காளி ஈஸ்வரியே 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்தாத நாவும் வலம்வராக் காலும் வணங்கிநிதம்
தாழ்த்தாத சென்னியும் தஞ்சமென் றுன்பாதத் தாமரையில்
வீழ்த்தாத நெஞ்சும் தொழாக்கை யுமேனோ விதித்தனையே 15
ஆழ்த்தாமல் தூக்கி எடுப்பாயே பத்திர காளிகையே

நீறணி மேனியன் நெற்றிக்கண் கொண்ட நிமலனைத்தன்
பேறெனக் கொண்ட பெருமாட்டி கோணைப் பெருநிலத்தில்
வீறுகொண் டெட்டுத் திசைகளுந் தன்பேர் விளக்கிநிற்கும் 16
மாறிலாக் காளி மனம்வைத்தால் துன்பம் மறைந்திடுமே

பேயு மடங்கும் பிசாசு மடங்கும் பெருஞ்சுடலை
வாயிற் கிடக்கும் வகையற்ற மாடனும் வந்தடங்கும்
பாயும் முனியும் பிணந்தின்னுங் கூளியும் பாய்ந்தடங்கும் 17
நோயு மடங்குமே பத்திர காளிமுன் நோற்றவர்க்கே

கற்றாருங் கல்லாத பேர்களுங் கையேந்திக் காளியென்றால்
எற்பூர்ந்து நிற்பாள் இதயத்தில் ஏறிநின் றின்பளிப்பாள்
கற்பூர தீபத்தின் கண்ணின்று யாவர்க்குங் காட்டிடுவாள்
சொற்கோண மாமலை யின்சோதி கண்டீர்யான் சொல்லரிதே 18

பத்திர காளியின் பாதச் சிலம்பொலி பட்டிடவே
வித்தகர் தம்முடன் விஞ்ஞையர் யாவரும் வீணையினை
வைத்தடி போற்றி வணங்குதல் கண்டுயர் வானவர்கள்
இத்தரை மீதில் இறங்கினர் தாயை இறைஞ்சினரே 19

வேப்பங் குழைக்கொத்தும் வெள்ளிப் பிரம்பும் விளங்குகையில்
காப்பு மணிந்து கடைக்காற் சிலம்பு கலகலென
மூப்பும்பிணியு முடையார் பணிந்து முறையிடுவார்
கூப்பிட் டழைக்கக் குறைதீர்ப்பாள் காளி குலதெய்வமே 20

உள்ளத் திருந்தே உருகவைப் பாள்நம்மை ஊட்டுவிப்பாள்
மெள்ளத் திருத்தி மிடுக்கர் தமைவாட்டி மீட்டெடுப்பாள்
பள்ளத்தில் வீழ்ந்த பறையர் கடைத்தேறப் பாட்டிசைத்தாள்
கள்ளி யெனை ஈர்க்குங் காளி கருணைக் கடைக்கண்களே 21

தினமும் வலம்வந்து தென்கைலை யாளின் திருவடியை
மனதி லிருத்தி மறைந்த பொருள்மீட்க வந்துநிற்பார்
அனையே எடுத்தாரைக் கண்முன்னே காட்டம்மா என்றிரக்கக்
கனவில் வெளிவந்து காட்டுவாள் பத்திர காளிகையே 22

கற்சிலைக் குள்நிற்குங் காளிகா தேவி கனவினிலே
அற்புத மாய்த் தோன்றும் அம்பிகையே கோணையம் பதியோர்
நற்றவத் தின்சான்றே ஞானக் கொழுந்தே நளிர்கமலப்
பெற்கொடி யேபுரம் மூன்றும் எரித்தவளே போற்றிபோற்றி 23

மாதர் குலம் போற்றும் மாதே மனைவாழ்வே மறையவர்கள்
ஓதுகின்ற வேதத்தின் உட்பொரு ளாய்நின் றுணர்வித்துப்
பேத மகற்றும் பெருமாட்டி ஏழை எளியவர்கள்
காதலிக் குங்கற் பகமேயென் கறைநீக்குங் காளித்தாயே 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகை கௌரி அமிர்த வசனி அழகுவல்லி
உம்பர் தொழு நாயகி உமாபிராட்டி உதயசோதி
செம்பவளப் பெம்மான் சேரும் பெருமாட்டி செந்தமிழ்
கம்பத்தில் நிற்குங் கழைக்கூத்தர் வாழ்த்துங் காளிகையே 25

படையை வளர்க்கும் பணியன்றி வேறோர் பணியறியா
மடையர் பெருகிக் களித்து விளையாடும் மாநிலத்தில்
அடையும் பயனேது முண்டு கொலோவுன் அடிபணியுங்
கடையர் தமக்கு மருள்கூரும் பத்திர காளிகையே 26

ஏறும் விலையும் இறங்காதோ இந்த இழி நிலத்தில்
நாறும் பொருள்களும் நல்ல விலைகொள நாடிடுவார்
கூறுந் தரும நெறிகொள்ளார் கொள்ளை அடித்திடுவார்
தேறும் விதியில்லையோ சொல்லாய் பத்திர காளிகையே 27

ஆட்டிப் படைக்கு மதிகாரப் பேய்பிடித் தாடுகின்றார்
போட்டி பொறாமையால் பூசலிடு கின்றாரிப் பூதலமும்
வாட்டி வதைக்குமிவ் வல்லாளர் கைப்பட்ட வாசியினால்
ஊட்ட மிழந்து கலங்குதே பத்திர காளிகையே 28

பொல்லாப் பகைஞர் புரண்டோட முன்னர் புரமெரித்த
வில்லால் அடித்து விரட்டித் துரத்தும் விறலுடையாள்
மல்லாடுந் தோளாள் மகிஷா சுரனின் வலியடங்கப்
பல்லா யிரங்கைப் படைகொண்ட பத்திர காளிகையே 29

ஏடுஞ் செபமா லையுந்திருக் கைகளி லேந்திமலர்
சூடும் முடியும் முகத்தா மரையுந் துலங்கியிடக்
கூடு மடியார் குழாம்வாழ்த்த என்றன் குறையகலக்
காடும் மலையுங் கடந்து வருங்கன்னி காளிகையே 30

பொங்கிப் படைத்துணைப் போற்றிப் பணிபவர் புரிதொழிலில்
பங்கம் வராமற் கடைக்கண் செலுத்தும் பராபரையே
சங்கத் திருந்து தமிழாய்ந்த பெம்மான் சடாமுடியில்
கங்கை யணிந்தான் பெருமாட்டி பத்திர காளிகையே 31

பாரும் விசும்பும் பரவித் துதிக்கும் பதாம்புயத்தின்
சீருஞ் சிறப்பு மறியாத மூடர் செருக்கடங்கத்
தேரி லிவர்ந்து திரிபுரம் மாயச் சிரித்தவளே
சேருமடியார் தமைக் காக்கும் பத்திர காளிகையே 32

ஆயுதந் தாங்கி அநியாயஞ் செய்யு மரக்கரினால்
மாயிரு ஞாலம் கொலைக்கள மாயின்று மாறுதம்மா
தீயினும் வெய்யவித் தீவினையாளர் திருந்துதற்கு
நீயுளம் வைத்திடில் காணுமே பத்திர காளிகையே 33

அஞ்சிப் பயந்தே அடிமையாய் வாழும் அவலமெலாம்
பஞ்சிற் பொறிபட்ட வாபோல் நொடியிற் பறந்திடுமே
தஞ்ச மடைந்தாரைத் தாங்கும் பெருமாட்டி தாழ்ந்தவர்தம்
நெஞ்சுக் குரமூட்டும் நின்பார்வை பத்திர காளிகையே 34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவி யுடுத்தாலுங் காட்டிற் றிரிந்தாலுங் கால்நடையில்
கோவிற் றலங்கள் தரிசித்து வந்தாலும் கூடிநின்று
பூவிலே யாலர்ச்சித் தாலுமென் யாவையும் போலியன்றே
தேவியுனக் கன்புசெய் யாராகில் பத்திர காளிகையே 35

கும்பா பிடேகப் பெருமாட்டி தென்கைலைக் கோணமலை
அம்பாள் திருமேனிக் கெண்ணெய்க் காப்பிட்ட அன்புடையார்
தம்பாதந் தொட்டுத் தொழுதாலும் போதுமே தாழ்வினைகள்
நம்பா லணுகா வகைசெய்யும் காளி நயனங்களே 36

உலகளந் தானோடு கூடிப் பிறந்தநல் லுத்தமியைக்
குலமாதைக் கோண சலத்தோர் புகழ்ந்தேத்துங் கோமளத்தை
மலர்மாலை சூடித் தினமு மடியார் மகிழுமருட்
சிலைமாதைப் பத்திர காளியைச் சேர்வார்க் கிடரிலையே 37

கோணப் பொருப்பில் குடிகொண்ட காளியைக் கோமளத்தைக்
காணப் பெற்றார்வேறென் றும்வேண்டுவரோ கவினுலகம்
மாணப் படைத்தானும் மாலும் அறியா மலைமகளின்
பூணில் அணியில் புதையுண்டு நிற்பர் புலனழிந்தே 38

தீராப் பிணியாவுந் தீர் ந்திடு வாள்வெய்ய தீவினைகள்
வாராமல் வந்தெம்மைக் காத்திடு வாளெங்கள் வாழ்வினிலே
போராடு மைம்புலக் கொற்ற மடங்கப் பொசுக்கிடுவாள்
சீராரும் பத்திரகாளிப் பெருமாட்டி செய்திறமே 39

அஞ்சா ரெவர்க்கு மடிபணி யார்வே தனையுடையார்
கெஞ்சார் பசித்தாலும் கேளார் கிறுங்காரெக் கேடுறினு
மஞ்சார் திருக்கோண மாமலை வாழ்மக்கள் மாந்திநிதம்
நெஞ்சாரக் கொண்டாடுங் காளி யருள்பெற்ற நித்தியரே 40

நீரும் நெருப்பும் நிலனும் வளியும் நெடுவிசும்பும்
ஊருஞ் சுடரும் உயிரும் உடம்பும் உறுபுலன்கள்
சேரு மிடங்க ளடங்கலுமெங்குஞ் செறிந்து நிற்பள்
ஆரும் அறியார்காண் பத்திர காளியின் ஆற்றலையே 41

பாலாற் சொரிந்து குடமுழுக் காட்டும் பராபரையுன்
காலால் மிதியுண்ட காரணத் தால்நெற்றிக் கண்ணுடையோன்
மேலாய் விளங்கும் பெருமையும் பெற்றான் மிதிபிறையோன்
ஏலாதே காளியுன் பாதப் பெருமை இயம்புதற்கே 42

நித்திய வாழ்வில் நினைப்பவர் நெஞ்சில் நிலைப்பவளைப்
பத்திர காளியைப் பார்முத லண்டம் படைத்தவளை
வித்தகி யாள்தனை வேள்விக் குமுதல் வியைவெளியில்
நர்த்தனஞ் செய்திடும் நாயகி யைநெஞ்சில் நாடுமினோ 43

தித்திக்க முன்நாமம் என்னாவி லேற்றித் துதித்திடுவேன்
முத்திப் பொருளே முதலந்த மில்லா முதியவளே
சித்த மடங்கிச் சிவத்யானஞ் செய்வார் சிரோமணியே
பக்தர்க் கினிய பராசக்தி பத்திர காளிகையே 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்புங் கரங்கொண் டுனைப்போற்றுஞ் செய்கை குறைபடாமல்
மூப்பும் பிணியு மெனைவந்து தாக்கமுன் முன்னருள்வாய்
நாப்பண் ணிசைக்கு மடியார் நடுவுள் நயந்திருக்கும்
காப்பே கருணைப் பெருமாட்டி பத்திர காளிகையே 45

ஆக்கும் பெருமாட்டி அன்னை யபிராமி அந்தணர்தம்
தீக்குள் விளங்குஞ் செழுஞ்சோதி வேதத் திருமறையின்
வாக்கில் விளங்கும் வடிவே வினையின் வலியழிய
நோக்குங் கருணை நயனத்தி பத்திர காளிகையே 46

பாயும் மனமும் அடங்கிப் பணியும் படையுடையாள்
நோயும் பிணியும் நொடியில் அகற்றும் நுதல்விழியாள்
வாயிலும் நெஞ்சிலும் வந்திருப் பாள்வாக்கு வாகினியாள்
காயத் திரியில் களித்தாடும் பத்திர காளிகையே 47

மெய்யாய் விளங்கும் விழுப்பொருளே யுனை வேண்டித்தவஞ்
செய்யா தவனன்பர் கூட்டஞ்சே ராதவன் சிந்தையுள்ளே
வையா தவனுனை வாழ்த்தா தவனென்செய் வானவனைக்
கையா லணைக்கா விடிலம்மா பத்திர காளிகையே 48

நாவிற் கிடந்து தவழ்ந்து புரண்டு நடைபயிலும்
தேவிக் கிணையான தெய்வமுண் டோதினந் தேடிவந்த
பாவிக் கிரங்கிப் பரிந்தரு ளாயோ பனிமலர்ப்பூங்
காவிக் கருங்கண்ணி காமாட்சி பத்திர காளிகையே 49

அல்லும் பகலும் அருள்செய்வாள் நாவில் அணியணியாய்ச்
சொல்லும் பொருளுந் தருவாள் சுருதிச் சுடரொளியாள்
நெல்லுந் தருவாள் நிலமுந் தருவாள் நினைந்தவர்க்கே
கல்லுங் கரையக் கனிவிப்பாள் பத்திர காளிகையே 50

ஆடும் பெருமான் அழகில் களித்தாடும் ஆரணங்கே
தேடு மடியார்தம் முள்ளத்தில் தித்திக்குந் தெள்ளமுதே
வாடும் பயிர்நோக்கும் வான்முகி லேசிங்க வாகனத்தி
காடு மதிர்ந்திடக் கர்ச்சிக்கும் பத்திர காளிகையே 51

விடமார் அரவும் பிறையும் விளங்குஞ்செவ் வேணியனின்
இடமார்செம் பாகத் திருப்பாளென் னுவிலும் வந்திருப்பாள்
திடமாருளமுந் தருவாள் தெளிஞானக் கண்திறப்பாள்
கடல்சூழ் திருக்கோண மாமலைப் பத்திர காளிகையே 52

அறிவுந் திருவும் அழகுங் குணமுமருள்நலமும்
பெறுதற் கரிய பெருவாழ்வுமன்பர் பெருநிலையும்
திறமுந் தருஞ்சித்தி யெல்லாந் தருமே தொழுதெழுவார்
கறைநீக்குங் கண்ணுடை யாள்கன்னி காளிகையே 53

நாளும் பொழுதும் நறுமலர் மாலை நயந்தணிவார்
கோளும் பிணியும் கொடுந்தீ வினையின் குறைபலவும்
தூளும் பொடியுமாய்த் தூற்றிடுவாளெங்கள் தொல்லைநகர்க்
காளி யபிராமி காணெங்கள் பத்திர காளிகையே 54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலு மயனும் மழுதுமன் றுடத்தன் மார்பு விம்மிப்
பாலுங் கொடுத்துப் பசுந்தோகை மீதேற்றிப் பங்கயப்பூங்
காலிற் சுழல்பூட்டி வெஞ்சூர்கண்டஞ்சக் களம் விடுத்தே
பாலன் திறங்கண்டு பூரித்த பத்திர காளிகையே 55

அச்ச மகற்றி அடியாரைக் காக்குங்கை யாயிரமும்
பச்சைத் திருமேனிப் பட்டொளியும் பாதப் பண்சிலம்பும்
உச்சித் திலகமும் கொவ்வை யிதழும் உடையமணிக்
கச்சைப் பறிக்குங் கலசத்தாள் பத்திர காளிகையே 56

தடையேது முண்டோ தமியேற் கருளத் தளர்ந்துநிற்கும்
அடியாரைத் தாங்கி யணைக்குமரசி அடைந்தவரைக்
கொடையால் உயர்த்துங் குலமாதே கூற்றின் குலம்நடுங்கப்
படையேந்துங் கொற்றவை யேசக்தி பத்திர காளிகையே 57

அள்ளிக் கொடுப்பாள் அடியார் மிடிகள் அகன்றிடவே
துள்ளிக் குதிப்பாள் பகைஞர் நடுங்கத் துடியடிப்பாள்
வெள்ளிப் பிரம்பை விசுக்குவாள் சூலத்தை வீசிநிற்பாள்
கள்ளக் கபடர் வெருண்டோடப் பத்திர காளிகையே 58

தஞ்ச மடைந்தாரைத் தாங்குந் திருப்பாதம் தாகமுறும்
நெஞ்சங் கனிய நினைவில் நடமாடும் நீள்கழல்கள்
செஞ்சொல் மலர்தூவிச் சேவிப்பார் போற்றுஞ் சிவந்தமலர்க்
கஞ்சமுடையாள் எமைக்காக்கும் பத்திர காளிகையே 59

சேலார் நெடுங்கண்ணி செந்தமிழ்ப் பாவை சிதம்பரத்தின்
மேலாய் விளங்குஞ் சிவசக்தி மேவார் புரமெரித்த
ஆலால கண்டன் அழியா திருக்க அருள்நயனி
காலா யுதக்கட வுள்போற்றும் பத்திர காளிகையே 60

தாமதி யாமல் வரந்தரு வாள்பெற்ற தாயனையாள்
ஊமைகளும் வாய் திறந்துரையாட உவந் தளிப்பாள்
சாமளை யாளுமை சச்சிதா னந்தி சமர்புரிந்த
காமனைக் கண்ணால் எரித்திடும் பத்திர காளிகையே 61

ஒன்றாய்ப் பலவாய் உயிராய்ச் சடமாய் உலகமெலாம்
நின்றாள் பராசக்தி நீலி திரிசூலி நீறணிந்தே
மன்றாடும் ஈசன் மனையாட்டி விம்மும் மடிசுரந்து
கன்றார வூட்டுங் கறவையாள் பத்திர காளிகையே 62

புவனை பகவதீ பூரணி பொய்யர் புரமெரித்த
சிவபரை மாரி சியாமளை சாமுண்டி சித்திதரும்
நவயுகத் தாள்சக்தி நாயகி நாரா யணிநளினி
கவுரி சுமங்கலி காமாட்சி பத்திர காளிகையே 63

ஆக்கி உலகின் அசுரத் தனத்தை அழித் தொழித்துக்
காக்கும் பராசக்தி காமாட்சி முக்கண்ணி கண்சிவந்து
நோக்கின் வினைகள் தடம்புரண்டோடும் நொடியினிலே
பார்க்குள் விளங்கும் பரஞ்சோதி பத்திர காளிகையே 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்து நினைப்பார் இழைகட்டி நிற்பார் நினைந்தபடி
ஈந்து மகிழும் இதயத்தாள் ஈயா விழிகுலத்து
மாந்தர்க் கிடருந் தடையும் வழியில் மலியவைப்பாள்
காந்தம்போ லீர்க்குங் கலைகொண்டாள் பத்திர காளிகையே 65

பாவம் பொடிபடப் பார்க்குங் கருணைப் பராபரையாள்
தேவர் குலத்துத் திருமாதர் போற்றுந் திருப்பதத்தாள்
பூவை யபிராமி பொற்பாவை நின்று பொருமுகத்தில்
காவல் செயுஞ்சக்தி காமாட்சி பத்திர காளிகையே 66

வெப்பால் விழையும் பிணிகள் விலகிட வேண்டிநின்று
கர்ப்பூரங் காட்டிக் கரங்கூப்பு வார்வாழ்த்துங் கற்பகமே
ஒப்பாரு மில்லாப் பெருமாட்டி ஓங்காரி ஓங்குசுடர்க்
கப்பாலும் நிற்கும் அருட்சோதி பத்திர காளிகையே 67

கல்லா தவருங் கரங்கூப்பி உள்ளங் கசிந்துருகிப்
பல்லா யிரங்கோடி நாமங்கள் கூறிப் பரிந்தழைத்தால்
நில்லாள் கருணைப் பெருமாட்டி முன்வந்து நின்றிடுவாள்
வல்லாள் அபிராமி காமாட்சி பத்திர காளிகையே 68

வாட்டுந் துயரம் பலகோடி வைத்து வழிமறித்தே
மீட்டிங் கெடுக்க நினைத்தாலும் வெய்ய விதிவழியே
ஓட்டங் கொடுக்கு முளத்தை உடையாறுக் குள்ளொளியைக்
காட்டுங் கருணைக் கதிரன்றே பத்திர காளிகையே 69

வாணாள் முழுதும் வணங்கும் படியென்னை வைத்துவிட்டால்
வீணாள் கழிக்கும் வினையேனை வாட்டும் விதியிலையே
கோணா மலையின் குலதெய் வமாய் வந்த கோமளமே
காணாதவரும் கடைத்தேறக் கண்வைப்பாள் பத்திர காளிகையே 70

கூண்டி லடைத்துக் குவலயத் தில்வாழக் கோடிவைத்தாய்
மாண்டு மடியவோர் எல்லையும் முன்னே வரைந்துவைத்தாய்
தூண்டு முனைச்சேரத் தொல்லை களும்வைத்தாய் தொல்வினையேன்
காண்டற்குத் தண்ணளியும் வைத்தாய் பத்திர காளிகையே 71

ஓடித் திரியும் உழலும் அலையு முலகமெலாந்
தேடித் திரியும் மனத்தை யுனது திருப்பதத்தில்
கூடிப் பதியக் குவியத் திருவுளங் கூடிவிட்டால்
பாடிப் பணியும் உனைநாளும் பத்திர காளிகையே 72

ஆடேன் அகங்குழைந் துன்பால் உருகு மன்புகொண்டு
கூடேன் கொடுவினை சூழக் கிடந்தேன் குறையிரந்து
பாடேன் பணியேன்என் செய்வேன் எளியேன் பசியகுழற்
காடேந்துஞ் சென்னி யுடையாளே பத்திர காளிகையே 73

பாராளும் மன்னரும் பாவலரும் வந்து பாட்டிசைக்குஞ்
சீரார் அரவிந்தச் சேவடி யாளன்பர் சிந்தையிலே
நேராகத் தோன்றி நிலையான முத்தி நிலையளிப்பாள்
காரார் குழற்கண்ணி காமாட்சி பத்திர காளிகையே 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுண்டு கூடிக்குடித்து மகிழ்ந்தாடும் கூட்டமுண்டு
விடியும் வரையும் விழுந்து கிடந்துபின் விட்டெழுந்தால்
கடியும் விலைமாதர் காமச் சுவையின் களியுமுண்டே
படியில்லா னுய்யக் கதியுண்டோ பத்திர காளிகையே 75

பீடையுந் தீராப் பிணியும் பெருந் தொல்லைப் பீதிகளும்
நீடிய பஞ்சத்தில் ஆழ்த்தி வருத்தும் நெடுந்துயரும்
பாடுபட் டுழைப்பார் பணத்தைப் பறிக்கும் பயங்கரமும்
காடையரு மோடக் கசை கொள்வாள் பத்திர காளிகையே 76

சாதிப் பிரிவும் சமயப் பிரிவுஞ் சடைத்தெழுந்த
வாதக் களத்தில் வளரும் பலகட்சி வாதிகளின்
பேதப் பிரிவும் பிணக்கை வளர்க்கும் பிறபிரிவும்
மோதிக் குலைத்திட்டால் வாழ்வெங்கே பத்திர காளிகையே 77

எல்லா வுயிர்களும் ஈடேறுங் காலந்தான் என்றுளதோ
நல்லாய் அது வரையும்நான் பிறந்து நலிந்தவர்க்குப்
பல்லா யிரந்தொண்டு பாரினிற் செய்யப் பணித்தருள்வாய்
வல்லாய் சிவசத்தி காமாட்சி பத்திர காளிகையே. 78

இரக்கஞ் சிறிதின்றி ஈயும் மனமின்றி யிவ்வுலகம்
அரக்கர் செயல்மிஞ்சி ஆதிக்கப் பேய்பிடித் தாடுதம்மா
பரத்தை மறந்து கொடும்பாவங் கள்செய்யும் பாதகருன்
உரத்தை அறிய வுளங்கொள்வாய் பத்திர காளிகையே. 79

காவி யுடுத்தாலுங் காட்டிற் கிடந்து கடுந்தவத்தால்
ஆவியிளைத்தாலும் ஆருமே காணல் அரிதரிதே
பாவிக ளானாலும் பாதத்தில் வீழ்ந்து பணிந்துநின்றால்
தாவி யணைப்பளே தன்கையால் பத்திர காளிகையே. 80

தியானிப் பார்நெஞ்சில் தேனூகித் தித்திக்குந் தெள்ளமுதே
தயாநிதி யேயுனைத் தஞ்ச மடைந்தாரைத் தாழவிடல்
நியாயமோ நீதியோ நேர்மையோ சொல்லம்மா நீலகண்டி
சியாமளை யேசிவை யேசக்தீ பத்திர காளிகையே. 81

அணையாது நித்தம் அடித்திட்டார் தம்பால் அணுகுவரோ
துணையாரு மில்லார்க்கு நீயன்றி வேறோர் துணையுளதோ
இணையாரு மில்லாப் பெருமாட்டி மாறிட்ட ஏதிலரைக்
கணையால் அழித்திட்ட காமாட்சி பத்திர காளிகையே 82

காராகி விண்ணில் கறுத்தெழுந் தெங்குங் கலகலென
நீராய்ச் சொரிந்து நிலத்தைக் குளிர்விக்கும் நின்னருளை
ஏராளர் கூடி எழில்மாரித் தாயென் றிறைஞ்சிநிற்பர்
பாராகி விண்ணாகிப் பாலிக்கும் பத்திர காளிகையே 83

கொலையே புரியுங் குணக்கேடர் கயவர் குலம்நடுங்கச்
சிலையேவுங் கொற்றவை யாள்நெற்றிக் கண்சிவந் தால்நிலத்தில்
நிலையார் பகைவர் நெடுந்தூரஞ் சென்று நிலைகுலைவர்
கலைகோடி வீசுந்தாய் காமாட்சி பத்திர காளிகையே. 84

183626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடும் மலேயுங் களமாய்க் கணஞ்சூழுங் காரிருட்டில்
ஆடும் பெருமாட்டி அண்டங் குலுங்க அயன்திருமால்
தேடும் பெருமான் ஒருபாகங் கொண்டாய் தினமுமுனேப்
பாடும் பணியில் எனேவைப்பாய் பத்திர காளிகையே. 85

மதத்தால் பிரிந்து மலேவுற்று மோதும் மனிதகுலத்
துதித்தார் ஒருமித்து வாழும் உறவின் உயர்நலத்தை
மதித்தால் உலகம் மறவழியிற் சென்று மாய்ந்திடுமே
கதித்தாடுஞ் சாமுண்டி காமாட்சி பத்திர காளிகையே. 86

அஞ்சாத நெஞ்சும் அயரா துழைக்கும் அருந்திறமும்
நெஞ்சார வாழ்த்தும் பெருநிலேயும் ஈயா நீசரிடம்
கெஞ்சாத வாழ்வுங் கிறுங்காத நேர்மையுங் கேட்டுநின்றேன்
பஞ்சாட் சரத்தில் ஒளிவீசும் பத்திர காளிகையே. 87

மாலும் அயனும் மகிழ்ந்தாட ஆடும் மலர்ப்பதத்தாள்
வேலும் மயிலும் உடையானேப் பெற்ற விறலுடையாள்
காலும் விசும்புங் கதிரும் ஒளியுமாய்க் காட்டிநிற்பாள்
பாலுந் தெளிதேனும் பாலிப்பாள் பத்திர காளிகையே. 88

பாதஞ் சிவக்கப் பரத்தில் நடமாடும் பார்வதியாள்
பூதம் புடைசூழப் போர்க்கோலம் பூண்டு புரமெரித்தாள்
சாதந் தருமன்ன பூரணியா ளின்பத் தாரணியாள்
ஏதங் கெடுத்தாளுங் காமாட்சி பத்திர காளிகையே. 89

ஆதித் தமிழ்நாட்டின் அன்னே தமிழ்த்தெய்வம் ஆகமத்தை
ஓதி யுணர்ந்த உரவோர் முதற்கண்ட உண்மையவள்
பேதித்து நம்மை வளர்த்தெடுக் கும்பெருமாட்டி பொய்யை
ஊதித் துடைத்துக் களித்தாடும் பத்திர காளிகையே. 90

துர்க்கையாய் வந்து துயரங்கள் போக்குந் துடியிடையாள்
தக்கன் தலேயினே வீழ்த்திய மொய்ம்புயத் தானேயினுள்
சக்கரத் துள்நிற்குஞ் சக்திப் பிழம்பாகுஞ் சாம்பவியாள்
திக்கெலாம் ஆளுந் திகம்பரி பத்திர காளிகையே. 91

பாலேப் பொழியும் பசுவாய்ப் பிறந்தாலும் பால்கறப்பர்
சோலேக் கிளியாய்ப் பிறந்தாலும் எங்குஞ் சுதந்திரமாம்
ஓலேக் குடிலிற் பிறந்தார் தமக்கிங் கொளியுமுண்டோ
வாலேக் குமரியே வாராகி பத்திர காளிகையே. 92

கொடுப்பாருக்கொன்றுங் குறைவில்லே என்னுமிக் கொள்கைகடைப்
பிடிப்பாரைக் காண்ப தரிதம்மா இந்தப் பெருநிலத்தில்
தடுத்தாளுந் தாயென்றுன் பாதத் திலேதலே தாழ்த்திநின்றேன்
கடத்தாது வந்தென்னேக் காத்தருள் பத்திர காளிகையே. 93

காட்டு மிருகக் குணமின்னும் மாருக் கடைநிலேயில்
நீட்டி நிமிர்ந்த மிருகமாய் வாழ்கின்ருன் நீள்நிலத்தில்
போட்டி பொருமை கபடம்பொய் ஒன்றுமே போகவில்லே
மீட்டிங் கிவனே யெடுக்காயோ பத்திர காளிகையே. 94

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனையென்றும் மாடென்றும் வீடென்றும் மண்ணுலகில்
சிக்கி யலைகின்றான் செத்து மடிகின்றான் சீரழிந்தே
மிக்க பொருள்தேடி மீளாத ஆசையில் மின்னுகின்றான்
தக்கபடி வாழான் என்செய்வான் பத்திர காளிகையே. 95

வீட்டை யமைத்து விளக்கேற்றி வைத்தெங்கும் வீதிகளால்
பாட்டை யமைத்துப்பண் பாடு விளங்கப் பணிபுரிந்தான்
நாட்டை யழிக்கும் நரசிங்க மாய்மாறி நலிவுசெய்யுங்
கேட்டை யழிக்காயோ காமாட்சி பத்திர காளிகையே. 96

கல்லுஞ் சிலையாய்க் கடவுளாய் மாறுங் கலைவடிவில்
எல்லாந் தரவல்ல சக்தியாய்க் காட்சிக் கெளியவளாய்
பல்லா யிரம்பேர் பரவும் பரமாய்ப் பராபரையாய்
வல்லபை யாய்நின்றாய் காமாட்சி பத்திர காளிகையே. 97

காளி யருளுண்டேல் கண்ணில் ஒளியுண்டாம் கஞ்சமலர்த்
தாளி னருளுண்டேல் தானியப் பேறுண்டாம் தங்கமுண்டாம்
கோளின் குறைநீங்கிக் கொற்றமுண் டாம்நற் குணமுமுண்டாம்
வாளி பிடித்திட்ட வல்லபை நாமத்தில் வாழுமினே. 98

கனவில் அவள்செய்யுங் காரியம் ஒன்றல்லக் கண்ணுறங்காள்
தினமும் அவள்போகுந் தேசம் பலவாகுந் தேடிச்செல்வாள்
மனதில் விளையாடும் மாதா அவளேகாண் மாமலையாம்
புனித பதியாளைப் பத்திர காளியைப் போற்றுதுமே. 99

கோடிப்பொன் கொண்டாரும் உன்பால் அணுகிக் குறையிரப்பர்
வாடிக் கிடந்து வரங்கேட்பர் அன்னார் வருத்தமெலாம்
தேடிப் பிடித்துத் திருத்தி வழிகாட்டுந்தேவி மன்றுள்
ஆடித் திகழும் அருட்காளி உன்தாள் அடைக்கலமே. 100

சுபம்

UNIVERSITY OF JAFFNA LIBRARY

உ

## காளி கவிமாலை பிறந்த விதம்........

"காளி கவிமாலை" என்னுடைய பாடல்கள் என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. நான் கருவி மாத்திரமே. பத்திரகாளி அம்பாள்மீது நான் கொண்டிருக்கும் அளவுகடந்த காதலே இப்பாடல் தோன்றுவதற்குக் காரணமாகும்.

அம்பாளிடத்து நான் வைத்திருக்குங் காதல் பாட்டாக உரு வெடுப்பதற்குக் காரணமாக இருந்தவர் ஐயா அவர்கள். அவர் வேறு யாருமல்லர், திருக்கோணமலை பத்திரகாளி அம்பாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தான ஆதீனகர்த்தாவும் காளிஉபாசகருமாகிய பிரம்மஸ்ரீ சு. கு. சோமாஸ்கந்த ஐயர் அவர்களே. ஐயா அவர்களும், அவர் மைந்தன் என் அன்புக்குரிய மாணவன் பிரம்மஸ்ரீ சோ. ரவிச் சந்திரன் அவர்களும்தான் இக் ''காளி கவிமாலை'' நிறைவேறு வதற்கு என்னைக் காணும்போதெல்லாம் தூண்டி நின்று ஊக்கம் அளித்தவர்கள் ஆவர். அவர்களை நான் ஒருபோதும் மறக்க முடியாதபடி அவர்கள் என்னுள்ளத்தில் இடம்பெற்றுவிட்டார் கள். அவர்களுக்கு என் ஆழ்ந்த நன்றி.

இப்பாடல்கள் சித்தார்த்தி வருடம் தை மாதம் 23-ம்நாள் (6-2-80) அருண்மிகு பத்திரகாளி அம்பாள் புனராவர்த்தன சம் புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தபோது நிறைவெய்தியது.

கும்பாபிடேக மலரில் இக்''காளி கவிமாலை''யை வெளியிட ஐயா அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டார்கள்.

நாம்மட்டும் அம்பாளைப் பாடித்துதித்தால் போதுமா? திருக்கோணமலைக்கு வெளியில் உள்ளவர்களும் அம்பாளை அனு தினமும் பாடித்துதிப்பதற்கு ஐயா அவர்கள் பெருவாய்ப்பை ஏற்படுத்தி விட்டார்கள். அவர்களுக்கு மீண்டும் நன்றி செலுத்து கின்றேன்.

இக்''காளி கவிமாலை''யில் நூறு பாடல்கள் உள்ளன. முழு வதும் கட்டளைக் கலித்துறை யாப்பில் அமைந்தவை. கவிதை யாவும் அம்பாள் புகழ் பேசுபவை. பாடிவந்தால் உள்ளந் தூய்மையாகி தேவி உறையும் வாசஸ்தல மாகிவிடும். உங்களால் முடிந்த அளவுக்கு ஒன்றையோ, பலவற்றையோ அல்லது முழு வதையுமோ மனப்பாடம் ஆக்கி வைத்துக்கொள்ளுங்கள். நினைவு வரும்போதெல்லாம் பாடி மகிழுங்கள் அதுவே போதும்.

பெ. பொ. சி.

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றிக்குரலினிலே . . .

★

இதோ உங்கள் கரங்களில் தவழுகின்றது, அம்பாளின் மணங் கமழும் அழகியமலர். இது எனது தனிமுயற்சி மட்டுமல்ல; பல அன்பர்களின் பரோபகாரச் சிந்தையும் இதில் கலந்துள்ளது.

இம்மலர் வெளிவருவதற்குக் காரண கர்த்தர்களாய் இருந்த புண்ணிய சிலர்களுக்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்தருள்வாள்.

இம் மலருக்கு ஆசியுரை வழங்கிய தபோதனர்களுக்கும் பெரியோர்களுக்கும், கட்டுரை, கவிதை நல்கிய பிராமணோத்தமர்களுக்கும் பேரறிஞர்கட்கும், இம்மலருக்கு வேண்டிய புகைப் படங்களை எடுத்துதவிய விஜயா ஸ்ரூடியோ அதிபருக்கும், ஸ்ரூடியோ அன்பர்களுக்கும், இம்மலருக்கு வேண்டிய புளக்குகளைச் சிறந்த முறையில் செய்துதந்த யாழ்ப்பாணம் ஞானம்ஸ் ஸ்ரூடியோ ஸ்தாபனத்தாருக்கும், இம்மலரைச் சிறப்புற அச்சேற்றித்தந்த சாந்தி அச்சகத்தின் அதிபருக்கும், அங்கு பணியாற்றும் அன்பர்களுக்கும், என் உளங்கனிந்த நன்றி.

முக்கியமாக மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற வேண்டி இரவு பகல் என்று பாராது கண்விழித்திருந்து அல்லும் பகலும் அயராது உழைத்து வந்த பெருமக்கள் யார் யார் என்பது உங்கள் அனைவருக்குந் தெரியும். என் அன்புக்குரிய அப் பெருமக்கள் அனைவர்க்கும் கோயிற் செலவில் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டிட வேலைகட்கும் கும்பாபிஷேகத்திற்கும் காணிக்கையாகத் தந்துதவிய அன்பர்கட்கும், கட்டிட வேலைகளிலும், கும்பாபிஷேகத் திருப்பணிகளிலும் அல்லும் பகலும் அயராது தொண்டாற்றிய அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சகல சௌபாக்கியங்களையும் கொடுத்தருள வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி!

இங்ஙனம்
சு. கு. சோமாஸ்கந்த ஐயர்
அம்பாள் தேவஸ்தானம்

University of Jaffna
183626
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org